T.D.R. [illegible]
R.R. No. 56[illegible]
Vol II

ക്രിസ്തുവചനങ്ങൾ

DIGITIZED

Q6
N09
11/൧൯൯൭

# CHRISTIAN GIVING.

# கிறிஸ்தவ ஈகை.

568
1909 / III

T.D.R.C. 293
R.R. No. 568. 3.09

"ஈகையுள்ள கிறிஸ்தவன் ஜீவனுள்ள கிறிஸ்தவன்."

MADRAS
M. E. PUBLISHING HOUSE
MOUNT ROAD
1909

# CHRISTIAN GIVING.

# கிறிஸ்தவ ஈகை.

568
1941

ஈகையுள்ள கிறிஸ்தவன் ஜீவனுள்ள கிறிஸ்தவன்."

MADRAS
M. E. PUBLISHING HOUSE
MOUNT ROAD
1900

21 SEP 1909 MADRAS.

## COMMENDATORY NOTICE.

The problem of raising adequate supplies of money amongst Tamil believers for carrying on Christian work is always before us, and in most congregations is still waiting to be solved. Here and there individual believers or churches have practically reached an honourable position in regard to this matter, but they are still far too few. How many Tamil Christians, for instance, are thoroughly persuaded that it is their high privilege and duty to set aside regularly for the Lord a portion of their income? One knows of a few poor farmers who give one-tenth or twentieth of all their crops, but for the most part our village Christians are content to plead poverty and give almost nothing. They *are very* poor and one cannot be hard upon them.

But when the heart is filled with love to the Lord and His work, giving becomes a delight and nothing is too good or too much to lay at His feet. When the Spirit of God so works in the heart that sin becomes the greatest of all evils, the soul's distress drives one to Jesus for deliverance and then one can say "I love the Lord because He hath heard my voice and my supplication." As the awful evil of sin, and the infinite blessedness of salvation from sin through the blood of Jesus become increasingly real to Tamil Christians, so love to the Lord, displaying itself in generous gifts, (as well as in other ways) will increase.

By the writer's kindness I was enabled to go through the MSS. of this book twice while it was in course of

96
N09
2869 11

preparation and I was greatly impressed with a sense of its value and suitability for circulation amongst Christians in South India.

The subject is presented in a thoroughly Scriptural and complete manner and frequently lit up by appropriate stories and illustrations.

The writer has no ulterior purpose to serve and therefore keeps well to his theme—writing from the viewpoint of an orthodox believer.

I think I may venture to say that I feel very confident in commending the book to the kind notice of all workers in the Tamil field, for I am persuaded that it is well calculated to be of great service in promoting the object it is designed for.

SOLAPURAM,
24*th June*, 1909. T. H. MAYNARD.

---

# முகவுரை.

வேத வாசிப்புக்குறைவு, ஜெபக்குறைவு, ஈகைக்குறைவு, இவை பின்வாங்கிப்போன கிறிஸ்தவ ஜீவியத்தின் மூன்று அடையாளங்களாம்.

ஈகைக்குறைவு எங்கேயுண்டோ அங்கே வேத வாசிப்புக்குறைவுமுண்டு. வேத வாசிப்புக்குறைவு எங்கேயுண்டோ அங்கே ஜெபக்குறைவும், ஜீவியக்குறைவுமுண்டு. அதையிட்டே ஈகையில்லாத கிறிஸ்தவன் ஜீவனில்லாத கிறிஸ்தவன் என்கிறோம். ஆதலால் தேவகிருபையினாலே கிறிஸ்து இயேசுவுக்குள் இரட்சிப்பைப் பெற்றுக்கொண்ட விசுவாசிகள் தங்களுடைய உத்திரவாதத்தை உணர்ந்துகொண்டவர்களாக ஜீவிப்பதினால், தேவனை மகிமைப்படுத்தவேண்டுமென்கிற விருப்பத்தோடு விசுவாசத்தில் பெருக விரும்புகிறவர்கள் விசுவாசத்திற்கு ஜீவனான நற்கிரியைகளிலும் அன்பில் பெருக விரும்புகிறவர்கள் அன்புக்கு உயிரான அறநெறியிலும் பெருகும்படி அவர்களைத் தூண்டிவிடுவதே நமது நோக்கம்.

நிழலின் அருமை தெரியவேண்டுமானால் வெயிலின் கொடுமை தெரிந்திருக்கவேண்டியதுபோல, அறத்தின் அருமை தெரியவேண்டுமானால் மறத்தின் கொடுமை தெரிந்திருக்கவேண்டும். ஆகையால் கிறிஸ்தவ ஈகையைக்குறித்து சில வேதவசனங்களை விஸ்தரிப்பதோடு, லோபிகளின் நிர்ப்பாக்கியத்தையும், உதாரத்துவத்தின் பாக்கியத்தையும், நாம் கண்டதும், கேட்டதும், வாசித்ததுமான பல உதாரணங்களை திருஷ்டாந்தங்களையுங்கொண்டு விளக்கிக் காண்பிக்கிறோம். கர்த்தர் இச்சிறு புத்தகத்தை அநேகருக்குப் பிரயோஜனமாக ஆசீர்வதிப்பாராக. உங்களையும் உங்கள் செல்வத்தையும் கர்த்தருக்கும் அவருடைய ஊழியத்திற்கும் ஒப்புக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிற,

கிறிஸ்துவுக்குள் உங்கள் ஊழியன்,

GRACE COTTAGE,
17*th June*, 1907. J. C. ARULAPPEN.

21 SEP 1909

# அட்டவணை.


புக்கம்.

I. கிறிஸ்தவ ஈகை .... .... 1

ஈகைக்குப் பாத்திரர்.

(1) தரித்திரர் .... .... .... .... 2

(2) தேவ ஊழியர் .... .... .... 19

ஈகையின் விதம்.

II. (1) அந்தரங்க ஈகை .... .... .... 33

(2) வஞ்சனையில்லாத அல்லது தாராள ஈகை 36

(3) உற்சாக ஈகை .... .... .... 39

(4) வரவுக்கு அல்லது திராணிக்குத்தக்க ஈகை .... .... .... 43

(5) உதாரத்துவ ஈகை .... .... .... 48

(6) நேர்ச்சை அல்லது பொருத்தனை .... 54

III. கோவில் பொக்கிஷம் .... .... .... 57

IV. ஈகையின் பாக்கியம் .... .... 60

# கிறிஸ்தவ ஈகை.

ஈகை என்பது இரக்கம், கத்தம், தானம், கொடை, உதவி, உபகாரம், சகாயம் எனப் பொருள்படும். அன்பும் தர்மசிந்தையுமே இவை யாவற்றிற்கும் மூலம். கைம்மாறு கருதாத தானமே ஈகை.

இந்தியராகிய நமது தேசத்தார், அன்னதானம் வஸ்திரதானம், சொர்ணதானம், பூதானம், கோதானம், கன்னிகாதானம், ஸ்ரீ தானம் எனப் பலவிதமான தானங்களைக் குறித்துப் பேசிக்கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்ட ஈகைகளைப் பொதுவாய் மூன்று வகுப்பாய்ப் பிரிக்கலாம்.

முதலாவது. நியாயமாய்ச் சம்பாதித்த பொருளை மன உற்சாகத்தோடு பாத்திரமான விஷயத்தில் தாராளமாயும் உதாரத்துவமாயும் கொடுப்பது தலைப்படி ஈகை யென்றும்,

இரண்டாவது. கூன், குருடு, முடவர் முதலிய அங்கவீனருக்கும், எளியவர்களுக்கும் ஈவிரக்கத்துடன் அன்னம், வஸ்திரம், பொருள் கொடுப்பது இடைப்படி ஈகையென்றும்,

மூன்றாவது. சுயநயத்தையும் தற்புகழையும் நாடிக் கொடுப்பது கடைப்படி ஈகையென்றும் சொல்லப்படும்.

கிறிஸ்தவ ஈகையோ இவைகளில் முந்தின இரண்டையும் மாத்திரம் சேர்ந்ததாயும் அவர்கள் ஜீவியத்தோடு நெருங்கின சம்பந்தமுடையதாயுமிருக்கிறது. கிறிஸ்தவ ஜீவியத்தை பெ[illegible]தமாய் ஈகையுள்ள ஜீவியம் அல்லது கடன்பட்டுக் கடன் செலுத்தும் ஜீவியம் என்று சொல்லலாம்.

அளவற்ற கிருபையும் மகிமையும் நிறைந்த பரமபிதாவாகிய தேவனுக்கு முன்பாக ஒவ்வொரு கிறிஸ்தவனின் ஜீவியமும் இப்படியே இருக்கவேண்டும். தேவவசனங்கள் கிறிஸ்தவ ஜீவிய கடமைகளைக் குறித்துத் தெளிவாய் போதிக்கிறபடியாலும் அவை இருதயத்திலும் மனச்சாட்சியிலும் வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கக்கூடியதானபடியினாலும் கிறிஸ்தவ ஈகையைக் குறித்துப் பேசும் சில வசனங்களை இங்கு எடுத்துக் கவனிக்க தேவன் நமக்குக் கிருபை யளிப்பாராக.

## ஈகைக்குப் பாத்திரர்.

வேதாகமங்களில் நாம் வாசித்து அறிகிறபடி ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒருவரிடத்தில் கடன்பட்டவனாகவும், இருவருக்குக் கடனாளி

யாகவுமிருக்கிறான். அதாவது அவன் தன் பரமபிதாவாகிய தேவனிடத்தில், சிருஷ்டிப்பு, மீட்பு, பராமரிப்பு சம்பந்தமாய்க் கடன்பட்டவனாகவும், அதையிட்டு, விசுவாசிகளான ஏழைகள், தேவ ஊழியர் முதலியவர்களுக்குக் கடனாளியாகவுமிருக்கிறான். ஆனால் தேவன் ஒருவனுக்கும் கடன்பட்டவரல்ல.

## I. தரித்திரர்.

“எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குள்ளிருக்கிற தரித்திரருக்காகச் சில பொருள் சகாயம் செய்ய விருப்பங்கொண்டிருக்கிறார்கள். இப்படிச் செய்வது நல்லதென்று எண்ணினார்கள். இப்படிச் செய்வதற்கு அவர்கள் கடனாளிகளாயுமிருக்கிறார்கள்” என்று அப்போஸ்தலனாகிய பவுல் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள கிறிஸ்தவர்களைக் குறித்து எழுதுகிறார். (ரோமர். 15, 26. 27.)

கிறிஸ்தவன், ஏழைகளுக்குப் பொருள் சகாயம் செய்ய விரும்புவதும், அப்படிச் செய்வது நல்லதென்று எண்ணுவதுமட்டுமல்ல, அப்படிச் செய்யக் கடனாளியாயிருக்கிறேனென்று உணர்ந்துகொள்வதே மிகவும் விசேஷம்.

ஏனென்றால், “திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படும் உபத்திரவத்திலே, அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைப்படாதபடி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதும், பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது” என்று தேவ ஆவியானவர் திருவுளம்பற்றியபடி தரித்திரருக்குச் சகாயஞ்செய்யவேண்டியது கிறிஸ்தவ ஜீவியத்தின் கடமைகளிலொன்றாயிருக்கிறது. இது சுவிசேஷக் கட்டளையாக மட்டுமல்ல, நியாயப்பிரமாணமாகவும், தீர்க்கதரிசன போதனையாகவுமிருக்கிறதென்றறிகிறோம். எப்படியென்றால்,—தேவன் தமது ஜனமாகிய இஸ்ரவேலை பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து தமது வல்லமையான கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் மீட்டு தமக்குரிய சொந்தமான ஜனங்களாகத் தெரிந்துகொண்டு, அவர்களுக்குத் தமது கிருபையின் ஐசுவரியத்தின்படியே பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தைச் சுதந்தரமாகக் கொடுத்தபோது, “தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை. ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும், எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்கவேண்டுமென்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்” (உபா. 15, 11.) என்றும், “உன் சகோதரன் தரித்திரப்பட்டு கையிளைத்துப்போனவனானால் அவனை ஆதரிக்கவேண்டும். பரதேசியைப்போலவும், தங்கவந்தவனைப்போலவும் அவன் உன்னோடே



பிழைப்பானாக!” (லேவி. 25, 35.) என்றும்; “நீங்கள் தேசத்தின் பயிரை அறுக்கும்போது உன் வயலின் ஓரத்திலிருக்கிறதைத் தீர அறுக்காமலும், சிந்திக் கிடக்கிறவைகளைப் பொறுக்காமலும், உன் திராட்சத்தோட்டத்தில் பின் அறுப்பை அறுக்காமலும் அதிலே சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும், அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக” (லேவி. 19, 9. 10.) என்றும் கட்டளையிட்டார்.

இவ்விதமாய் ஏழைகள்பேரில் தயை பாராட்டி ஈவிரக்கத்தோடு நடந்துகொள்ள வேண்டிய கர்த்தருடைய ஜனங்கள் தங்கள் கடமையை மறந்து தன் பொன்னராயும், வன்கண்ணராயுமானபோது தேவன் தமது ஊழியராகிய தீர்க்கதரிசிகளைக் கொண்டு அவர்களை எச்சரித்து, “பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களைச் சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரம் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காதிருக்கிறதுமல்லவோ எனக்கு உகந்த உபவாசம்” (ஏசா. 58, 7.) என்று பக்தியுள்ள ஜீவியத்தின் கடமையைச் சுட்டிக்காட்டினார்.

அப்படியிருக்கக் கிறிஸ்தவர்கள் வன்கண்ணரும் லோபிகளுமாய்க் காணப்படுவது எவ்வளவு பரிதாபம்! சிலர் இப்பிரபஞ்சத்தின் மக்களாய் கஞ்சத்தனமாய்ச் செலவிட்டு அநியாய வட்டியினாலும் ஆதாயத்தினாலும் தங்கள் ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறார்கள். பணம், பணம் என்று அலைந்து தேடி தானும் அனுபவியாமல், பிறருக்கும் உதவாமல் சேர்த்துவைப்பதினால் பலன் என்ன? “பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேர்.” ஆகானும், அவன் மனைவி மக்களும் கல்லெறியுண்டு செத்ததும், பிலேயாம் கொடிய ஆபத்[illegible]ளானதும், கேயாசைத் தீராத குஷ்டம் பிடித்ததும், யூதாஸ் அன்புள்ள ஆண்டவரைக் காட்டிக்கொடுத்ததும். எதினாலே? இந்தப் பண ஆசையினாலே அல்லவா?

ஞானக்கண் என்ற ஒருவனுக்கு தேவதாசன் என்ற ஒரு மகனுண்டு. திரண்ட ஆஸ்தியும், ஆடு மாடுகளும், தோப்பு துரவுகளும் அவனுக்கிருந்தன. அவன் லட்ச[illegible]ாய் சம்பத்துள்ளவனாயிருந்தபோதிலும் பண ஆசைக்காரனாயும் [illegible] பிசினியாயுமிருந்தான். ஆகையால் அவன் தன் மகனுக்கு அதிக சீத[illegible]கொண்டுவரக்கூடிய ஒரு பெண்ணைத் தேடி அதிகத் தந்திரமாயும் செட்டாயும் கலியாணம் செய்வித்தான். அவனுடைய மருமகளுக்குக் கிருபை என்று பெயர். அவள் நல்ல குடும்பத்தில் பிறந்து செல்வமாய் வளர்ந்த நற்குணமுள்ள பெண். ஞானக்கண்ணனும் தேவதாசனும் கலியாண முஸ்திப்போடு

பெண் வீட்டுக்குப் போயிருக்கையில், அவனுடைய மனைவி வீட்டில் பணப்பெட்டிகளைக் காத்திருந்தாள். அதை அறிந்த ஒருவன் இரவில் ஒளித்திருந்து அவள் நித்திரையில் அவளைக் கொன்றுபோட்டு பணப்பெட்டிகளில் ஒன்றைத் திருடிக்கொண்டுபோய்விட்டான். இதை ஞானக்கண் கேள்விப்பட்டபோது அவனுக்குண்டான சஞ்சலம் கொஞ்சமல்ல. மனைவி கொலையாய்ப் போனதல்ல, அவன் பணப்பெட்டி பறிபோனதே துயரத்துக்கெல்லாம் காரணம். கிருபை இந்த ஈனனுடைய வீட்டுக்கு வந்தது முதல் அவளுக்குண்டான கஷ்டமும் வியாகுலமும் சொல்லி முடியாது. இவள் மாமியார் இறந்துபோனபடியால் கிருபை வீட்டு வேலைகளெல்லாம் பொறுப்பாய்ப் பார்க்கவேண்டியதாயிருந்தது. இதுவுந்தவிர தோட்டங்களிலுள்ள தென்னை மா, முதலியவைகளுக்குத் தண்ணீர் எடுத்து வார்க்கவேண்டியதுமுண்டு, ஐயோ அந்த ஏழைப்பெண் என்னதான் செய்வாள். ஒருநாள் தன் மாமனிடத்தில் தனக்கு உதவி செய்யும்படி ஒரு வேலைக்காரியை வைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டாள். ஞானக்கண் அது படாது, வேலைக்காரி வைத்தால் அவளுக்குச் சம்பளம் கொடுக்கவேணும், சாப்பாடு கொடுக்கவேணும், வஸ்திரம் கொடுக்கவேணும்; இப்படிக் கொடுப்பதுமட்டுமல்ல, நமது வீட்டிலுள்ள சாமான்களைத் திருடிக்கொண்டு போவாள். நம்முடைய வேலையை நாம்தான் செய்யவேண்டுமென்று படபடப்போடு சொன்னான். கஷ்டத்தைக் கனவிலும் அறியாத கிருபை இதைக் கேட்டு சஞ்சலப்பட்டு, தானே எல்லா வேலைகளையும் செய்து சகிக்கமுடியாத சரீர வேதனையும், மனவேதனையும் அடைந்தாள். கிருபைக்கு வீட்டில் சமையல் வேலை அதிகமில்லை. ஏனென்றால் மற்றவர்கள் வீட்டில் காலைச்சாப்பாட்டுக்குக் காப்பி பலகாரங்கள், உபயோகிக்கிறதுபோல அவன் வீட்டில் உபயோகிக்கிறதில்லை. அந்தத் தனவான் வீட்டில் காலையில் பழஞ்சாதமும் ஊருகாயும், மாலையில் சுடு சாதமும் வெறும் ரசமும் ஏதாவது தொவையல் அல்லது அப்பளமுந்தான் விசேஷித்த ஆகாரம். என்றாலும் வீடுவாசல் சுத்தம் செய்யவும், மாடுகளில் பால் கறக்கவும், மோர் கடையவும், தவசதானியங்களைக் காயவிட்டு எடுத்துப் பத்திரப்படுத்தவும், வீட்டுக்குத் தண்ணீர் எடுக்கவும், தோட்டத்திற்குத் தண்ணீர் எடுக்கவும், மாட்டுக்குப் புல் அறுக்கவும், தான் படும் கஷ்டங்களைக் குறித்து கிருபை தன் புருஷன் தேவதாசனோடு சொல்லி அழுதாள். அவன், என்ன செய்கிறது கிருபை, அந்த மனுஷன் இரக்கமற்றவராயிருக்கிறாரே, உனக்கும் கஷ்டந்தான் என்று சொல்லிவிட்டான். ஆனாலும் மனைவியின் அலட்டினிமித்தம் பள்ளிக்கள்ளன் உபாத்தியாயரிடத்தில் போவதுபோல பயந்து பயந்து தன் தகப்பனிடத்தில் போய்த் தலையைக் கவிழ்ந்துகொ



ண்டும், பெருவிரலால் தரையை உழுதுகொண்டும் தன் மனைவியின் வருத்தத்தைத் தெரிவித்தான். ஞானக்கண் மிகுந்த கோபத்தோடு, அடே! முட்டாள் பயலே, நீயும் ஒருவேலை செய்யாமல் கழுதைபோலத் திரிகிறதுமல்லாமல் உன் மனைவியையும் கழுதையாக்க ஆரம்பித்துவிட்டாயாக்கும். ஒவ்வொருத்தி என்னென்ன வேலைகளெல்லாம் செய்கிறாள், இவளுக்கு இந்த வேலை செய்ய வருத்தமா? இவள்தான் எல்லா வேலையையும் செய்யவேண்டும். போ[illegible]பா, சோம்பேறிப் பயலே என்று ஏசித்துரத்திவிட்டான். கிருபையினுடைய தாயார் ஒருநாள் அவளைப் பார்க்க வந்திருந்தபொழுது அவள் தன் வருத்தமான வேலைகளையும், மாமனுடைய கொடூரத்தையும் குறித்து அவளிடம் சொல்லி அழுதாள். தாயார் அதைப் பற்றிச் சற்று சங்கடப்பட்டபோதிலும் அவள் புருஷன் வீட்டிலிருக்கிற தானிய தவசங்களையும் ஆடுமாடுகளையும், நகைநட்டுகளையும், பணம் பண்டாதிகளையும் பார்த்து, தன் மகள் மாமியாரென்ற ஒரு சாமியாருடைய கொடுங்கோலுக்குள்ளிருந்து வருத்தமடையாமல் சுயாதீனமாய்ச் சகலத்தையும் ஆளுகிறாள் என்கிற தப்பான எண்ணத்தால் அதிகமாய் அனுதாபப்படாமல், மகளே! நீ வெள்ளைப் புத்திக்காரி, இந்த ஏழைப்புத்தி இன்னும் உன்னை விட்டு நீங்கவில்லை. உன் மாமனுக்கு ஒரு வேலைக்காரி வைக்க மனமில்லையானால் உன் புத்தி எங்கேபோனது. நீ சில ஏழைகளை சிநேகப்படுத்தி அவர்களுக்கு ஏதாவது கொடுத்து, வேண்டிய வேலை வாங்கலாமே என்றாள். அப்படியே கிருபை தன் மாமனுக்குத் தெரியாமல் சில ஏழை ஸ்திரீகளைக்கொண்டு தன் வீட்டுவேலைகளையும், தோட்டத்து வேலைகளையும் செய்வித்து அவர்களுக்கு சொற்ப உதவி செய்து வந்தாள். ஒருநாள் ஒரு ஏழை ஸ்திரீ ஒரு ஓலைப்பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு, தன் வீட்டிலிருந்து வெளியில் வருவதைக் கவனித்த ஞானக்கண் ஓடிப்போய், அந்த ஓலைப்பெட்டிக்குள் பார்த்தபோது, அதற்குள்ளே கொஞ்சம் பழஞ்சாதமும் ஒரு ஊருகாய்த்துண்டுமிருந்ததைக் கண்டு, கண் அக்கினிபோல் எறிய, உதடு துடிக்க, பல்லை நெறுநெறென்று கடித்துக்கொண்டு சொல்லி முடியாத கோபத்தோடு, அடி கள்ளி! என் பொருளை ஏன் இப்படித் திருடி என்னைத் தரித்திரனாக்குகிறீர்கள்? என்று குமுறினான். அந்த ஏழை ஸ்திரீ பயந்துகொண்டு "இது திருடினதல்ல, ஐயா உங்க தென்னம்பிள்ளைகளுக்குத் தண்ணீர் எடுத்து வார்த்தேன். அதுக்கு அம்மா இந்தப் பழஞ்சோத்தைத் தந்தா. எனக்குத் தகப்பனில்லாத பிள்ளை மூணு உண்டு. இந்த அதுகளுக்கும் கொடுத்து நானும் சாப்பிடப்போறேன். எனக்குக் களவு கனவிலும் ஆகாது நாயனே" என்றாள். வீட்டுக்குள்ளிருந்து இதைக்கேட்ட கிருபைக்குண்டான பயம் இவ்வள

வென்றில்லை. ஞானக்கண் மகா உக்கிரத்தோடு, கிருபை இங்கேவா,
குடும்பத்திலே கொள்ளி வைக்கவேண்டுமென்றா எண்ணியிருக்கிறாய்?
இப்படியெல்லாம் வேலைக்காரரை வைத்து அவர்களுக்கு வேண்டிய
தைக்கொடுக்க நமக்கு மாசம் ரூபாய் சம்பளமா வருகிறது? வீட்டு
வேலையை நீதான் பார்க்கவேணும். வேறு ஆட்கள் நமது வீட்டில் வரக்
கூடாதென்று நான் சொல்லவில்லையா? நான் சொல்வதொன்று,
நீ செய்வதொன்றா? ஆகட்டும் மனம்போல செய். சீக்கிரம் அந்த
முட்டாள் பயல் கையில் ஓடெடுத்துக்கொடு, அவன் வாயிலே மண்
ணைப்போடு என்று கூறினான். கிருபை நடுங்கிக்கொண்டு நின்றாள்.
அந்த ஏழை ஸ்திரீ, பிள்ளைகள் பசியினால் அழுதுகொண்டிருக்குது
போகட்டுமா ஐயா? என்றாள். ஞானக்கண் கையிலிருக்கிறதை வை
த்துவிட்டுப்போ, இனி இங்கே ஒரு நாளும் வராதே என்றான்.
அவள், இத்தனை நேரமும் தண்ணீர் எடுத்து ஆயாசமாயிருக்கிறது, பசி
பிராணனை வாங்குது, களவு செய்தால் தானே பயம், வேலை செய்து
வாங்கினதைக் கொண்டுபோகப் பயமில்லை என்று சொல்லிக்கொண்டு
மெல்ல நடந்தாள். உடனே அவன் அவள் கையிலிருந்த பெட்டி
யைத் திருப்பி பறித்துக்கொண்டுபோய் அதிலிருந்த சாதம் முதலியவை
களை மாட்டுத்தொட்டியிலே கொட்டிவிட்டான். ஐயோ! பரிதாபம்,
அந்த ஏழை பசியினால் வருந்திக்கொண்டிருந்த தன் பிள்ளைகளிடத்
தில் மனக்கொதிப்போடு போனாள். பின்னொரு நாள் ஒரு ஏழைப்
பெண் அவன் வீட்டிற்குப் பிச்சை கேட்டுவந்தாள். அப்போது ஞா
னக்கண் வெளியே தோட்டத்திலிருந்தான். கிருபை அந்த ஏழை
யின்பேரில் பரிதாபப்பட்டு அவளோடு தயவாய்ப் பேசினாள். இதைக்
கவனித்த ஞானக்கண், கிருபை அவளுக்குப் பிச்சை போட்டவுடனே
ஏதோ அவசர சோலியாய் வீட்டுக்கு வருபவன்போல வந்து அந்த
ஏழையின் பெட்டிக்குள்ளே உற்றுப்பார்த்தான். அதில் அவள் பலரி
டத்திலும் வாங்கின பதார்த்தங்களோடு பாதித் தேங்காய் மூடியும் இரு
ந்தது. அதை ஞானக்கண் தன் கையில் எடுத்துக்கொண்டு, கிருபை
கிருபை என்று கூப்பிட்டான். அவள் திடுக்கிட்டுக் கை கால் நடுங்க
வெளியே வந்தாள். உடனே அவன் "இவளுக்குத் தேங்காய் நீதானா
கொடுத்தாய்?" என்றான். அவள் வாய்குழறி நான்தான் கொடுத்தேன்,
அது நமக்கு உதவாது, அழுகிப்போயிருக்கிறது என்றாள். அவன் அதை
முகர்ந்து பார்த்து அழுகியிருக்கிறது மெய்தான், ஆனால் நாறவில்லை,
நீ பொய் சொல்லுகிறாய். அழுகின தேங்காய் நமக்காகாதா என்று
சொல்லி தேங்காயைக் கிருபை கையில் கொடுத்து இப்படி அதிகமா
ய்த் தர்மம் போடவேண்டிய அவசியமில்லை, வந்தவர்களுக்கெல்லாம்
வீட்டுப்பொருளைக் கொடுத்துவிட்டால் நாம் என்ன செய்கிறது. பாதி



த்தி என் குடியைக் கெடுத்துவிடாதே. இந்தத் தேங்காயைச் சுட்டு
அரைத்து எனக்குக்கொடு, நான் அதைத் தேய்த்துக் குளித்துக்கொள்
வேன் என்று கோபித்தான். இப்படிப்பட்ட இடுக்கத்தில் கிருபை
தன் வேலைகள் யாவையும் தானே செய்யவேண்டியதிருந்தது. ஆத
லால் அவளுக்கு இளைப்பாறுதலும், நேரத்திற்குச் சரியான சாப்பாடும்
கிடையாது. அவளுடைய தேகம் உலர்ந்து வாடினது. சீக்கிரத்தில்
பலவீனப்பட்டு சுகவீனமடைந்தாள். அவள் ஒருநாள் வயலில் வேலை
செய்தவர்களுக்கு சாப்பாடு கொண்டுபோய்க் கொடுத்துவிட்டுத் திரும்
புகையில் தளர்ச்சியடைந்து கீழே விழுந்தாள். சிலர் அவளைத் தூக்கி
வீட்டுக்குக் கொண்டுவந்தார்கள். ஞானக்கண் அவளைப்பார்த்து, அவள்
வேலைக்குச் சோம்பேறி, சாலம் பண்ணுகிறாள் என்றான். அவள் படுக்
கையிலானவுடனே அவளுடைய புருஷன் மனதுருகி தன்னால் கூடிய
உதவிகளைச் செய்தான். பொருள் செலவிட்டு யாதொரு பரிகாரமும்
செய்யவில்லை. கிருபை சீக்கிரத்தில் இறந்துபோனாள். அவள் உயி
ரோடிருக்கையில் தேவதாசன் அவளை அவ்வளவாய்க் கவனியாமல்
நிர்விசாரியாயிருந்தபடியினால் அவள் மரித்தபின் அவள்பேரிலுள்ள
எண்ணத்தால் உள்ளமும் உடலும் சோர்ந்து, விசாரத்தினால் உண்ணு
மலும் உடுக்காமலும், வாடிவதங்கினான். அவன் பட்ட பரிதாபத்தை
யாரால் சொல்ல முடியும்!

ஞானக்கண் தன் மகனுடைய சஞ்சலத்தைக் கண்டு அவன் மன
தை ஒரு நொடிப்பொழுதில் ஆனந்தத்தால் நிறைத்துவிடலாமென்
றெண்ணி அவனைத் தன் வீட்டின் இரகசியமான ஒரு அறைக்குள்ளே
கூட்டிக்கொண்டுபோய், அந்த அறையின் மூலையில் சதுரமான ஒரு
பலகையைக்காட்டி அதைத் தூக்கும்படி சொன்னான். தேவதாசன்
அதை எடுத்த உடனே அங்கே ஒரு நிலவறை இருக்கிறதைக் கண்
டான். ஆனால் இருட்டாயிருந்தபடியால் உள்ளே என்ன இருக்கிற
தென்று அவனுக்குத் தோன்றவில்லை. ஞானக்கண் ஒரு விளக்கைக்
கொளுத்தி தன் கையில் பிடித்துக்கொண்டு மகனை அங்கிருந்த ஏணி
யின் வழியாய்க் கீழே இறங்கிப்போகும்படி சொன்னான். மகன் அப்
படியே இறங்க இருவரும் நிலவறையின் தளத்தில் வந்து சேர்ந்தார்
கள். அங்கே அலங்காரமும், பெரிதுமான அநேக பெட்டிகளிருந்தன.
ஞானக்கண் ஒவ்வொன்றையும் திறந்து மகனுக்குக் காட்டினான். ஒரு
பெட்டி நிரம்ப ரூபாயிருந்தது, இன்னொரு பெட்டி நிறைய குதி
ரைப் பவுன் இருந்தது, வேறொரு பெட்டி நிறைய காசு இருந்தது,
மற்றொரு பெட்டி நிறைய விலையுயர்ந்த ரத்தினக் கற்களிருந்தது.
ஞானக்கண் தேவதாசனைப் பார்த்து, "இவைகள் யாவும் உன்னுடைய

வைகள்தான் மகனே" என்றான். திடீரென்று இந்தப் பெருந்திரவியலான பொருளைக் கண்டதினாலும் அவை தன்னுடையவை யென்று அறிந்ததினாலும் அவன் பிரமித்து மயங்கி, அடியற்ற பனைபோல திடீரென்று தரையிலே விழுந்து இரண்டொருதரம் காலை அடித்து இறந்துபோனான். ஞானக்கண் தன் மகன் சோர்வினால் விழுந்தானென்று எண்ணி உருட்டிப்புரட்டிப்பார்த்தான். உயிர் இல்லை என்று கண்டு வியாகுலத்தால் அழுது, முட்டுக்குள்ளே தலையைக்கொடுத்துக் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தான்.

பணப்பெட்டிகளெல்லாம் எங்களைச் சற்பிரயோகம்பண்ணாதவர்களை இப்படியே உயிரோடு விழுங்கிவிடுவோமென்று சொல்லுகிறவைகளைப்போல வாய்களைத் திறந்துகொண்டிருந்தன. அறைக்குள் போன தகப்பனும் மகனும் வெகுநேரம் வெளியே வராததைக் கவனித்த சுந்தரம் என்னும் அவர்கள் பந்து ஒருவன் உள்ளே போய் துவாரத்தின் வழியாய் நிலவறையை உற்றுப்பார்த்து, மகன் செத்துக்கிடப்பதையும், தகப்பன் அழுதுகொண்டிருப்பதையும், பணம் நிறைந்த பெட்டிகள் திறந்திருப்பதையும் கண்டான். அப்போது அவன் மனதில் பலவிதமான எண்ணங்கள் உண்டாயின. உடனே தான் பார்த்தது ஞானக்கண்ணுக்குந் தெரியாதபடி மறைந்து தன் வீட்டுக்குவந்து எண்ணாததெல்லாம் எண்ணி, அப்பொருளை அபகரிக்க ஆலோசித்து, தன்னோடு வேறு இரண்டு பேரைக் கூட்டிக்கொண்டு அமாவாசி இரவில் கன்னம் போட்டு ஒரு பெரிய பெட்டியைத் தூக்கிக்கொண்டு வெளியே போனார்கள். போகும்போது ஒரு எலியைப் பூனை தூக்கிக்கொண்டுபோன சத்தத்தைக் கேட்டு ஆட்கள் விழித்து விட்டார்களென்று பயந்து, அந்தப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடி ஒரு மலைக் கெபிக்குள்ளே மறைத்து வைத்தார்கள். அது நிறையப் பவுன் இருந்தது. பவுனைப் பகிர்ந்து இரவில் வீட்டுக்குக் கொண்டுபோகவேண்டுமென்று காத்திருக்கும்போது அதிகப் பசியுண்டானதினால் தங்களில் ஒருவன்போய் இரகசியமாய்ப் போஜனம் வாங்கிக்கொண்டு வரவேண்டுமென்று யோசித்தார்கள். சுந்தரம் "நான் வாங்கி வருகிறேன்" என்று சொல்லிப்போனான். அவன் போகும்போது இந்தப் பவுன் பெட்டி எனக்குக் கிடைக்குமானால் நான் எவ்வளவு பாக்கியசாலியாயிருப்பேன். அதைக்கண்டவன் நான், எடுக்க வழி சொன்னவன் நான், எனக்கே அது சேரவேண்டும். ஆதலால் இருவரையும் கொன்றுவிட்டு பெட்டியை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று யோசித்து, கொஞ்சம் தோசையும் வாழைப் பழமும் வாங்கி அதற்குள் நஞ்சைச்செலுத்திக்கொண்டு போனான். அச்சமயத்தில் பவுன் பெட்டியைக் காத்துக்கொண்டிருந்தவர்கள் இரு-



வரும்: பெட்டியைக் கண்டவனும் எடுத்தவனும் சுந்தரமாகையால் அவன் நமக்குச் சரியாகக் கொடுக்கமாட்டான், நமக்குக் கால்பங்குதான் கிடைக்கும்; ஆதலால் அவனைத் தொலைத்துவிடவேண்டுமென்று யோசித்துக்கொண்டார்கள்.

சுந்தரம் பழமும் தோசையும் வாங்கிக்கொண்டு வந்தான். அவன் அவைகளைக் கட்டிவைத்திருந்த துணியைக் குனிந்துகொண்டு அவிழ்க்கும்போது—ஐயோ! என்ன சொல்ல, அவர்களிலொருவன் வெட்டுக் கத்தியால் சுந்தரம் கழுத்தை ஒரே வெட்டாய் வெட்டி விழுத்தினான். அவன் இறந்தவுடனே அவ்விருவரும் அவன் தலையையும் உடலையும் தூக்கி ஒரு பாறையின் இடைக்குள்ளே போட்டுவிட்டு சுமார் ஐந்து நாழிகை சென்றபின் அந்தத் தோசையையும் பழத்தையும் மகிழ்ச்சியோடு தின்றார்கள். தின்று முடியுமுன் அதில் கலந்திருந்த நஞ்சினால் இருவரும் செத்துப் பிரேதமானார்கள். ஞானக்கண் ஒருநாள் தன் நிலவறைக்குள்போய்ப் பார்த்தபோது, பவுன் பெட்டியைக்காணாமல் தன் உயிரை இழந்தவன்போலானான். மிகக் கவலையும் ஏக்கமும் அவனை [illegible]றவனாக்கினது. அவனும் சிலமாசங்களுக்குள் இறந்துபோனான். நிலவறைத் திரவியத்தைக் குறித்து ஒருவருக்கும் தெரியாததனால் அது மண்ணுக்குள் புதைந்துபோனது. மற்றச் சொத்துக்கள் இராஜாங்கத்தைச் சேர்ந்தது. ஐயோ! பொருளாசையே, உன்னால் உண்டாகும் கேட்டை யாரால் விபரிக்கக்கூடும்.

தர்ம சிந்தையற்ற லோபிகளுக்கு வரும் [illegible]பத்தைக் குறித்து தேவவசனம் தெளிவாயுரைக்கிறது. "தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான், தன் கண்களை ஏழைக்கு விலக்குகிறவனுக்கோ அநேக சாபங்கள் வரும்." (நீதி. 28. 27.) "ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக்கொள்ளுகிறவன் தானும் சத்தமிட்டுக் கூப்பிடும் போது கேட்கப்படமாட்டான்." (நீதி. 21. 13.)

"தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு ஞானத்தையும் அறிவையும் இன்பத்தையும் அளிக்கிறார். பாவம் செய்கிறவனுக்கோ, தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவன் வசம் வைத்துவிட்டுப் போகும்பொருட்டுச் சேர்த்துக் குவித்துவைக்குந் தொல்லையை அவர் நியமித்திருக்கிறார்." (பிர. 2. 26.) "அநியாய வட்டியினாலும் ஆதாயத்தினாலும் தன் ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறவன் தரித்திரர்பேரில் இரங்குகிறவனுக்காக அதைச் சேகரிக்கிறான்" (நீதி. 28. 8.) என்று ஞானி சொல்வது மெய்யல்லவா? "செத்தவர் வாயிலே மண், ஜீவந்தரர் கையிலே பொன்" என்று ஒருநாள் விடிவது திண்ணம். சிந்-

துண்ட தானிய மணிகளைக் கூட்டிச் சேர்த்துக் குவித்துவைக்கும் ஒரு விளக்குமாறு, தான் கூட்டிச்சேர்த்தவைகளை உண்டு சுகிக்காமலும் அதினால் திருப்தி அடையாமலும் எப்படியிருக்கிறதோ, அப்படியே ஏழைக்கிரங்காதவனும் தானதர்மம் செய்யாதவனுமான ஒரு லோபியுமிருக்கிறான். அவன் பெட்டி நிறையப் பணமிருந்தும் வயிறு நிறையப் போஜனம் அறியான், இடுப்பாரத் துணி அறியான். "எல்லாம் இருக்குது பெட்டிக்குள்ளே, இலைக்கறி கடையச் சட்டியில்லை" என்றதுபோலிருக்கிறது அவனுடைய நிலைமை. பணம் அவன் தெய்வம். ஒன்றுமில்லை என்பது அவன் அறிக்கை. இன்னும் வேணும் என்பது அவன் ஜெபம். அவன் செல்வத்தைத் தன் கண்ணால் காண்பதேயன்றி வேறு பிரயோஜனம் அவனுக்கில்லை. தரித்திரனும் மற்றவன் செல்வத்தைத் தன் கண்ணால் காண்கிறானே. இரண்டு ஆஸ்தியிலும், லோபி வெகு தரித்திரனென்றே சொல்லவேண்டும். ஐசுவரியமும் தரித்திரமும் ஒருவன் மனதிலேதானிருக்கிறது. அதிகம் வேண்டுமென்று ஆசைப்படாமல் தனக்குள்ளதே போதுமென்று ஈகையோடு ஜீவிப்பவனே ஐசுவரியவான். திருப்தியற்று அதிகம் வேண்டுமென்று ஆசைப்பட்டு, ஈகையில்லாமல் பிசினித்தனம் பண்ணுகிறவனே தரித்திரன். பொருளாசைக்காரன் தனக்குள்ளது போதுமென்று ஒருக்காலும் சொல்லான். அவனுக்கு ஆசை அதிகம், அதினாலே துன்பமும் அழுகையும் அதிகம். "ஆசை உண்டாதாகில் அழுகையும் உண்டாது" என்பது முதுவுரை. ஏழைக்குக் கொடாதவன், தனக்கு அதிகப் பொருளிருந்தபோதிலும் ஒன்றுமில்லாதவன்போல நடந்துகொள்வதால் அதிக ஆஸ்தியிலும் அவன் கொடிய தரித்திரன்தான். சிநேகிதனே! அதிக ஆஸ்தியில் தரித்திரனும், அதிகத் தரித்திரத்தில் ஐசுவரியனும் இருப்பது கிறிஸ்தவனுக்குத் தகுதி. சிலர் "ஆனை வந்தால் ஒரு அவியல், பூனை வந்தால் ஒரு பொரியல்" என்றதுபோல எவ்வளவு வந்தாலும் வீண் டம்பமாகவும், ஊதாரித்தனமாகவும் செலவிட்டு ஏழைகளாகவே போகிறார்கள். அது சரியா? "எட்டி பழுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன?" உனக்கு அதிகமிருந்தால் சிற்றின்பத்தையும், வீண் பெருமையையும் விட்டு, குடும்பத்திற்கு அவசியமானதைமட்டும் செலவுசெய்து, மீதத்தை ஏழைகளுக்கும், பரோபகாரங்களுக்கும் கொடுத்து உதவிசெய். அது உன் ஜீவிய சட்டம்.

உனக்குக் கொஞ்சம் இருந்தால் அதுவே போதுமென்று மனரம்மியத்தோடு சந்தோஷமாயிரு. "சஞ்சலத்தோடு கூடிய அதிகப் பொருளிலும் கர்த்தரைப்பற்றும் பயத்தோடு கூடிய கொஞ்சப் பொருளே உத்தமம். (நீதி. 15. 16.)



புருஷியா தேசத்து பிரடெறிக் அரசன் ஒருநாள் குதிரையேறி உலாவித்திரிகையில், ரஸ்தா ஓரமான ஒரு வயலில் கிழவன் ஒருவன் உழுகிறதையும், அவன் உழுதுகொண்டு போகும்போதே குசாலாய்ப் பாட்டுப்பாடிக்கொண்டு போவதையும் கவனித்தார். அப்போது அரசன் அவனைப்பார்த்து: நீ பெரிய சீமான்போல் காணுதே, நீ உழுகிற நிலம் உனக்குச் சொந்தமானதல்லவா? என்று கேட்டார்.

உழவன் அவரின்னாரென்றறியாமல், இல்லை ஐயா, நான் சம்பத்துள்ளவனல்ல, கூலிக்குச் சால்வடிக்கிறவன்தான் என்றான். அப்படியா, நாளொன்றுக்கு உனக்கு என்ன சம்பளம் கிடைக்கும் என்று அரசன் கேட்க, (ஏழு அணாவுக்குச் சரியான) எட்டுகிரோஷன் கிடைக்குமென்று கிழவன் சொன்னான். அதுகேட்டு அரசன், ஆ! அது அற்ப சம்பளம் தானே, அதைக்கொண்டு நீ எப்படிப் பிழைக்கக்கூடும் என்க, உழவன்: ஆம், என் செலவுபோக நான் எப்போதும் கொஞ்சம் மிச்சம் பிடித்து வருகிறேன் என்றான். அரசன் அதெப்படி என்று வினவ, உழவன் சொல்லுகிறேன், கேளுங்களும். 2 கிரோஷன் எனக்கும் என் மனைவிக்கும் செலவிடுகிறேன். 2 கிரோஷன் கொடுத்து என் பழைய கடனைத் தீர்த்து வருகிறேன். 2 கிரோஷன் வீதம் நாடோறும் புதுக்கடன் கொடுத்துக்கொண்டுவருகிறேன். 2 கிரோஷன் வீதம் தேவகாரியங்களுக்குச் செலவிடுகிறேன் என்றான். அரசன் திகைத்து, நீ சொல்லுவது நான் கிரகிக்கக்கூடாத ரகசியமாயிருக்கிறது; தயவுசெய்து அதைச் சற்று விபரமாய்ச் சொல்லக்கூடுமா? என்று கேட்டார். அப்படியானால் நேரம்போந்தது, ஆகிலும் சொல்லுகிறேன் என்று உழவன் சொல்லத் தொடங்கினான்: எனக்கு விருத்தாப்பியரான பெற்றோர் வீட்டிலுண்டு. நான் ஒன்றும் செய்ய ஏலாத குழந்தையாயிருந்தபோது அவர்கள் என்னைக் காப்பாற்றி அன்னவஸ்திரம் தந்து வளர்த்தார்கள். இப்போது விருத்தாப்பியத்தால் வேலை செய்ய ஏலாதிருக்கிற அவர்களுடைய சவரட்சணைக்கு 2 கிரோஷன் கொடுத்து என் பழைய கடனைத் தீர்க்கிறேன். நான் புதிய கடன் கொடுப்பதாகச் சொன்ன 2 கிரோஷன் என் பிள்ளைகளுடைய படிப்புக்காக நான் செலவுசெய்வதுதான். நானும் என் மனைவியும் விருத்தாப்பியமாகும்போது, எங்களுக்கு உபகாரமாயிருக்கும். மீதம் 2 கிரோஷனை வியாதிக்காரரான இரண்டு சகோதரிகளைக் கர்த்தர் நிமித்தம் பராமரிக்கிறேன் என்றான். இவைகளைக் கேட்ட அரசன் அவன் மீது இரக்கமுற்று, விருத்தாப்பியனே! நீ நல்ல மனிதன். நீ ஒருமித்துக்கொள்ளும்படியாக, நானும் ஒன்று சொல்லுகிறேன். இதற்குமுன் எப்போதாவது என்னைக் கண்டிருக்கிறாயா? என்றார். அவன் ஒருக்

காலும் கண்டதில்லை என்றான். அரசன் அப்படியா! இப்போது 5 நிமிஷத்துக்குள்ளே என்னை 50 விசை கண்டு என் சாயல்களில் ஐம்பதை உன் ஜேப்பிலே போட்டுக்கொண்டு போவாய் என்றார். உழவன், ஐயா இது நான் விடுவிக்கக்கூடாத கதையாயிருக்கிறதே என்க, அப்படியானால் நான் அதை உனக்கு விடுவிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு, தமது ஜேப்பில் கைபோட்டு 50 பவுன் எடுத்து பிரமித்து நின்ற உழவ[illegible]கையில் கொடுத்து, இந்த நாணயம் நமது கர்த்தராகிய தேவனிடத்திலிருந்து வருகிறது, ஆகையால் நலமானது; சுகமாயிரு என்று வாழ்த்தி[illegible] சவாரி போனார்.

"போதுமென்கி[illegible] மனம் தான் பொன் செய்யும் மருந்து," மன ரம்மியமும் ஈகையும் மெத்த [illegible]சீர்வாதமுள்ளது. தரித்திரருக்குக் கொடுப்பதினால் உன் சம்பத்து குறைந்துபோகாது. "வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்" என்று எழுதியிருக்கிறபடி பரிசுத்தவான்களின் நீதியால் நீ அலங்கரிக்கப்படுவாய். "இட்டுண்டார் செல்வம் கெட்டுண்டாலும் அழியாது" என்ற முதுவுரைப்படி உனக்[illegible]ச்சியும் உண்டாகாது. "அநியாயத்தின் திரவியங்கள் ஒன்றுக்கும் உதவா; நீதியோ மரணத்திற்குத் தப்புவிக்கும்." (நீதி. 10. 2.)

ஆகையால், "இல்லாமல் போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்கவிடாதே. அது கழுகுகளைப்போலச் சிறகுகளைத் தனக்கு உண்டுபண்ணிக்கொண்டு ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோம்." (நீதி. 23. 5.) என்று ஞானி சொல்லுவதற்கொப்பாய் அநியாயமாய் வந்த பொருள் மேக நிழலைப்போலவும், கோடைகாலத்துப் பனியைப்போலவும் சீக்கிரத்தில் காணமற்போகிறதே.

மதுரநாயகம் என்ற ஒரு ச[illegible]வானிருந்தான். அவன் உத்தியோக விஷயமாய் வேறொரு ஊருக்குப் போக நேரிட்டபோது, தன் நிலங்களையும், தோப்புகளையும், மற்றக் காரியங்களையும் மேல் பார்த்து வரும்படி குருசாமி என்றொருவனுக்கு மாசம் 7 ரூபாய் சம்பளம் பேசி தன்னுடைய விலங்கரைகளையும், புதிதாய்த் தொடங்கியிருந்த கடைகளின் கட்டிட வேலைகளையும் அவனிடத்தில் ஒப்புவித்துப் போனான். மதுரநாயகம் போனபின், "காச்சியார் கண் மூடினது நாய்க்கு வேட்டை" என்றபடி, அவனுடைய காரியங்கள் சரியாய் நடத்தப்பட்டு வருகிறதா என்பதைக் கவனித்துக்கொள்ள ஆளில்லாததினால், குருசாமி தன் இஷ்டம்போல அவனுடைய பொருளை அபகரிக்க ஆரம்பித்தான். "கட்டு கட்டாயிருக்கப் பிட்டை நாய் கொண்டுபோனது" என்றாற்போல காரியாதிகள் அதனின் மட்டில் நடந்துகொண்டிருக்க குருசாமி



கடைக்கட்டிடக் கணக்கிலும், நஞ்சை, தோப்பு வரும்படிகளிலும் மிகுதியான பாகத்தைக் கவர்ந்துகொண்டான். தன் எஜமானுக்காக மற்றவர்களோடு கொடுக்கல் வாங்கல் செய்ததிலும் அதிகமான பொருளை வஞ்சகமாய் அபகரித்தான். ஆடுமாடுகளில் முதல்தரமானவைகளைத் தன் வீட்டுக்குக் கொண்டுபோனான். பக்க நிலக்காரரிடத்தில் லஞ்சம் வாங்கிக்கொண்டு மதுரநாயகத்தினுடைய நிலங்களை எல்லை கடத்து கட்டிக்கொள்ள இடங்கொடுத்தான். "தலையாரியும் கள்ளனும் ஒன்றானால் விடியுமட்டும் திருடலாம்" என்றபடி, வேலைக்காரர் மதுரநாயகம் வஸ்துக்களை குருசாமி சம்மதப்ப[illegible]ருடி, தாங்களும் தின்று அவனுக்கும் கொடுத்தார்கள். குருசாமி இந்த வேலையில் பிரவேசித்து சில மாசங்களுக்குள்ளாக அவன் ஸ்திதி முற்றிலும் மாறிவிட்டது. மிகவும் சாதாரண உடை தரிக்கிற அவ[illegible] சரிகை வேஷ்டியும், சரிகை அங்கவஸ்திரமும் தரிக்க ஆரம்பித்தான். தங்கத்தைக் கனவிலும் காணாத அவன் காதும், விரலும், கடுக்கனாலும் மோதிரத்தாலும் பிரகாசித்தன. ஒன்றரை ரூபாய் புடவைக்கு விதியற்ற அவன் மனைவி உயர்ந்த பட்டாடை[illegible]க்கியவாட்டியாய் விளங்கினாள். பசியினால் வாடி[illegible] கறுத்த அவன் பிள்ளைகள் புஷ்டியாய், காப்பு, அரைஞாண் முதல[illegible] ஆபரணங்கள் பூண்டு இலங்கின. இது மட்டுமல்ல, காலம் கடக்கக் கடக்க அவனுடைய ஆஸ்தியும் அந்தஸ்தும் அதிகப்பட்டன. வெற்றுடலாயிருந்த அவன் மனைவி விசேஷித்த நகைகளால் நிறைந்தவளானாள். மாட்டுப்புரைபோன்ற அவன் வீடு பெரிய மூன்றடுக்கு மாளிகையானது. கையகலம் நிலமற்ற அவன் திரண்ட பூஸ்திதியுடையவனானான். அவன் வீட்டு வேலைக்காரர் ஒரு பெரிய உத்தியோகஸ்தனுக்கும் கிடையாது. அந்த வேலைக்காரருக்கெல்லாம் மதுரநாயகம் கணக்கிலேதான் சம்பளம். இந்தப்பவுசுகளெல்லாம் 7 ரூபாய் சம்பளக்காரன் வீட்டிலிருந்தால் உலகம் இதைக்கண்டு சும்மாயிருக்குமா? ஒருவன், நேற்று ஒண்டியாயிருந்த குருசாமி[illegible] இந்தப் பசுவுகளெல்லாம் எங்கிருந்து வந்துவிட்டது என்பா[illegible]. இன்னொருவன்; எனக்கு ரூ[illegible] 100 சம்பளமிருக்கிறது, நான் குடிப்பதோ அல்லது அனாவசியமான செலவு செய்வதோ கிடையாது, ஆனால் 7 ரூபாய் சம்பளக்கார குருசாமியின் நடபடியில் கால்பங்கும் எனக்கில்லையே. இதேன்? என்பான். வேறொருவன், "மதுரநாயகத்தை வஞ்சித்து அவன் குடும்பத்தில் மண்ணைப்போட்டு தன் குடும்பத்திலே பொன்னைப்போடுகிறான்" என்பான். மற்றொருவன், "திருடித் தேடின செல்வம் எத்தனைகாலம் நிற்கப்போகிறது. அது எவ்விதமாய்ச் சேருகிறதோ அவ்விதமாகவே சிதறிவிடும்." என்பான், சிலர்: "தானமில்லாத சொத்து தன்வழியே போகாதோ, உடைமையும் வறுமையும் ஒரே வழி செல்லாது" என்பார்கள்.

இவ்விதமாய் குருசாமியும் அவன் மனைவியும் செல்வச் செருக்காய் வாழ்ந்து, ஏழைகளை அவமதித்து, நல்லோரை தூஷித்து வருங்காலத்தில் ஒரு நாள் குருசாமி ஸ்நானம்செய்து சாப்பிட்டுவிட்டு தன் கட்டில் மெத்தையில் சாய்ந்திருக்கும்போது, அவன் மனைவி பொன் பூத்த மரம்போல விலையுயர்ந்த நகைகளணிந்தவளாய் ஒரு அழகான தட்டில் தாம்பூலம் கொண்டுபோய் அவன் சமீபத்தில் உட்கார்ந்து பாக்கும் வெற்றிலையும் சுருட்டிக்கொடுத்தாள். அவன் அதை வாங்கிக் கருக்கச் சிவக்க மென்றுகொண்டு, அடி, நாராயணி! நம்முடைய பாக்கியமே பாக்கியம். இந்த ஊரில் நமக்கு நிகரானவன் யார்? முன்னே நம்மை அற்பமாய் எண்ணினவர்களெல்லாம் இப்போ நம்மைக் கண்டு அஞ்சி வணங்கிறார்கள். உனக்கிருக்கிற ஆடை ஆபரணங்கள் ஊரில் எவளுக்குங் கிடையாது. நமது வீட்டுச் சாமான்களுக் கிணையானது ஒருவருக்குமில்லை. சீக்கிரத்தில் ஒரு இரும்புப்பெட்டி வாங்கவேண்டும். அந்தப் பவுன்களெல்லாம் மரப்பெட்டிக்குள்ளே கிடக்கிறது என்று சொல்ல, அவள்: "அதெல்லாம் சரிதான். இப்போ வந்திருக்காரே மேஸ்திரட்டு, அவருடைய [illegible] ரொம்ப அழகான தங்கத் தாவடம் ஒண்ணு போட்டிருக்கா, அதுபோல எனக்கும் சீக்கிரம் ஒண்ணு செஞ்சுதரணும்" என்றாள். அவன் அப்படியே செய்து தருகிறேன் என்க, அவள், என்னைப்போல பாக்கியசாலி உலகில் எவருமில்லையென்று பரமானந்தம் அடையும்போது வெளியே நின்ற வேலைக்காரி உள்ளே ஓடிவந்து, ஐயா, நமது வீட்டுக்கு நேரே சில சேவகரும் உத்தியோகஸ்தரும் வருகிறார்கள் என்று சொன்னாள். குருசாமி உடனே எழுந்து வெளியே வந்தான். அப்போது அந்த ஆட்களும் வீட்டுக்குமுன்னே வந்து சேர்ந்தார்கள். அவர்களில் ஒரு சர்க்கார் ஆள், குருசாமியென்பது நீதானா என்க, அவன் ஆம் என்றான். அப்போது அந்த ஆள், "உன் வீட்டையும், வீட்டிலுள்ள பொருட்களையும், உங்கள் தேகத்திலிருக்கிற உடைமைகளையும், மற்றும் உன் ஆதீனத்திலிருக்கிற [illegible]ற்றையும் ஜப்தி செய்ய சர்க்காரில் உத்தரவு பிறந்திருக்கிறது" என்று சொல்லுமுன்னே சேவகரில் சிலர் வீட்டுக்குள் பிரவேசிக்க, சிலர் வீட்டை நாலு பக்கங்களிலும் வளைந்தார்கள். "தானொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்கும்" என்றபடி குருசாமி எண்ணாத வேளையில் இடிவந்து விழுந்தது. அவன் திகைத்துக் கலங்கினான். அவன் மனைவி, "ஐயோ, இது யார் செய்த அநியாயம்" என்று சொல்லி ஓலமிட்டாள். அவர்களில் ஒருவன், இது ஒருவர் செய்த அநியாயமுமல்ல. "தன் வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும்" என்பது தெரியாதா, ஆயி என்றான். இதின் காரணம் என்னவென்றால், குருசாமியோடு கூட்டுக்



கள்ளனாயிருந்த ஒருவன், தனக்கு அவன் சொல்லியபடி லாபங்களில் பாதியைக் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டபடியால் கோபங்கொண்டு மதுரநாயகத்தினிடத்தில்போய் குருசாமி செய்கிற மோசத்தைச் சொல்லிவிட்டான். அதின்பேரில் மதுரநாயகம் குருசாமியின்மேல் கோர்ட்டில் வழக்குத் தொடுத்து இவ்விதமாய் அவனிடமிருந்த யாவையும் ஜப்திசெய்வித்தான். இந்த வழக்கு வெகுகாலம் விசாரணைக்குள்ளிருந்து கடைசியில் மதுரநாயகத்திற்கு ஜெயமாய் முடிந்தது. குருசாமியும் அவன் மனைவியும் குடியிருக்கக் குடிசைதானுமில்லாமல் தங்கள் வீட்டில் தண்ணீர் எடுத்துப் பிழைத்த ஒரு ஸ்திரீயின் வீட்டிலே போய் வாசம்பண்ணினார்கள். சிலவேளைகளில் குருசாமியின் மனைவி பசி பொறுக்கமாட்டாமல் நெல் குத்துகிற பெண்களின் சமீபத்தில் போயிருந்து தவிடு வாங்கித் தின்பாள். "தவிட்டிலே போட இரண்டு உப்புக்கல் தாருங்கள் அம்மா" என்று கேட்பாள். சிலர் கொடுப்பார்கள். சிலர், "தவிடும்கொடுத்து உப்பும் கொடுப்பார்களாக்கும்" என்று சொல்லிவிடுவார்கள். பின்பு அவள் கூலிக்குக் குத்த ஆரம்பித்தாள். மிகவும் செல்வமாய் வளர்ந்த பிள்ளைகள் கூலிக்கு உரம் சுமந்தார்கள். குருசாமி தரித்திரத்தினால் வியாதிப்பட்டு, ஏக்கத்தினால் புத்தி மயங்கி தண்ணீரில் விழுந்து தன் உயிரை மாய்த்துக்கொண்டான். "அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவன் முட்டையிட்டு அவையங்காத்தும், குஞ்சு பொரிக்காமற் போகிற கவுதாரிக்குச் சமானமாயிருக்கிறான்; அவன் தன் பாதி வயதிலே அதைவிட்டு, தன் முடிவிலே மூடனாயிருப்பான்" (எரே. 17. 11.) என்று வேதம் சொல்லுகிறபடி குருசாமியின் வாழ்வு முடிந்தது.

உன் பொருளை வீண் செலவுசெய்யாமல் வருங்காலத்திற்காக மீத்துவைக்கவும், கொடுக்கல் வாங்கல் செய்யவும் பிரயாசப்படுகிறாயாக்கும். அது நல்லதுதான். நீ அப்படிச்செய்வதற்கு நம்பிக்கையும், ஐவேசுமுள்ளவர்களைத் தெரிந்துகொள்ளுகிறாய். என்றாலும், அதையிட்டு அநேக கஷ்ட நஷ்டங்களை நீ அடைந்ததுண்டே. ஆனால் உன் பொருளைக் கர்த்தரிடத்தில் கொடுத்து வாங்கு, அது நலம். அப்படிச் செய்ய விரும்புகிறவன் எவனும் ஏழைகளுக்குக் கொடுக்கவேண்டுமென்பதைக் காட்டும்படி, "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக்கொடுப்பார்" என்று சத்தியவேதம் சொல்லுகிறது. (நீதி. 19. 17.)

"ஏழைக்கு இரங்குதல்" என்பது, ஏழையின் நிலைமையில் நம்மை நிறுத்தி, நம்மை அவர்களாகப் பாவித்து, அப்படிப்பட்ட நிலைமையில் மற்றவர்கள் நமக்குச் செய்யவேண்டுமென்று விரும்புவதை நாமும் அந்த ஏழைக்குச் செய்யத்தக்கதாய்த் தயை பாராட்டுவதைக் குறிக்கும்.

அருளன் என்ற ஒரு ஏழை மனிதனுக்கு அன்புமணி என்னும் மனைவியிருந்தாள். அவள் சிறுவயதிலே கூலிவேலை செய்து, அவளில் காணப்பட்ட நற்குணங்களினிமித்தம் எஜமாட்டியால் நேசிக்கப்பட்டு சொற்ப பொருளுடன் கூலியோடு அருளன் என்பவனுக்குக் கலியாணஞ்செய்து கொடுக்கப்பட்டாள். அவளுடைய ஜாக்கிரதையினால் அவளுக்கு சீக்கிரம் தனஞ்சேர ஆரம்பித்தது. அவள் கூலிக்குக் குத்துகிற அரிசியினாலும், கொல்லைத் தோட்டத்திலுள்ள காய்கறிகளாலும், அவள் வளர்த்த கோழிகள் இட்ட முட்டைகளினாலும் அவளுடைய வீட்டுச்செலவு நடக்கும், ஆதலால் அருளன் கொண்டுவருகிற அன்றாடகக் கூலியை மீதியாகச் சேர்த்துவைப்பாள். இவ்விதமாகக் கலியாணமாகி மூன்று வருஷமாகுமுன் ரூபாய் 200 சேர்த்து ஒரு நிலத்தைக் கிரயத்துக்கு வாங்கி, தென்னை, பலா, மா, புன்னை முதலிய மரங்களை உண்டாக்கினாள். ஏழு எட்டு வருஷத்திற்குள் ஏராளமான பலனைக்கொடுக்கும் காணியானது. அவள் வரவு அதிகப்பட்டபடியால் அநேக புஞ்சை நஞ்சைகளையும் உடையவளானாள். அவள் தொழுவத்தில் மாடுகள் நிறைந்து நின்றது. அவளுடைய வீடும் விஸ்தாரமானது. சில பிள்ளைகளும் பிறந்தார்கள். சகல பாக்கியமும் அவள் வீட்டில் குடிகொண்டிருந்தது. அன்புமணி தன் வீட்டில் அநேக ஸ்திரீகளை வைத்து வேலை வாங்கிவந்தாள். அவள் வேலைக்காரரை நடத்தும் விதம் மகா விசேஷமானது. அவளும் கூலிவேலை செய்தவளாகையால் அவர்களுடைய வருத்தங்களும், அவர்களுக்கு நேரிடக்கூடிய சோதனைகளும் அவளுக்கு நன்றாய்த்தெரியும். ஆகையால் அவள் வேலைக்காரர்பேரில் அன்பும், அனுதாபமுமுள்ளவளாய் அவர்களைக் கடினமான வேலையினால் கஷ்டப்படுத்தவும் அவசரமில்லாமல் கோபித்துக்கொள்ளவும், சோதனைகளுக்கேதுவான வேலைகளுக்கு அனுப்பவுமாட்டாள். அவள் உள்ளம் ஏழைகள் பேரில் எப்போதும் உருகிக்கொண்டேயிருக்கும். வேலைக்காரிகளில் ஒருத்தி வருத்தமான சுமை எடுத்துக் கழுத்துக்குன்றி கண்பிதுங்கி வருவதைக் கண்டால் அவள் கண்களிலிருந்து கண்ணீர் வந்துவிடும். உடனே அந்தச் சுமையை இறக்கி, அதைக் கொண்டுவந்தவளுக்கு வயிறு நிரம்ப ஆகாரம் கொடுத்து, அவளைத்தடவி “நானும் இப்படித்தான் கடுஞ்சுமை சுமந்து கஷ்டப்பட்டேன். இப்படிக் கஷ்டப்படுவோமானால் கடவுள் நம்மைக் கடாட்சித்தருளுவார். நீ இனிமேல் சுமக்கக்கூடிய பாரம் கொண்டுவர வேண்டுமேதவிர, சுமக்கக்கூடாத கடினபாரம் கொண்டுவரவேண்டியதில்லை. ஐயோ! உன் கழுத்து குன்றிப்போனது, சற்றுநேரம் படுத்திரு” என்பாள். வேலைக்காரிகளில் யாருக்காவது வியாதி, துன்பம் வந்துவிட்டால் தன் சொந்த பந்துவைப்போலப் பார்த்து



பணம் செலவுசெய்து வேண்டிய உதவிபுரிவாள். அவள் வீட்டிலே வளர்ந்த சில வேலைக்காரப் பெண்களுக்கு அவளே விவாகம் முடித்துவைத்து ஸ்ரீதனமும் கொடுத்து அனுப்புவாள். அவள் ஏழைகள் பேரில் அதிகமான இரக்கமுடையவளாதலால், பன்னிரண்டு வயதுள்ள தன் குமாரத்தி ஒருத்தியை தர்மம் போடுகிற வேலைக்கு நியமித்திருந்தாள். அந்தப்பெண் பகலில் வருகிற பிச்சைக்காரருக்கு அவர்களுடைய தன்மைக்குத்தக்கபடி பழஞ்சாதம், கஞ்சி, மோர், நெல், பயறு, சோளம், காசு முதலியவைகள் கொடுக்கவேண்டும். இரவில் வருகிறவர்களுக்கு ஒரு பெரிய ஓலைக்கூடையில் அதிகமான சுடுசாதம் வைத்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாய்க் கொடுக்கவேண்டும்.

மேலும் அன்புமணி மூன்று மாசத்திற்கொருதரம் ஏழைகளுக்குக் கஞ்சிகாய்த்து வார்ப்பாள். நூற்றுக்கணக்கான ஏழைகள் வந்து கஞ்சி குடித்துக் களிப்படைந்து போவார்கள். இதுவுந்தவிர ஆறுமாசத்திற்கொருதரம் அறுப்புக்காலங்களில் கிடாய்கள் அடித்து, பலவித மரக்கறிகள் சமைத்து திரளான ஏழைகளுக்குச் சாப்பாடு கொடுப்பாள். அவளுடைய தோட்டத்தில் தர்ம மரங்களென்று முதற்றரமான சில மரங்களுண்டு. அவைகள்: ஒரு பலா, ஒரு மா, இரண்டு புன்னை, ஐந்து தென்னை, பத்துப் பனையுமாம். இவைகளின் பலனை எடுத்து வருஷந்தோறும் வஸ்திரங்கள் வாங்கி ஏழைகளுக்குக் கொடுப்பாள்.

அன்புமணியின் வீடு அந்த ஊருக்கே பெரிய பாக்கியமாயிருந்தது. எப்படியென்றால், ஊரில் யாருக்காவது மருந்துக்குப்பால் அல்லது வெண்ணெய் அவசரமானால் அன்புமணி வீட்டில் போனால் கிடைக்கும் என்பார்கள். பத்து ரூபாய் கடன் தேவையானால் அவள் வீட்டில் போய் ஆக்ஷேபனையின்றி வாங்கிக்கொள்வார்கள். மண்வெட்டி, கோடரி, கலப்பை, நுகம் முதலியவை வேண்டுமானால் அவள் வீட்டில் எடுத்துக்கொள்வார்கள். ஒரு ஆபத்து வந்துவிட்டால் அன்புமணியின் பேருதவி யடைவார்கள். அவள் தோட்டத்துக் கனிகளையும் அவள் வீட்டுப் போஜனங்களையும் அனுபவியாதவர்கள் ஊரில் ஒருவருமில்லை. அன்புமணி ஏழையாயிருந்து உயர்ந்து இவ்வளவு ஈகை இரக்கமுள்ளவளாயிருந்தும் அவளிடத்தில் பெருமையும் உல்லாசமும் எவ்வளவேனும் கிடையாது. சிலர் அவளுடைய வாழ்வைக் குறித்துப் பொறாமை கொண்டு, “உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமோ?” அன்புமணி இன்னின்னார் வீடுகளில் புளுக்கவேலை செய்தவள்தானே என்று நிந்தையாய்ப் பேசினபோதிலும் அதையிட்டுக் கோபித்துக் கொள்ளாமல் “ஆம் நான் அவர்கள் புளுக்கச்சிதான், அவர்கள் எனக்குச் செய்த நன்மைகள் என் மனதை விட்டு ஒருக்காலும் போகாது,

ஆண்டவருக்குப் பிறகு அவர்கள் பாக்கியம்தான் பாக்கியம்" என்பாள். அன்றியும் நான் இன்னார் வீட்டில் கூலிக்குக் குத்துவேன். இன்னார் வீட்டில் தண்ணீர் எடுத்துவைப்பேன். இன்னார் வீட்டில் பழங்கஞ்சி வாங்கிக் குடித்துப் பசியாறுவேன் என்று உணர்வோடு சொல்லுவாள். அவள் இப்படிப் பேசும்போது முப்பதினாயிரம் ரூபாய்ச் சொத்துக்கள் அவளுக்கு இருந்தது. அன்புமணியின் தாழ்மையும், உண்மையும், சுத்தமும், சுறுசுறுப்பும், ஈகையும், இரக்கமும் பெண்களில் காணப்படுவது எவ்வளவு நலம்! சிலர் "உண்ட வயிற்றுக்குச் சோறும், மொட்டைத் தலைக்கு எண்ணெயும்" என்றாற்போல பொருள் சகாயம் பெற்றுக் கொள்ள அவசரமில்லாதவர்களுக்குக் கொடுக்கிறார்கள். இது டம்பாசாரித்தனமென்றே சொல்லவேண்டும். ஆகையால் பொருளை வைத்துக் கொண்டு யாசகம் எடுக்கிற மாய்மாலருக்கும், பாட்டுகள் பாடத்தக்க திட தேகிகளுக்கும், முகஸ்துதி பேசுவோருக்கும் பிச்சை கொடுப்பது சரியல்ல. அப்படிப்பட்டவர்களுக்குப் பிச்சைகொடுப்பதினால் பொருளாசை, சோம்பல், பொய் முதலிய துர்க்குணங்கள் விளைகின்றன.

ஆதலால் "பாத்திரமறிந்து பிச்சை கொடு, கோத்திரமறிந்து பெண்ணை எடு" என்ற முது உரைப்படி யாருமற்ற அகதிகளுக்கும், பரதேசிகளுக்கும், பாடுபடச் சக்தியில்லாதவர்களுக்கும், முடவர், குருடர் முதலிய அங்கவீனருக்கும், வியாதியஸ்தர், விருத்தாப்பியர், தாய் தகப்பனற்ற அநாதப் பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும், வாழ்ந்து வறிஞரானவர்களுக்கும் தர்மம் கொடுக்கவேண்டியது கடமை.

சிலர் தங்கள் வீடுகளில் எவ்வளவு வீண் செலவுகள் செய்தபோதிலும் "எலும்பெடுத்துப் போவதற்குத் தடியெடுத்து நின்றாற்போல" ஏழைகளுக்குத் தர்மம் செய்யச் சற்றும் சகிக்காதவர்களாய் அவர்களைத் தூஷித்துத் துரத்திவிடுகிறார்கள். இது தர்மமா? மேலும் பிசினித்தனம் மீத்துவைக்குமல்லல. பிச்சைக்காரனைப் பட்டினியாய் விட்டு, மிஞ்சினதை எனக்காகவும், என் பிள்ளைகளுக்காகவும் பத்திரப்படுத்துவேனென்று நினையாதே. கர்த்தரிடத்தில் சேர்த்துவைக்காதது பிசாசுக்காக வைக்கப்படும். ஏழைகள் கர்த்தருடைய பொக்கிஷப் பெட்டி; அவர்களுக்குக் கொடுப்பது வீண் போகாது. "தரித்திரனுக்குத் தயைசெய்கிறவன் கர்த்தரைக் கனம்பண்ணுகிறான்." (நீதி. 14. 31.) "கருணைக் கண்ணன் ஆசீர்வதிக்கப்படுவான், ஏனென்றால், அவன் தன் ஆகாரத்தில் தரித்திரனுக்குக் கொடுக்கிறான்." (நீதி. 22. 9.) "ஈகையுடையோன் வக்களிப்புடையோன்."

சிநேகிதனே! நீ யோபைப்போல, "முறையிடுகிற ஏழையையும் திக்கற்ற பிள்ளையையும், உதவியற்றவனையும் இரட்சித்தேன். கெட்டுப்



போக இருந்தவனுடைய ஆசீர்வாதம் என்மேல் வந்தது. விதவையின் இருதயத்தைக் கெம்பீரிக்கப்பண்ணினேன். நீதியைத் தரித்துக்கொண்டேன்; அது எனக்கு உடுப்பாயிருந்தது. என் நியாயம் எனக்குச் சால்வையும் பாகையுமாயிருந்தது. நான் குருடனுக்குக் கண்ணும், சப்பாணிக்குக் காலுமாயிருந்தேன். நான் எளியவர்களுக்குத் தகப்பனாயிருந்து நான் அறியாத வழக்கை ஆராய்ந்துபார்த்தேன்" என்று உண்மையாய்ச் சொல்லக்கூடுமோ? இது விஷயத்தில் நீ கர்த்தரைக் கனம் பண்ணுகிறாயா? உன் கைகளின் பிரயாசத்தைக் கர்த்தர் ஆசீர்வதிக்க வேண்டுமென்று விரும்புகிறாயே. அப்படியானால் "உனக்கு விளைந்த பலன் எல்லாவற்றிலும் தசம பாகத்தைப் பிரித்து உன் வாசல்களில் வைக்கக்கடவாய். லேவியனும், (தேவ ஊழியனும்), உன் வாசல்களிலிருக்கிற பரதேசியும், திக்கற்றவனும், விதவையும் வந்து புசித்துத் திருப்தியடைவார்களாக; அப்பொழுது உன் கை செய்யும் வேலையிலெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார்." (உபா. 14. 27-29.)

## (2) தேவ ஊழியர்.

"தேவனுக்கு முன்பாகப் பாத்திரமானபடி நீ அவர்களை வழிவிட்டனுப்பினால் நலமாயிருக்கும், ஏனென்றால் அவர்கள் புறஜாதிகளிடத்தில் ஒன்றும் வாங்காமல் அவருடைய நாமத்தினிமித்தம் புறப்பட்டுப் போனார்கள். ஆகையால் நாம் சத்தியத்திற்கு உடன் வேலையாட்களாயிருக்கும்படி அப்படிப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கடனாளிகளாயிருக்கிறோம்" என்று யோவான் அப்போஸ்தலன் எழுதுகிறார். (3 யோவான். 6-8.)

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களும் தேவ வசனத்தைப் போதிக்கிறவர்களுமாகிய மிஷனெரிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள் முதலிய தேவ ஊழியருக்கும் அவருடைய குடும்பங்களுக்கும் விசுவாசிகள் பணச் சகாயம் செய்வதினால் தேவ பணிவிடையில் தங்களையும் ஐக்கியப்படுத்திக்கொள்ளவேண்டும். சுவிசேஷ பிரபல்லிய வேலையின் உத்திரவாதம் சில மனிதரை மட்டுமல்ல, கிறிஸ்து சபையின் அவயவங்களான ஒவ்வொரு விசுவாசியையும் பொறுத்தது. ஆகையால் சபை மொத்தமாயும், அதின் அங்கங்கள் தனித்தனியேயும் சத்தியத்திற்கு உடன் வேலையாட்களாயிருக்கும்படி அவரவருக்குத் தேவனளித்த கிருபையின்படி தேவ ஊழியருக்கும், ஆத்துமாக்களின் நன்மையை நாடி உழைக்கும் வேதாகம சங்கம், சன்மார்க்கப் புஸ்தகச் சங்கம், சுவிசேஷ பிரபல்லிய சங்கம், இந்திய மிஷனெரி சங்கம், இவைபோன்ற பரோபகார சங்கங்களுக்கும் எல்லா நல் முயற்சிகளுக்

கும் பொருள் சகாயம் செய்யவேண்டியதுண்டு. ஆனால் "முதலாவதாக தர்மம் வீட்டிலே தொடங்குகிறது" என்ற அங்கிலேய பழமொழிப்படி சபைகள் முதலாவது தங்கள் நடுவில் வேலை செய்யும் தேவ ஊழியரைப் பராமரிக்கும் நிலைமைக்கு வந்தபின்பு பரோபகாரம் செய்வது நியாயம்.

"திரு வசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்கு சகல நன்மையிலும் பகிர்ந்துகொடுக்கக் கடவன்" என்று ஆவியானவர் கற்பிக்கிறார். (கலா. 6. 6.) இவ்வசனத்தின் கருத்து ஒருவாறு விளங்கத்தக்க விதமாய் பவுல் அப்போஸ்தலன், "பிலிப்பியரே, சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள் மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நான் தெசலோனிக்கேயிலிருந்த போதும் என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள்" என்று சொல்லுகிறார். (பிலி. 4. 15, 16.)

ஆவிக்குரிய காரியங்களில் விசுவாசிகளைப் போதிக்கும் தேவ ஊழியருடைய சரீர சம்ரக்ஷணைக்கு வேண்டிய பொருள் சகாயம் செய்வது தங்கள் கடமை யென்று பிலிப்பிய சபையார் அறிந்திருந்தார்கள். கிறிஸ்தவர்கள் தங்கள் சகல நன்மைகளிலும் தேவ ஊழியக்காரருக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்னும் உபதேசத்தை, அப்போஸ்தலர் தங்கள் பிழைப்புக்காக வேதத்தின் ஊடே தந்திரமாய் நுழைத்துவிட்ட போதனைபோல சிலர் அற்பமாய் எண்ணுகிறார்கள். ஆனால் அது, "சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்" (1 கொரி. 9. 14) என்றபடி தேவ கட்டளையாக மட்டுமல்ல, நியாயப் பிரமாணச் சட்டமாகவும் தீர்க்கதரிசன எச்சரிப்பாகவும் இருக்கிறது. எப்படியென்றால் தேவ மகிமை விளங்கும் கிறிஸ்தவ சபைக்கு முன்னடையாளமாக, மீட்கப்பட்ட இஸ்ரவேலரின் நடுவே தேவன் தாம் வாசம் செய்வதற்கென்று பூர்வத்தில் கட்டின ஆலயத்தின் திருப்பணிவிடைக்காக லேவியரை அழைத்து, ஏற்படுத்தினபோது நிலத்தின் விளைவிலும், விருட்சங்களின் கனியிலும், கோலின் கீழ்ப்பட்ட ஆடு மாடுகளிலும் பத்திலொரு பங்கும், முதற் பலன்களில் உச்சிதமானதும் கர்த்தருக்குக் காணிக்கையாக எடுத்துப் படைக்கப்பட்டு, லேவியருக்கு ஆலயத்தின் பணிவிடைக்கு ஈடான சம்பளமாகக் கொடுக்கவேண்டுமென்றும், "நீ உன் தேசத்திலிருக்கும் நாளெல்லாம் லேவியனைக் கைவிடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" என்றும், "கர்த்



தருக்கு இடப்படும் தசம பலிகளையும், அவருக்குச் சுதந்தரமானவைகளையும் அவர்கள் புசிப்பார்களாக; "ஜனங்கள் பலியிடும் ஆடுமாடுகளில் முன்னந் தொடையையும், தாடைகளையும், இரைப்பையையும் ஆசாரியனுக்குக் கொடுக்கவேண்டும். உன் தானியம் திராட்ச ரசம், எண்ணெய், ஆட்டுரோமம் என்னும் இவைகளின் முதற் பலனையும் அவனுக்குக் கொடுக்கவேண்டும்" என்றும் இஸ்ரவேலருக்குக் கட்டளையிட்டிருந்தார் (எண். 18. 24, 31; உபா. 12. 19; உபா. 18. 1, 4.) இவ்விதமாய் இஸ்ரவேலரான கர்த்தருடைய ஜனங்கள் செய்து தங்கள் நடுவிலிருந்த தேவ ஊழியருக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுத்தார்கள்.

அவர்கள் பெற்ற தேவ ஈவுகளில் உச்சிதமானதும் கொழுமையானதும் அவருடைய பங்காகவும், அவருடைய ஊழியரின் சுதந்தரமாகவுமிருந்தன. கர்த்தரை நமது பங்காளியாக்கிக்கொள்வது எவ்வளவு மேன்மை? நமது வெள்ளாண்மை விளைச்சல்களிலும், வியாபாரத் தொழில்களிலும் கர்த்தருக்கும் ஒரு பங்கு கொடுப்பதாய்த் தீர்மானித்து அதை ஒழுங்காய்க் கொடுத்து வருவது நமக்கு அதிக ஆசீர்வாதமாக இருக்குமென்பதற்கு ஐயமில்லை. அவர் தம்முடைய பங்கில் நஷ்டப்பட ஒருக்காலும் விரும்பார். அவருக்கு நஷ்டம் நேரிடுகிறதில்லையானால் அவருடன் பங்காளிகளாகிய நமக்கு நஷ்டம் நேரிடுமோ?

மேற்கூறிய வசனங்களில் தேவன் தமது ஊழியரின் பராமரிப்பைப்பற்றி வெகு கவனம் செலுத்துகிறாரென்று மட்டுமல்ல, அவர்களைப் பராமரிக்கும் பெரிய உத்திரவாதத்தைத் தமது ஜனங்கள்மேல் வைத்திருக்கிறாரென்றும் அறிகிறோம்.

சிநேகிதனே! உன்னுடைய கொழுமையானது அல்லது முதற்றரமான யாவும் கர்த்தருடையது. உன்னுடைய முதற்றரமானவைகளைக் கேட்கிறவர் யார்? தம்முடைய முதற்பேறான நேசகுமாரனை உனக்குக் கொடுத்தவரும், வாடாததும், அழியாததும், மாசற்றதுமான சுதந்தரத்துக்கென்று உன்னை மீட்டுக்கொண்டு தம்முடைய சொந்தப் பிள்ளையாக்கினவருமல்லவா? இஸ்ரவேலருக்குள் கொழுமையானது யாவும் கர்த்தருக்குச் சுதந்தர போசனையாகத் தகனிக்கப்பட்டது. ஆதலால் கொழுப்பை ஒருவனும் புசிக்கக்கூடாது. "கொழுப்பைப் புசிக்கிற எந்த ஆத்துமாவும் என் ஜனத்திலிராதபடி அறுப்புண்டு போவான்" (லேவி. 7. 25.) என்று கட்டளையிட்டார். நாம் முதற்றரமானவைகளையும், முதற் பலன்களையும் கர்த்தருக்குச் செலுத்திவருகிறோமா? அப்படியில்லையானால் அவருடையதை அபகரிக்கிறவர்களாயிருக்

கிறோமல்லவா? விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமுடைய கீழ்ப்படிதலும், விசுவாசமும், அவனுடைய முதற்பேறானவனை பலி செலுத்தக் கட்டளையிட்டதினால் பரீட்சிக்கப்பட்டது. நாமும் ஒருவேளை அப்படிப் பரீட்சிக்கப்படலாமே.

நம்மில் அநேகரைப்போல இஸ்ரவேலர் பிற்காலத்தில் சுய நயமுள்ளவர்களாகி தங்கள் கடமைகளை மறந்து, தேவ கட்டளையை மீறி, கொழுமையானவைகளைத் தங்களுக்கு வைத்துக்கொண்டு, ஊனமானதையும் நசல் கொண்டதையும் கர்த்தருக்குக் கொடுத்ததினாலே அவரை வஞ்சித்தபோது தேவன் மல்கியாத் தீர்க்கதரிசியின் மூலமாய் அவர்களை எச்சரித்து, "மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதினாலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசம பாகத்திலும் காணிக்கையிலும் தானே. என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசம பாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினாலே என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (மல்கி. 3. 8.) என்று தமது ஜனங்கள் சம்பூரண ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்சென்று தசமபாகமும் காணிக்கையும் கொடுப்பதினாலே தமது தயவைச் சோதித்துப் பார்க்கும்படி தூண்டிவிட்டார்.

ஆ! நாம் இப்படி எச்சரிக்கப்படவும், தூண்டி விடப்படவும் வேண்டிய நிலைமையிலில்லையா? தசம பாகமும் காணிக்கையும் கொடுத்து தேவ தயவைச் சோதித்துப்பார்ப்போமா? தசம பாகம் கொடுப்பதற்கு நாம் நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்களல்லவென்று சொல்லுவோமா? ஆம், நாம் கிருபைக்குட்பட்டவர்களாதலால், நமது பத்திலொன்று மட்டுமல்ல, கிறிஸ்தேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்ட நாமும் நமது யாவும் கர்த்தருக்கே சொந்தம். நமது ஜீவன், செல்வம் யாவும் அவருக்குத் தத்தம் செய்யப்படவேண்டியது நியாயம். நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டவர்கள் அவ்வளவு ஏராளமாயும் தாராளமாயும் கொடுக்கவேண்டுமானால் நாம் அதிலும் அதிகமாய் அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்பதை நிதானித்துக் கொள்வோமாக.

"கர்த்தர் தமது ஊழியரை எப்படியாகிலும் ஆதரிப்பார்" என்று அநேகர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அது மெய்தான். 'சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது." (சங். 34. 10.)



ஆனாலும் வேத சத்தியத்தின் ஒரு பாகத்தை மட்டும் பிடித்துக்கொண்டு மற்றொரு பாகத்தை விட்டு விடுவது மோசமான காரியம். எப்படியென்றால் ஆகாகியனான ஆமான் என்பவன் யூதரையெல்லாம் சங்காரம் செய்துவிடும்படி சட்டளை பிறப்பித்து, ஆகாஸ்வேர் இராஜாவின் அனுமதி பெற்றபோது மொர்தெகாய் இராணியாகிய எஸ்தரிடம் ஆள் அனுப்பி இராஜாவிடம் தன் ஜனங்களுக்காக மன்றாடும்படி சொன்ன சமயத்தில், எஸ்தர் "கர்த்தர் தமது ஜனத்தை ஆதரிப்பார்" என்று ஒருவேளை சொல்லியிருக்கலாம். ஆனால் அவளுடைய சிறிய தகப்பன் "நீ இக்காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும்; அப்பொழுது நீயும் உன் தகப்பன் வீட்டாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்திற்கு உதவியாயிருக்கும்படி உனக்கு இராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்," என்று சொல்லச் சொன்னான். (எஸ். 4. 14.)

இவ்வசனத்தில் ஒரு விசேஷித்த சத்தியம் அடங்கியிருக்கிறது. கர்த்தர் மற்றவர்கள் விஷயமாய் ஆவிக்குரிய காரியமானாலும், சரீரத்துக்குரிய காரியமானாலும் தம்முடைய கிருபையின் நோக்கங்களை நிறைவேற்றும்படி தமது பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஏதுவையும் சமயத்தையும் நியமித்திருக்கிறார். அந்த ஏதுக்களை உபயோகிக்காமல் அப்படிப்பட்ட சமயங்களைத் தவற விடும்போது நாம் பெரிய நஷ்டமடைகிறோமென்பதற்கு ஐயமில்லை. ஆனாலும் கர்த்தர் அதை நிறைவேற்றத்தக்க ஏதுவை வேறொரு இடத்திலிருந்து எழுப்புகிறார். ஏனென்றால் நிறைவேற்ற சரியான ஆளில்லை என்னும் காரணத்தினிமித்தம் தேவ நோக்கங்களும் தீர்மானங்களும் தவறிப்போகிறதில்லை. ஆகையால் நம்முடைய கவலைத் தாழ்ச்சிக்கும் ஈகையின்மைக்கும் போக்காக "கர்த்தர் தமது ஊழியரை ஆதரிப்பார்" என்று சொல்லிக்கொண்டிராமல், தேவ ஊழியரை ஆதரிக்கும் உத்திரவாதத்தைக் கர்த்தர் நமதுபேரில் சுமத்தியிருக்கிறார் என்பதை உணர்ந்து, அவருடைய வசனங்களைக் கைக்கொண்டு, ஆவியானவருடைய தூண்டுதலுக்குக் கீழ்ப்படிந்து, எப்போதானாலும் எங்கேயானாலும் மற்றவர்களுக்குச் செய்யும்படி கர்த்தர் நமக்கு நியமித்த விஷயமுண்டோ என்று தேடி, நாம் அறிந்தமட்டில் அதை உண்மையோடு நிறைவேற்றப் பிரயாசப்படுவோமாக.

சுவிசேஷ ஊழியம் செய்துகொண்டு ஊரூராய்ப் பிரயாணம் செய்துவந்த சேனாவையும் அப்பொல்லோவையும் குறித்துப் பவுல் அப்போஸ்தலன் தீத்துவுக்கு எழுதுவதில் "நியாய சாஸ்திரியாகிய சேனாவுக்கும் அப்பொல்லோவுக்கும் ஒரு குறைவுமில்லாதபடிக்கு அவர்

களை ஜாக்கிரதையாய் விசாரித்து வழிவிட்டனுப்பு." "நம்முடையவர்களும் கனியற்றவர்களாயிராதபடி குறைவுகளை நீக்குகிறதற்கேதுவாக நற்கிரியைகளைச் செய்யப் பழகட்டும்" (தீத்து. 3. 13, 14.) என்று சொல்லுகிறார். இப்போதனை நமது நடுவில் சரியானபடி கைக்கொள்ளப்பட்டு வருகிறதா? கர்த்தருடைய திராட்சத் தோட்டத்தின் வேலையாட்கள் அடிக்கடி நமது பக்கமாய் வந்து போகிறார்கள். அவர்கள் யாசகரல்ல; இரவும் பகலும் உழைக்கிறார்கள். நாம் அவர்களுக்குக் கொடுக்கக்கூடியவைகள் ஏதேனுமுண்டா? யாதொன்றும் அவர்களுக்குக் குறைவில்லாதபடி நாம் அவர்களைக் குறித்துக் கவலை எடுத்துக்கொண்டதுண்டா? அவர்கள் தங்கள் குறைவில் மனுஷரிடத்திலல்ல தேவனிடத்தில் கேட்கிறார்கள். ஒத்தாசை வரவேண்டிய உன் வழியாய் அது வராவிட்டாலும், அது வேறு வழியாய் வரும். அவர்களுடைய குறைவுகள் நிவிர்த்தி செய்யப்பட்டதைக் குறித்து நீ கேள்விப்பட்டு, ஒருவேளை சந்தோஷப்பட்டுக் கொள்ளுவாய். ஆனாலும் நீ உதவிசெய்யத் தவறிப்போன அந்தச் சமயம் நித்தியத்தில் உன்னுடைய பெரிய நஷ்டம் என்பதை மறந்துவிடாதே.

சேனாவுக்கும் அப்பொல்லோவுக்கும் பிரயாணத்தில் யாதொன்று தேவையிருந்தால் தீத்து அவர்களுக்குத் தேவையானதைக் கர்த்தர் கொடுப்பாரென்று நான் நம்பியிருக்கிறேன் என்று சொல்லுவது மட்டும் போதாது. முதலாவது அவர்களுக்கு என்ன தேவையாயிருக்கிறதென்று அவன் விசாரித்து அறியவேண்டும்.

இரண்டாவது, அந்தக் குறைவை நிவிர்த்திக்கப் பிரயத்தனம் செய்யவேண்டும். அப்பிரயத்தனம் என்னவென்பதையும் அப்போஸ்தலன் தீத்துவுக்கு எழுதினார்.

"நம்முடையவர்களும்" (அதாவது நம்மைப்போன்ற விசுவாசிகளும்). இது பரத்துக்குரிய ஐக்கியத்தைக் காட்டும் வார்த்தைகள். "நம்முடையவர்களும்" (ஏனென்றால் நாம் ஒருவருக்கொருவர் சொந்தம்.) கனியற்றவர்களாயிராதபடிக்குக் குறைவுகளை நீக்குகிறதற்கேதுவாக நற்கிரியைகளைச் செய்யப் பழகட்டும்" என்கிறார். இதினால் தேவ ஊழியரின் குறைவுகளை நீக்கும்படி ஒருவன் பொருள் சகாயம் செய்யும் ஒவ்வொரு சமயத்திலும் தேவனுடைய மகிமைக்கேதுவான நற்கிரியைகளாகிய கனிகளைக் கொடுக்கிறானென்று அறிகிறோம். கர்த்தர் தம்மை நம்பினவர்களை எவ்விதத்திலாகிலும் ஆதரிக்கிறார். என்றாலும் "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது." (மத். 5. 16.)



ஜெர்மனியா தேசத்தில் ஒரு ஏழை நெசவுகாரனிருந்தான். அவன் காசுபணமில்லாதவனாயிருந்தும் ஈகை இரக்கமுள்ளவனும் கர்த்தருக்குள் ஐசுவரியவானுமாயிருந்தான். அவன் எக்காலத்திலும் கர்த்தர்மேல் தன் நம்பிக்கையை வைத்திருந்தபடியால், அவன் போக்குநீக்கற்றுப் புலம்பவேண்டிய வேளைகளிலும் முறுமுறுப்பான யாதொரு வார்த்தையும் பேசாமல், "கர்த்தர் ஆதரிப்பார்" என்று சொல்லுவது வழக்கம். கர்த்தர் அவனைக் கைவிட்டாரென்று பிரத்தியட்சமாய்க் காணப்படும்பொழுதும், "கர்த்தர் ஆதரிப்பார்" என்றே சொல்லிக்கொள்வான்.

அந்நாட்டில் கொடிய பஞ்சமுண்டானது. வியாபாரங்கள் குறைவுபட்டது. தொழிற்சாலைகளில் வேலைகள் நின்றுபோயிற்று. அநேக கூலிக்காரர் தங்கள் வேலைகளிலிருந்து தள்ளப்பட்டார்கள். இந்த நெசவுகாரனையும் அவன் எஜமான் வேலையிலிருந்து தள்ளிவிட்டான். அவன் எவ்வளவாய் எஜமானைக் கெஞ்சிக் கேட்டபோதிலும் அவன் மனதிரங்கவில்லை. என்றாலும் நெசவுகாரன் விசுவாசத்தில் உறுதியுடையவனாய் "கர்த்தர் ஆதரிப்பார்" என்று சொல்லிக்கொண்டு தன் வீட்டுக்குவந்தான். நடந்த சங்கதியைக் கேட்ட அவன் மனைவி துக்கசாகரத்தில் மூழ்கி அதிகமாய்ப் புலம்பினாள். அப்பொழுது அவன் திடநம்பிக்கையோடு "கர்த்தர் ஆதரிப்பார்" என்று சொல்லி அவளைத்தேற்றினான். கொடிய பஞ்சமும், மிதமிஞ்சின தரித்திரமும், கடும்பசியும் அவன் விசுவாசத்தை அசைக்கவில்லை. வீட்டிலுள்ளவைகளையெல்லாம் விற்றுத்தின்றாயிற்று; இனி ஒன்றுமில்லை. அவன் சமுசாரம் பிள்ளைகளோடு தன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் தளர்ந்துபோகாமல் தைரியமாயிருக்கும்படி புத்திசொல்லி தன் வழக்கம்போல "கர்த்தர் ஆதரிப்பார்" என்று சொன்னான். தெருப்புறத்தில் அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு துஷ்டப்பையன் ஜன்னல்வழியாய் ஒரு செத்த காக்கையை அவனிடத்தில் தூக்கி எறிந்து, ஓ! பரிசுத்தவானே! இதோ உனக்கு ஆகாரம் என்று சொல்லி ஓடிப்போய்விட்டான். ஏழை நெசவுகாரன் அதை எடுத்து, ஐயோ, ஏழைப்பறவையே! நீயும் பசியினாலே இறந்துபோனாயோவென்று பரிதபித்து அதைத் தடவிக்கொடுத்தான். அது பசியினால் இறந்ததோ அல்லவோ என்றறியும்படி அதின் இரைப்பையையும் குரல்வளையையும் தடவிப் பார்க்கையில் ஏதோ கடினமான வஸ்து ஒன்று அதின் குரல்வளையில் சிக்கியிருப்பதாகத் தோன்றினது. காக்கையைக்கொன்ற கடும்பதார்த்தமென்னவென்றறியும்படி அதை அறுத்தபொழுது அதில் ஒரு தங்கச்சரடு இருந்தது. மனைவி ஆச்சரியத்தால் வாய்குளறினாள். அவனோ "கர்த்தர் ஆதரிப்பார்" என்று சொல்

வித் தனக்கு அறிமுகமான ஒரு தட்டானிடத்தில் அதைக் கொண்டுபோய் அது கிடைத்த விதத்தைச்சொன்னான். தட்டான் அதைச் சரியாய்ப் பரிசோதித்துப் பார்ப்பதாக ஒப்புக்கொண்டு அவனுடைய செலவுக்கு ரூபாய் 5 கொடுத்து அனுப்பினான். அவன் அதைச் சுத்தம் பண்ணிப் பார்த்தபோது அதின் சொந்தக்காரன் பேரைக்கண்டு நெசவுகாரனுக்குத் தெரிவித்தான். அது, தன்னை வேலையிலிருந்து தள்ளிவிட்ட எஜமானனுடைய பெயர் என்று அவன் கண்டு மெத்தச் சந்தோஷமாய் அதை வாங்கிக்கொண்டுபோய் அவனிடத்தில் கொடுத்தான். அப்பொழுது அந்தப் பெரியமனிதனும் அவன் வீட்டாரும் பேரானந்தமடைந்ததுமன்றி அந்த எஜமான் நெசவுகாரனுக்குச்செய்த கொடுமையையும், தான் மனப்பூர்வமாய் அவனுக்கு உதவிசெய்யக்கூடிய சமயத்தை இழந்து போனதையும் குறித்து வெட்கப்பட்டு, அவனைப் பார்த்து, அப்பா! நீ சொன்னபடி கர்த்தர் தம்முடையவர்களை எப்படியும் ஆதரிக்கிறார். உன் உண்மைக்காக நான் இப்போது கொடுக்கும் வெகுமதியை ஏற்றுக்கொள். கர்த்தரால் ஆதரிக்கப்படுகிற உன்னை நான் அனுப்பிவிட்டது என் பிசகு, இனி உனக்கு ஒரு குறைவும் நேரிடாது என்றான். உயிருள்ள காக்கையினால் கர்த்தர் எலியாவைப் போஷித்ததுபோல், உன்னைக்கொண்டு தமது ஊழியரைப் போஷிக்கவில்லையானால், அவர் செத்த காக்கைக்கு ஒப்பான அற்பரையும் எளியவர்களையும்கொண்டு அவர்களைப் போஷிக்கிறார் என்பதைச் சிந்தித்துக்கொள்.

தேவ ஊழியர் நமது பொருளின்மேல் சுதந்தரமுடையவர்களாயும், நமது ஈகை இரக்கங்களைப் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயுமிருக்கிறார்களென்பதையும், அவர்களுடைய குறைவுகளை நீக்கும்படி நாம [illegible]ரமாய்க் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோமென்பதையும் இந்திய கிறிஸ்தவர்களாகிய நாம் அறிந்து நடந்துகொள்ளாததினிமித்தமே நமது சபையின் ஊழியரை அன்னியர் சம்ரக்ஷணை செய்யவும், இந்தியாவிலிருந்து புறதேசங்களுக்குத் தேவ ஊழியர் அனுப்பப்பட ஏதுவில்லாமலும் இருக்கிறது. இவ்விஷயத்தில் அங்கிலேயரும், அமெரிக்கருமாகிய நமது சகோதரர் தேவ கிருபையினால் நமக்கு நல்ல முன்மாதிரிகளாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். என்றாலும், "உங்களுக்கு ஊழியம் செய்யும்படிக்கு மற்ற சபைகளிடத்தில் சம்பளத்தைப்பெற்று அவர்களைக் கொள்ளையிட்டேன்" என்று அப்போஸ்தலன் சொல்லுவதுபோல நமது சபையின் ஊழியரும் "உங்களுக்கு ஊழியம் செய்யும்படிக்கு அங்கிலேய அல்லது அமெரிக்க சபைகளிடத்தில் சம்பளத்தைப்பெற்று அவர்களைக் கொள்ளையிட்டோம்" என்று வெட்கத்தோடு சொல்லவேண்டியதிருக்கிறது எவ்வளவு பரிதாபம்!



இது பணமில்லாமையினாலோ, அல்லது ஈகை யில்லாமையினாலோ? மனமில்லாமையினாலும், ஈகை யில்லாமையினாலுமே. சிலருக்குப் பணம் அதிகமுண்டு. ஆனால் தங்களுக்கு இருக்கிறதை அநுபவிக்கவும் தேவ ஊழியருக்குக் கொடுக்கவும் அவர்களுக்கு மனமில்லை. அவர்கள் தங்கள் பணத்தைத் தொடக்கூடாது. அதைத் தொட்டால் மம்மோன் என்கிற அவர்கள் சுவாமி கோபித்துக்கொள்ளும். சிலர் எவ்வளவு அதிகமிருந்தாலும், வெகு பிரயாசத்தின்பேரில் சங்கப்பணம், அல்லது கையொப்பப்பணம் வருஷவாரி அணா எட்டு, அல்லது ரூபாய் ஒன்று கொடுத்து, தாங்கள் கர்த்தருக்கென்று பெரிய காரியம் செய்துவிட்டதாக எண்ணுகிறார்கள். ஐயோ, இதுவா கிறிஸ்தவ ஈகை? ஈகையற்ற சிநேகிதனே! உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இன்று இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படுமானால் நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்? தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராத உன் காரியம் என்னவாகும்? உன் சம்பளம் உயர்ந்ததினாலும், உன் நஞ்சை நன்றாய் விளைந்ததினாலும், நீ களஞ்சியத்தை இடித்துப் பெரிதாய்க் கட்டினதினாலும் யாதொரு கெடுதியுமில்லை. ஆனால் தேவ ஈவை அவருடைய மகிமைக்கேதுவாக சற்பிரயோகம் செய்யாமல், தன்னயத்தோடு வைத்துக்கொள்வதே குற்றம்.

அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 9-ம் அதிகாரத்தில் கிறிஸ்தவர்களால் தேவ ஊழியர் பராமரிக்கப்படவேண்டுமென்பதைப் பற்றி நியாயதோரணையாய்ப் பேசுகிறார்.

முதலாவது. "எவன் தன் சொந்தப்பணத்தைச் செலவழித்து தண்டிலே சேவகம்பண்ணுவான்? எவன் திராட்சத்தோட்டத்தை யுண்டாக்கி அதின் கனியில் புசியாதிருப்பான்? எவன் மந்தையை மேய்த்து அதின் பாலைச்சாப்பிடாதிருப்பான்?" என்று இயற்கைக்குரிய மூன்று உதாரணங்களை எடுத்துச்சொல்லுகிறார்.

இரண்டாவது. "இவைகளை மனுஷர் வழக்கத்தின்படி சொல்லுகிறேனோ, நியாயப்பிரமாணமும் இவைகளைச் சொல்லுகிறதில்லையா" என்று நியாயப்பிரமாணத்தினால் அதை உறுதிப்படுத்துகிறார்.

மூன்றாவது. "நாங்கள் உங்களுக்கு ஞான நன்மைகளை விதைத்திருக்க உங்கள் சரீர நன்மைகளை அறுத்தால் அது பெரியகாரியமா?" என்பதினால் விதைக்கிறவன் அதின் பலனை அறுக்க சுதந்தரமுடையவனாயிருக்கிறதுபோல ஆத்தும நன்மைகளை விதைக்கிற தேவ ஊழியன் கிறிஸ்தவர்களுடைய சரீரநன்மைகளாகிய பலனை அறுக்க அதிக சுதந்தரமுடையவன் என்று ரூபிக்கிறார்.

நாலாவது. "ஆசாரிய ஊழியஞ் செய்கிறவர்கள் தேவாலயத்துக்குரியவைகளில் புசிக்கிறார்களென்றும், பலிபீடத்தை அடுத்துப் பணிவிடைசெய்கிறவர்களுக்குப் பலிபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா"? என்று யூதசபையில் முன் நடந்துவந்த வழக்கத்தைச் சாக்ஷியாகச் சொல்லி சுவிசேஷ ஊழியருக்குஞ் சுவிசேஷத்தினாலே பிழைப்புண்டாகவேண்டும் என்பதை ஸ்தாபிக்கிறார்.

போதிக்கப்படுகிறவன் போதிக்கிறவனுக்கு சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுப்பது ஆவிக்குரிய பலனைத் திரளாய் அறுப்பதற்கென்று விதைவிதைப்பதற்கொப்பாயிருக்கிறதென்றும், கெட்ட விதையை விதைத்து நல்ல பலனை எதிர்பார்ப்பது வஞ்சனையாகவும் பரிகாசமாகவுமிருக்கிறதுபோல, கிறிஸ்தவன் தன்னுடைய சகல நன்மைகளிலும் தேவ ஊழியருக்குப் பகிர்ந்து கொடுப்பதினாலே, ஆவிக்குரிய நற்கிரியைகளைச் செய்யாமல் நற்பலனை, தேவனிடத்தில் எதிர்பார்ப்பது தேவனை வஞ்சிப்பதாயும் பரிகாசம் செய்வதாயுமிருக்கிறதென்பதைக்காட்டும்படி, "மோசம் போகாதிருங்கள். தேவன் தம்மைப் பரிகாசம் செய்யவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். மாம்சத்துக்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான். நன்மை செய்வதில் சோர்ந்து போகாதிருப்போமாக" என்று சொல்லுகிறார். (கலா. 6. 6, 9.)

ஆனால் நான் தேவ ஊழியருக்குச் செய்யத்தக்க உதவி யாதொன்றுமில்லை, நான் மிகவும் ஏழை என்கிறீர்களாக்கும். இஸ்ரவேலில் மூன்று வருஷமும் ஆறுமாதமும் கொடிய பஞ்சமுண்டானபோது தேவ ஊழியனாகிய எலியா சரெப்தா ஊரிலிருந்த ஒரு ஏழை விதவையினிடத்தில் அனுப்பப்பட்டான் என்பதை நினைத்துக்கொள். இவ்விஷயத்தில் தேவன் முதலாவது தமது ஊழியனின் பராமரிப்பையும், இரண்டாவது அந்தத் திக்கற்ற விதவையின் பராமரிப்பையும் குறித்து கவனமுள்ளவராயிருந்தாரென்று அறிகிறோம். லூக்கா. 4-ம் அதிகாரத்தில் தெளிவாகிறபடி அந்த விதவை தேவன்மேல் விசுவாசமுள்ள ஒரு புறஜாதியாள். பஞ்சத்தினால் அவளுடைய ஜீவனார்த்தத்திற்குரிய யாவும் செலவாகிப்போயிற்று. அப்போது தேவ ஊழியன் பிரயாணத்தினால் களைத்தவனாயும், இளைத்தவனாயும் வந்து அவளிடத்தில் குடிக்கிறதற்குக் கொஞ்சம் தண்ணீர் கேட்டான். அதைக்கொண்டுவர அவள் போகிறபோது அவளைக் கூப்பிட்டு "ஒரு அப்பமும் உன் கையிலே எனக்குக் கொண்டுவா" என்றான். தேவ ஊழியனுடைய முதல் வேண்டுதலுக்கு மாறுத்தரமாக அவனுக்குப் பணிவிடைசெய்ய



விருப்பமுள்ளவளாய்ப் போனாள். ஆனால் அவனுடைய இரண்டாம் வேண்டுதலுக்கு மாறுத்தரமாக பானையிலே ஒரு பிடிமாவும், கலயத்திலே கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல் என்னிடத்தில் ஒரு அடையுமில்லை. "இதோ நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துவதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன்" என்று தன் கஷ்ட நிலைமையை வெளியிட்டாள்.

அப்போது "பயப்படாதே" என்ற வார்த்தையோடு தேவவாக்குப் பிறந்தது. ஆனாலும், "முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா" என்னும் கட்டளையும், அதற்குப் பின்பு "உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம். கர்த்தர் தேசத்திலே மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையின் மா செலவழிந்து போவதுமில்லை, கலசத்தின் எண்ணெய் குறைந்து போவதுமில்லை" என்கிற வாக்குத்தத்தமும் பிறப்பிக்கப்பட்டது. இது கர்த்தருடைய பிள்ளைகள் வெகுவாய்க் கவனிக்கவேண்டிய ஒரு சத்தியம். இது "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" என்கிற வாக்குத்தத்தமுள்ள கட்டளைக்கு ஒப்பானது. இவ்விதமாய் நாம் அடிக்கடி கிருபையுள்ள கர்த்தரால் பரீட்சிக்கப்பட்டு, கீழ்ப்படிதலால் நமது விசுவாசம் ரூபிக்கப்படுகிறது.

இயற்கைப் புத்தியின்படி கொடிய பஞ்சகாலத்தில் பானை நிறைந்த மாவைப்பற்றிய வெறும் வாக்கைவிட பானையிலிருக்கும் ஒரு பிடிமா மெத்த நல்லதுதான். ஆனால் விசுவாசத்திற்கோ அப்படியல்ல. அது காணப்படாதவைகளைக் கண்டதுபோலும், கையிலில்லாதவைகளைக் கையில் இருப்பதுபோலும் எண்ணிக் கிரியை செய்கிறது. விதவையின் கீழ்ப்படிதல் அவளுடைய விசுவாசத்தின் உண்மையை விளங்கச் செய்தது.

காணிக்கை கொடாதிருப்பதற்கு தங்கள் வறுமையைக் காரணமாய் சொல்லுவது பிசகு. இரட்சிப்பு அடைந்த ஏழைகளின் கொடைதான் கிறிஸ்து சபையை ஐசுவரியமுள்ளதாக்குகிறது. ஏனென்றால் தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு, அவர்கள் தேவ கிருபையைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். "கர்த்தர் பசியுள்ளவர்களை நன்மையினால் நிரப்பி, ஐசுவரியவான்களையோ வெறுமையாக அனுப்பிவிடுகிறார்" "ஐசுவரியவான் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்' என்று இயேசு சொல்லியபடி ஐசுவரியவான்கள் தேவ கிருபையைத் தேடுவதும் அதைப் பெற்றுக்கொள்வதும் மிக

வும் அரிது. ஆகையால் தேவ கிருபையைப் பெற்றவர்களும் தங்கள் தரித்திரத்தைப் போக்காகச் சொல்லாமல் தங்கள் பரிபூரண சந்தோஷத்திலிருந்து கொடுப்பார்கள். "ஒருவனுக்கு மனமிருந்தால் அவனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின்படியே அங்கிகரிக்கப்படும்" (2 கொரி. 8. 12.) என்று ஆவியானவர் உரைத்தபடி ஏழைகளால் அவர்கள் நிலைமைக்குத் தக்கபடி கொடுக்கப்பட்ட ஈவுகளாலேயே தேவசபை எக்காலத்திலும் ஆதரிக்கப்பட்டு வந்ததாக அறிகிறோம். ஆகையால் அறநெறியுடைய ஏழை எனக்கு ஐசுவரியமில்லையே என்று அங்கலாய்க்க வேண்டியதில்லை. ஏனென்றால் ஐசுவரியத்திலும் அறநெறியே மேலானது.

மேலும் தேவகுமாரன் மகிமை பொருந்தினவராயும், அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்க பலனளிக்கிறவராயும் நியாயாசனத்தில் வீற்றிருக்கும்போது தமது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து, "சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டுப் பிசாசுக்காகவும் அவன் தூதருக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்." "பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனம் கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை; அந்நியனாயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை; வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரம் கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனாயும், காவலில் வைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்கவில்லை" என்பார். அப்பொழுது அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக, ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும், வஸ்திரமில்லாதவராகவும், வியாதிப்பட்டவராகவும், காவலிலடைக்கப்பட்டவராகவும் நாங்கள் எப்போது கண்டு உமக்கு உதவிசெய்யாதிருந்தோமென்பார்கள். அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருக்கிறீர்களோ அதை எனக்கே செய்யாதிருக்கிறீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். (மத். 25. 41-45.)

ஓ! இது எவ்வளவு கடினமும் இரக்கமுமற்ற தீர்ப்பு. தன் பொருளை உதாரித்தனமாய்ச் செலவிடாததற்காக இப்படிப்பட்ட தண்டனை நியாயமா?

ஆம்! வன்கண்ணனும், ஈகையற்றவனுமாய் நடந்துகொண்டவனுக்கு இரக்கமற்ற தீர்ப்புச்செய்ய வேண்டியது நியாயம்தானே. "நீ எந்த அளவினால் அளக்கிறாயோ அந்த அளவினால் உனக்கு அளக்கப்படும்" அல்லவோ? ஈகையில்லாத ஒருவன் தன் உக்கிராண வேலை



யில் வஞ்சகனும், கிறிஸ்துவின் அன்பு இல்லாதவனும், கர்த்தரைக் கனம்பண்ணாதவனும், தேவகட்டளைக்குக் கீழ்ப்படியாதவனுமாயிருக்கிறபடியால் அவன் ஆக்கினைத் தீர்ப்படைய ஆட்சேபனை என்ன? "இரக்கமுள்ளவன் பாக்கியவான், அவன் இரக்கம் பெறுவான்." இரக்கம் செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும். நியாயத் தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும்" என்று வேதம் சொல்லுகிறதில்லையா? (மத். 5. 7; யாக். 2. 13.)

"உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்" என்றும், "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறபடியால் என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர்குடிக்கக் கொடுக்கிறவன் அதின் பலனை அடையாமற்போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றும் இயேசு சொல்லிய வார்த்தைகளை நினைத்துக்கொள்.

ஒரு துண்டு அப்பமல்ல, ஒருவேளை அதற்குக் காசு செலவு செய்யவேண்டியதிருக்கும். ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம். அது ஒரு காசும் செலவின்றி செய்யக்கூடிய உபகாரம். ஆனால் மனந்தான் தேவை. உள்ளான மனதோடு செய்யப்படும் உபகாரம் எவ்வளவு அற்பமானதானாலும் அதற்கும் பிரதிபலனுண்டென்பது இதில் காணப்படுகிறது.

அநேகவருஷங்களுக்கு முன்னே ஒரு அங்கிலேயப் பெண் பாரீஸ் நகரத்திலுள்ள ஒரு புரட்டெஸ்டான்டு கல்விசாலைக்குப் படிக்கும்படி அனுப்பப்பட்டிருந்தாள். பர்தொலோமேயுவின் திருநாளில் கிறிஸ்தவர்களுக்கு நேரிட்ட பெரிய சங்காரத்திற்கு சில தினங்களுக்கு முன் அந்தப் பெண்ணும் அவளுடைய சிநேகிதிகளான வேறுசிலரும் போர்ச்சேவகர் காவல் நின்ற ஒரு கோட்டைவாசலின் பக்கமாய் உலாவப் போயிருந்தார்கள். அங்கு காத்து நின்ற சேவகரில் ஒருவன் தன் காவல் ஸ்தானத்தில் நிற்கையில் வேறொரு சேவகன் வந்து அவன் ஸ்தானத்தில் நின்றுகொண்டு, அவனை விடுவித்தாலல்லாமல் எவ்வித காரணத்தினாலும் அவன் அந்த இடத்தைவிட்டுப் போகக்கூடாதென்றும், தன் இடத்தை விட்டுப் போகிறவன் சிரச்சேதம் பண்ணப்படவேண்டுமென்றும் கண்டிப்பான கட்டளையிருந்தது. அப்படியிருக்கும்போது காவலில் நின்ற சேவகரில் ஒருவன் சுகவீனப்பட்டு தாகத்தால் நாவறண்டு இந்தப் பெண்கள் பக்கமாய் நடந்து போகிறதைப் பார்த்து, "அம்மாமாரே! நான் தாகத்தால் செத்துப்போகிறேன், கொஞ்சம் தண்ணீர் கொடுத்து உதவுங்கள்" என்று கெஞ்சினான். அந்தப் பெண்க

ளோ ஒரு அற்பச்சேவகன் தங்களைத் தண்ணீர் கொண்டுவந்து கொடுக்க சொல்லத் துணிந்தானே என்று விசனத்தோடு அப்பாலே விலகிப் போனார்கள். ஆனால் அந்த அங்கிலேயப் பெண்ணோவென்றால் தன் சிநேகிதிகளை விட்டு விலகிப்போய் அவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தாள். அவன் மெத்த ஆவலுடன் அதை வாங்கித் தன் தாகத்தைத் தீர்த்துக்கொண்டு, அம்மா! உன் பெயரென்ன? நீ யார்? உன் வாசஸ்தலமெங்கே? என்று விசாரித்து அறிந்துகொண்டான். பின்பு அவள் தன் சிநேகிதிகளைத் தேடி அவர்களோடே போய்ச்சேர்ந்துகொண்டாள். அவர்களில் ஒருத்தி, நீ அந்தச் சேவகன் கேட்டபடி செய்யலாமாவென்று கோபித்தாள். வேறொருத்தி அந்த ஆடவனுக்குத் தண்ணீர் கொண்டுபோய்க் கொடுக்க உனக்கு வெட்கமில்லையா? என்றாள். மற்றவர்கள் பரிகாச வார்த்தைகளைச் சொல்லி கேலி பண்ணினார்கள். ஆனால் அந்த அங்கிலேயப் பெண்ணோ அவர்களுடைய கடுஞ்சொற்களையெல்லாம் சாந்தமாய்ச் சகித்துக்கொண்டாள். பர்த்தொலோமேயுவின் திருநாள் வந்தது. புரட்டெஸ்டாண்டார் எல்லாரும் சங்கரிக்கப்பட்டார்கள். ஆனால் அந்த போர்ச்சேவகன் தனக்கு ஒரு கலசம் தண்ணீர் கொடுத்து உதவி செய்த அங்கிலேயப் பெண்ணுக்கு யாதொரு சேதமும் நேரிடாதபடி காத்துக்கொண்டான். இப்படி அவள் இரக்கத்தோடு கொடுத்த ஒரு கலசம் தண்ணீருக்கு ஈடாகத் தன் ஜீவனைப் பெற்றுக்கொண்டாள்.

ஆகையால் கர்த்தருடைய நாமத்தினாலேவரும் தேவ ஊழியரை அல்லது ஏழைகளை அசட்டை செய்து அவர்களை ஏற்றுக்கொள்ளாமலும், போஷிக்காமலும் வன்கண்ணராயிருப்பது ஆக்கினைத் தீர்ப்புக்கேதுவான பாதகமாகவும், அவர்களுக்கு இரங்கி உதவிசெய்வது நித்திய ஜீவனுக்கேதுவான கிரியைகளாகவுமிருக்கிறதென்று வேதம் சொல்வதை மறந்துவிடக்கூடாது.

அதையிட்டே அப்போஸ்தலனும் "நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள். இப்படிப்பட்ட பலியின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்" (எபி. 13. 16.) என்று நம்மை எச்சரித்து வருகிறார்.



# ஈகையின் விதம்.

## அந்தரங்க ஈகை.

நீ தர்மம் செய்யும்போது மனுஷரால் புகழப்படுவதற்கு மாயக்காரர் ஆலயங்களிலும், வீதிகளிலும் செய்வதுபோல உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே. அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ தர்மம் செய்யும்போது உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு உன் வலதுகை செய்வதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார். (மத். 6. 2, 4.)

தற்பொழிவும் சுயகீர்த்தியுமுள்ள பரிசேயர் பிறர் புகழை நாடிச் சந்துக்களிலும், ஆலயங்களிலும் தாரை ஊதுவித்து தானதர்மம் செய்தார்கள். இந்தத் தற்பெருமை செய்கையைக் கர்த்தர் கண்டித்து மேற்சொல்லிய வசனங்களைக்கொண்டு தானதர்மம் செய்யும் விதத்தையும் அதின் நோக்கத்தையும் தமது சீஷருக்குப் போதித்தார்.

இதில் முதலாவது, தர்மச்செய்கை மனுஷரால் புகழப்படுவதற்கென்று செய்யப்படக் கூடாதென்றும்,

இரண்டாவது. செய்யப்படும் தர்மம் வெளியரங்கமாயல்ல அந்தரங்கமாய்ச் செய்யப்பட வேண்டுமென்றும்,

மூன்றாவது. அப்படி அந்தரங்கமாய்ச் செய்யப்படும் தர்மச்செய்கைக்கு தேவன் வெளியரங்கமாய்ப் பலனளிக்கிறாரென்றும்,

நாலாவது. வெளியரங்கமாய்த் தர்மம் செய்கிறவர்கள் மனுஷபுகழாகிய பலனை அடைகிறபடியால் தேவனிடத்தில் அவர்களுக்குப் பலனில்லையென்றும் அறிந்துகொள்ளுகிறோம்.

தேவன் மகிமைப்படவும், அவரிடத்தில் அதற்குரிய பலனை அடையவும் வேண்டுமென்கிற நோக்கமே கிறிஸ்தவ ஈகை அந்தரங்கமாயிருக்க வேண்டியதற்குக் காரணம். காணிக்கை கொடுக்கிறவர்கள் பேரை அச்சிட்டுப் பிரசுரம் செய்வதினால் அநேகர் அதிகமாயும் சந்தோஷமாயும் கொடுக்க ஏதுவிருக்குமென்று அவ்வழக்கம் சிலரால் கைக்கொள்ளப்பட்டு வருகிறது. அதினால் சிலர் மற்றவர்களைவிட தாங்கள் கொடையாளிகளாகக் காணப்படும்படி அதிகம் கொடுக்க ஏதுவிருக்கிறது மெய்தான். ஆனால் அப்படிச் செய்வது நல்லதல்ல.

ஏனென்றால், அது தேவசித்தமல்ல. ஆகையால் காணிக்கைகள் சேகரிக்கிற விஷயத்தில் ஜனங்கள் எப்படி அதிகம் கொடுக்கக்கூடுமென்பதை உத்தேசித்து, தேவ சித்தத்திற்கு விரோதமான வழிகளை உபயோகிக்காமல் கிறிஸ்தவர்கள் தங்கள் கடமைகளை தேவசித்தப்படி நிறைவேற்றப் போதிப்பதே நலம். அதுவே தேவ ஆலயமாகிய சபையைக்கட்டும் ஊழியன் செய்யவேண்டிய முதல்வேலை. (யாத். 25. 2) தற்கால சபையில் பெரும்பாகம் பிறர் பார்த்துப் புகழும் நோக்கத்தோடு செய்யப்படுவதற்கேதுவான எத்தனங்கள் உபயோகிக்கப்படுகின்றன. அதினிமித்தம் சிலர் அதிகம் கொடுக்கிறார்கள், சிலர் மற்றவர்களைவிட தாங்கள் அதிகம் கொடுக்கவேண்டும். இல்லையானால் கொடுக்கக்கூடாதென்றிருக்கிறார்கள்.

ஒரு தாய் தன் பிள்ளைக்குப் பசியாயிருக்கும் சமயங்களைக் கவனித்து அன்போடு பால்கொடுத்து பிள்ளை சுகவீனப்படுகிறதானால் அதிக கவலையுள்ளவளாய் தன் சுகத்தையும் கவனியாமல் அதைச் சுகத்தோடும் பெலத்தோடும் ஆதரிக்கிறாள். ஆனால் அந்தத் தாய்: என் பிள்ளையை அன்போடு மார்பில் அணைத்துக்கொண்டேன், நான் பால் கொடுத்து அதின் பசியை ஆற்றினேன். இராப்பகல் விழித்திருந்து அதின் சுகவீனகாலத்தில் ஆதரித்தேன் என்று சமாச்சாரக் கடிதங்களில் அச்சிட்டுப் பிரசுரம் செய்வாளா? அவள் தெருவில் நின்று தன் பிள்ளைக்குப் பால்கொடுத்து வளர்த்ததையும், மார்போடு அணைத்துக் கொண்டதையும், சுகவீனகாலத்தில் கவலையாய் ஆதரித்ததையும் குறித்துப் பெண்களுக்குள் பெருமையாய்ப் பேசுவாளானால் அப்பெண்கள் கைகொட்டிச் சிரித்து, நீ உன் பிள்ளைக்குப் பால்கொடுத்து மார்போடணைத்துக்கொண்டது பெரிய காரியமோ? மற்றத் தாய்மார் அப்படிச் செய்யமாட்டார்களோ? நீ மட்டும் உன் பிள்ளைக்கு விசேஷமாய்ச் செய்துவிட்டாயோ? "காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு." எல்லா ஜெந்துக்களும் தன் சிசுக்களை அன்போடு ஆதரிக்கின்றன. தன் பிள்ளைகளுக்குப் பாலூட்டி அன்போடு ஆதரிப்பது தாயின் கடமைதானே.

கடமையைச் செய்ததைக் குறித்து பெருமை பாராட்டவேணுமா? மற்றவர்கள் அதைக் குறித்து உன்னைப் புகழ்வார்களோ என்று அவளைப் பரிகாசம் செய்வார்களே. அப்படியிருக்க ஏழைகளையும் தேவ ஊழியரையும் ஆதரிக்கும் கடமையுள்ள கிறிஸ்தவர்கள் அதற்கென்று 2 அணாவும் 4 அணாவும் கொடுத்து தங்கள்பேர் பிரசித்தப்படவேண்டுமென்று விரும்புவது எவ்வளவு மதியீனம்.

அநேகர் "இட்டார்க்கிடவேணும், செத்தார்க்கழவேணும்" என்னும் உலகவழக்கத்தையே பிரமாணமாகக் கைக்கொண்டு தங்களுக்குக்



கொடுத்தவர்களுக்கும், கொடுக்கக் கூடியவர்களுக்கும் கொடுக்கிறார்கள். இது வியாபாரமேதவிர தர்மமல்ல.

சிநேகிதனே! நீ தானதர்மம் செய்வதின் நோக்கமென்ன? ஆயக்காரரும், பரிசேயரும் தற்புகழையும், சுயபிரயோஜனத்தையும் நாடி தர்மம் செய்தார்கள். "அவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் உங்களுக்குப் பிரயோஜனம் என்ன"?

சில வருஷங்களுக்குமுன் வேதாகம சங்கத்து சதாப்தநிதிக்கென்று காணிக்கைகள் லண்டன் நகரத்திலுள்ள அச்சங்கத்தின் மாளிகைக்கு அனுப்பப்பட்டது. அப்பொழுது ஒரு துரை அந்த மாளிகைக்குள்ளே போய் ஆயிரம்பவுண் நோட்டு ஒன்றைக் கொடுத்து, "இது நானும் என் மனைவியும் இந்த நிதிக்கென்று கொடுக்கும் காணிக்கை; தயவுசெய்து என் பெயரைக் கேட்காதேயுங்கள்" என்று சொல்லி மறைந்துபோனார். இதல்லவோ அந்தரங்க ஈகை! இதல்லவோ தேவனுக்கும் மகிமை!

ஒரு அஞ்ஞானி தன் விக்கிரகத் தெய்வத்துக்கு அழகும் வாசனையுமான பூக்களைக்கொண்டு அலங்கரித்து அதை மகிமைப்படுத்துகிறான். அந்தப் பூக்களை யாராவது ஒரு மனுஷன் முகர்ந்து பார்த்தால் அதைத் தன் தெய்வத்துக்குப் படைக்கலாகாது என்கிறான். இதேன்? எந்தக் காணிக்கையையும் மனிதன் உபயோகித்தபின் தெய்வம் அதை அங்கீகரிக்கமாட்டாதென்பது அவன் எண்ணம்.

உயிரற்ற ஊமை விக்கிரகமானது, மனிதன் [illegible] வாசனையை முகர்ந்தபின் அப்பூவை அங்கீகரியாதானால், ஜீவனும் வல்லமையுமுள்ள தேவனை நாம் மகிமைப்படுத்தும்படி அவரை அலங்கரிக்கும் நற்கிரியைகளாகிய தர்மத்தின் நற்கந்தத்தை மனிதர் முகர்ந்து அதினால் வரும் புகழை நாம் அடைய விரும்பினால் அவர் அப்படிப்பட்ட காணிக்கைகளையும் தானதர்மங்களையும் அங்கீகரிப்பாரா? அவை அவருக்குப் பிரியமாயிருக்குமா? தேவன் நமது ஜீவியத்தில் மகிமைப்படவேண்டுமென்கிற ஒரே நோக்கத்தோடேயே காணிக்கைகளையும் தானதர்மங்களையும் கொடுத்து அதற்குரிய பலனை அவரிடத்திலேயிருந்து எதிர்பார்த்து நமது ஈகையைக்குறித்து மனுஷர் புகழ இடங்கொடுக்காதிருப்போமாக. "அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற தேவன் உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்."

## வஞ்சனையில்லாத அல்லது தாராள ஈகை.

"பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன். ரோமர். 12. 8.

கிறிஸ்தவ ஈகை வஞ்சனையில்லாத தாராளமான ஈகையாயிருக்க வேண்டும். ஏனென்றால் "அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்" (1 பேது. 4. 10) என்று ஆவியானவர் போதிக்கிறபடி ஒவ்வொரு கிறிஸ்தவனும் தான் தேவனிடத்தில் பெற்றுக்கொண்ட கிருபைகளைத் தாராளமாய்ப் பகிர்ந்துகொடுக்கவேண்டிய உக்கிராணக்காரனாயிருக்கிறான். எஜமான் தன் வசம் ஒப்புவித்திருக்கும் பொருளை எஜமான் சித்தப்படி வீட்டிலுள்ள யாவருக்கும் போதுமான அளவு தாராளமாய்ப் பகிர்ந்து கொடுப்பதே உக்கிராணக்காரனாகிய அவனுடைய வேலை. தேவ வீட்டாராகிய தேவ ஊழியருக்கும் ஏழைகளுக்கும் வஞ்சனையில்லாமல் இப்படிப் பகிர்ந்து கொடுக்கக்கூடியவர் யார்? ரோமர் நிருபம் 12-ம் அதிகாரம் முதல் இரண்டு வசனங்களில் நாம் வாசிக்கிறபடி தங்கள் சரீரத்தைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தவர்களும், இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் தங்கள் மனம் புதிதாகுதலினாலே மறுரூபமானவர்களுமே அப்படிச் செய்யக்கூடும். இங்கு உபயோகிக்கப்படும் "மறுரூபம்" என்னும் பதம் இயேசு மலையில் மகிமையோடு காணப்பட்டதைக் குறித்து உபயோகிக்கப்பட்ட அதே பதம். இந்த அதிகாரத்தின் மீதிய வசனங்களெல்லாம் மறுரூப ஜீவியத்தின் விபரங்களையும், நாம் பின்பற்றி நடக்கவேண்டிய தெய்வீக இலட்சணங்களின் அழகான விஸ்தரிப்பாயுமிருக்கின்றன. வஞ்சனையில்லாமல் தாராளமாய்ப் பகிர்ந்துகொடுப்பது மனம்புதிதாகுதலினாலே மறுரூபமான மனுஷனுடைய இலட்சணங்களிலொன்று.

சிநேகிதனே! நீ கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனைப்பெற்றுக்கொண்டது மெய்யானால், இந்த லட்சணம் உனக்குண்டு. நீ வஞ்சனையில்லாமல் கர்த்தர் உனக்குக்கொடுத்திருப்பதை மற்றவர்களுக்குப் பிரயோஜனமாகவும் தேவநாமத்திற்கு மகிமையாகவும், தாராளமாய்க்கொடுக்கிறாயா? உன் உக்கிராண வேலையில் நீ உண்மையுள்ளவனா? நம்மில் அநேகரைப்போல தங்களுக்குள்ளவைகளிலிருந்து தாராளமாய்க் கொடுக்காமல் வீண்போக்குச் சொல்லி உண்மைக்கேடும் வஞ்சகமுமாய் கொடுப்பவர்களுக்கு எச்சரிப்பாகவல்லவோ அனனியா, சப்பீராள் என்பவர்கள் ஒரு ஞாபகஸ்தம்பம்போல வேதாகமத்தினால் உயர்த்திக்காட்



டப்படுகிறார்கள். அவர்கள் நம்மில் அநேகரைவிட அதிகம் கொடுத்தார்களென்பதற்கு ஐயமில்லை. ஆனால் அவர்கள் தன்னயத்தோடு ஒரு பங்கை வைத்துக்கொண்டு, பிறர் புகழும்படி இன்னொரு பங்கைக்கொடுத்தார்கள். இது கிறிஸ்தவ ஜீவியத்திற்கடுத்த ஈகையாகுமா? "கோணிக் கோடிகொடுப்பதைப்பார்க்கிலும் கோணாமல் காணிகொடுப்பது உத்தமமல்லவோ!" கிறிஸ்தவ ஜீவியமானது சுயநயத்தோடு தன்னை வென்று பத்திரப்படுத்திக்கொள்வதும், தேவனுடைய ஈவுகளை மற்றவர்களுக்குப் பகிர்ந்துகொடுக்கப் போக்குச் சொல்லுவதும், வாயினால்மட்டும் உபசாரம் பேசுவதுமான பெலவீன ஜீவியமாயிராமல், நற்கிரியைகளினாலும் தாராளமான ஈகையினாலும் விளங்கும் வல்லமையுள்ள ஜீவியமாயிருக்கிறது. இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகளல்லவோ, சுயநயமுள்ளவர்களும், கொடுப்பதில் வஞ்சனையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். பணப்பயித்தியம் கொண்டு, படாதபாடுபட்டு, திரைகடலோடி திரவியந்தேடிப் பத்திரப்படுத்தி, ஈகையில்லாமல் தங்கள் பொருளையே தெய்வமென்று பூசிப்போர் கிறிஸ்தவர்களிலும் உண்டென்று சொல்லுவது எவ்வளவு துக்கமான காரியம். "வேஷமாகவே மனுஷன் திரிகிறான். விருதாவாகவே சஞ்சலப்படுகிறான்; ஆஸ்தியைச் சேர்க்கிறான் யார் அதை வாரிக்கொள்வான் என்று அறியான் (சங். 39. 6) என்று சங்கீதக்காரன் சொல்லுவது மெய்யல்லவா? இப்படிப்பட்டவர்கள் ஈகையால் வரும்பலனை உணராதவர்கள். அதினால் வரும் புகழை அறியாதவர்கள். அவர்கள் தோற்றத்தில் மேன்மக்களானாலும் வாஸ்தவத்தில் கீழ்மக்களே. பிறப்பில் கிறிஸ்தவர்களானாலும் சிறப்பில் அஞ்ஞானிகளே, நாம் இவ்விஷயத்தில் இப்பிரபஞ்சத்திற்கு ஒத்தவேஷம் தரித்துக்கொள்ளலாமா?

கிறிஸ்தவர்கள் தேவ ஊழியருக்கும், ஏழைகளுக்கும் வஞ்சனையில்லாமல் கொடுப்பதற்கு அவர்கள் இயேசுவின் ஜீவனைப்பெற்று அவருடைய சாயலைத் தரித்துக்கொண்டதே காரணம். கிறிஸ்தவர்களான அங்கிலேயரும் அவர்களுடைய பிள்ளைகளும் தாங்கள் வழக்கமாய்ச் சாப்பிடும் வெண்ணெயைச் சாப்பிடாமலும், சிலர், பால் சேர்த்த தேயிலைத்தண்ணீர் குடிக்காமலும், சிலர் முட்டை சாப்பிடாமலும் நிறுத்தி அவைகளின் கிரயத்தை தேவ ஊழியத்திற்குக் கொடுக்கும்படி செய்கிறது எது? அவர்கள் கிறிஸ்துவுக்குள் பெற்ற சுயவெறுப்புள்ள ஜீவியமல்லவா?

லண்டன் நகரத்தின் கீழ்பாகத்தில் ஏழைகளான மூன்று பெண்களிருந்தார்கள். அவர்கள் கஷ்டமான வேலை செய்து வருஷத்திற்குப் பதினாறு பவுன் சம்பளம் வாங்கிவந்தார்கள். அது அவர்கள்

மூன்றுபேருடைய சாப்பாட்டுக்கும் உடுப்புகளுக்கும் போதாது என்றாலும், சுயவெறுப்போடு மிருஷைவாரி 7 பவுன் சேர்த்து இந்தியாவில் நடக்கும் கர்த்தருடைய வேலைக்காகக் கொடுத்தார்கள். அந்தப்பெண்களில் ஒருத்தியோடு இந்திய மிஷனெரி துரையொருவர் கண்டு பேசிக்கொண்டிருக்கும்போது அவர் அவளுடைய சுயவெறுப்பைக்குறித்து வியப்புற்றவராய்ப்பேசத் துவக்கினார். அதற்கு அவள், "நான் ஒழிந்து போகும்படி இப்போது கொடுக்கிறேனேயல்லாது அது என் சுயவெறுப்பான காணிக்கையல்ல என்றாள். அதுபோல நாம் மனுஷத்தன்மைக்குரிய தன்மையத்திற்கு மரித்து, கிறிஸ்துவின் ஜீவனைப் பெற்றுக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம். கிறிஸ்துவை தரித்துக்கொண்ட நம்மில் அவருடைய ஜீவியத்தின் சுயவெறுப்பும் தாராளமும் விளங்கவேண்டியது அவசியம். சீர்மை தேசத்தில் லீட்ஸ் என்னும் நகரத்தில் வியாபாரியான ஒரு துரையிருந்தார். அவருடைய மனைவி தன் பையனுக்கு வெண்ணெய், சர்க்கரை, முட்டை முதலியவைகளைச் சாப்பிடுவதை நிறுத்தி விசேஷ வேலைக்கென்று அவைகளின் கிரயத்தைக் கொடுத்து தாராளமாய்த் தேவ ஊழியத்திற்கு உதவிசெய்யத்தக்கதாய் சிறு வயதிலேயே சுயவெறுப்பின் பிரயோஜனத்தைக் கற்றுக்கொடுத்து வந்தபடியால் நாளாவட்டத்தில் தன்னை வெறுத்து சுவிசேஷ வேலைக்குப் பணம் மிச்சம் பிடித்துக்கொடுப்பது பையனுக்கு அதிக விருப்பமும் இயற்கையுமான வழக்கமாயிற்று. அத்துரை சிறுவனாயிருக்கும்போதே ரூபாய் ஆறுலட்சம் பெறுமான சொத்தை வைத்துவிட்டு அவருடைய தகப்பன் இறந்துபோனார். ஆனாலும் அந்த வாலிபத்துரை அந்த ரூபாயை வீணும் உல்லாசமுமாய்ச் செலவிடாமலும், தன் சொந்த பிரயோஜனத்திற்கு உபயோகிக்காமலும் சர்க்காருடைய வர்த்தகவியாபார நிதிகளில் போட்டுவைத்து அதின் வரும்படியிலிருந்து அதிகமான பணம் மிஷன் வேலைகளுக்காக அடிக்கடி கொடுத்துவந்தார். அவர் எவ்வளவு தாராளமாயும் அதிகமாயும் கொடுத்தாரோ அவ்வளவு சீக்கிரமாயும் அதிகமாயும் அவருடைய சொத்தும் பெருகிற்று. இவர் தான் மூன்று கண்டங்களில் சுவிசேஷ வேலை செய்யும்படிக்கு ஒரு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் சாதனமாக வைத்துவிட்டு சுமார் எழுபது வருஷங்களுக்கு முன் வஞ்சனையில்லாமல் சுயவெறுப்போடு தாராளமாய்க் கொடுத்த ஈகையின் பலனை அடையும்படி கர்த்தரிடம் சென்ற ஆர்திங்டன் என்னும் பக்தன். இப்படிப்பட்ட பக்தரை முன்மாதிரியாக வைத்து சுயவெறுப்பில் பழகி ஈகையில் தேர்ச்சியடைவோமாக.



# உற்சாக ஈகை.

"அவனவன் கட்டாயமாயுமல்ல விசனமாயுமல்ல தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." (2 கொரி. 9. 7.)

கிறிஸ்தவன் கொடுக்கவேண்டுமென்கிற கட்டாயத்தினிமித்தம் கொடுப்பது உற்சாக ஈகையல்ல. கிறிஸ்தவ சபையில் வரிப்போடுவதும், சம்பளப்பிடித்தம் செய்வதும், சங்கப்பணம் வசூலிப்பதும் உற்சாகமான ஈகையென்று சொல்ல ஏதுவில்லை; ஏனென்றால் அது கட்டாயமாய் வாங்கப்பட்டு விசனத்தோடே கொடுக்கப்படுகிறது. கிறிஸ்தவன் தானதர்மம் செய்யவேண்டுமானால் கட்டாயமாயல்ல மனப்பூர்வமாயும், விசனமாயல்ல சந்தோஷமாயும் செய்யவேண்டும். ஏனென்றால் தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை நமக்குக் கொடுத்தபோது சிலருடைய கட்டாயத்தினிமித்தம் விசனத்தோடு கொடுக்காமல் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியேயும், கிருபையின் ஐசுவரியத்தின்படியேயும் அவரைத் தந்தருளி, நிர்ப்பாக்கியரான நமதுபேரில் வைத்த அவருடைய அளவற்ற அன்பை விளங்கச்செய்தார். பிதாவில் ஒரே தன்மையுடையவரும் தேவதற்சொரூபமுமான நமது இரட்சகரும் சிலுவையின் நிந்தைக்கும் நீச மரணத்திற்கும் தம்மைத்தாமே உற்சாகமாய் ஒப்புக்கொடுத்தார். அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படி நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். "இது தேவனுடைய மனப்பூர்வமும் உற்சாகமுமான ஈவு." இந்த ஈவைப்பெற்றுக்கொண்ட விசுவாசிகள் யாவரும் "நற்கிரியைகளைச் செய்வதற்கு கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்ட தேவனுடைய செய்கைகளாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்." (எபே. 2. 8-10) அதையிட்டே அப்போஸ்தலன் "நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும் சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயிருக்கும்படியாக தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்" (2 கொரி. 9. 8) என்று சொல்லுகிறார். இவ்விதமாய் கிறிஸ்தேசுவுக்குள் தேவ கிருபையின்படியும், வல்லமையின்படியும் விசுவாசிகளாகிய நம்மில் நடப்பிக்கப்படுகிற தேவ ஆவியின் நற்கிரியைகள் தேவனுடைய கிரியைகளாகவல்ல, நம்முடைய நீதியின் கிரியைகளாக எண்ணப்பட்டு, இம்மையிலும் மறுமையிலும், விசுவாசி சம்பூரண பலனை அடைவதற்கு ஏதுவாயிருக்கிறது. சிநேகிதனே! ஒருவன் தான் இவ்வுலகத்தில் நிலையற்றவனென்றும், யாதொரு நற்கிரியை செய்யத் தன்னிலே திராணியற்றவனென்றும் தனக்குள்ள யாவும் தேவகிருபையின்

ஈவென்றும் உணரும்போதுமட்டும் ஈகையில் உற்சாகம் உண்டாகும். தேவ ஆலயத்தைக் கட்டுவதற்கென்று இஸ்ரவேலர் காணிக்கைகளைக் கொடுத்தபோது தாவீது அரசன் சொல்லியதைக் கவனி.

"இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம், என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது. உமது கரத்தில் வாங்கி உமக்குக் கொடுத்தோம். உமக்கு முன்பாக நாங்கள் எங்கள் பிதாக்கள் எல்லாரையும்போல அரதேசிகளும் பரதேசிகளுமாயிருக்கிறோம். பூமியின்மேல் எங்கள் நாட்கள் ஒரு நிழலைப்போலிருக்கிறது, நிலைத்திருப்போம் என்ற நம்பிக்கையில்லை. எங்கள் தேவனாகிய கர்த்தாவே உம்முடைய பரிசுத்த நாமத்திற்கென்று உமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்கு நாங்கள் சவதரிக்கிற இந்தப்பொருளெல்லாம் உமது கரத்திலிருந்து வந்தது எல்லாம் உம்முடையது" என்றான். (1 நாளா. 29. 14, 16) கிறிஸ்தவர்கள் அரதேசிகளும் இவ்வுலக சம்பந்தமற்றவர்களாயும், பரதேசியைப்போல பரலோக சம்பந்தமுடையவர்களாகவும் இருக்கிறதானால் அவர்கள் தேவ நடத்துதலுக்குக் கீழ்ப்படியவும் உற்சாகமாய் நற்கிரியை செய்யவும் கூடும். இருதயத்தைப் பரத்தில் வைப்பதினால் எல்லா நற்குணங்களும் பெலனடைந்து நற்கிரியைகள் யாவும் உயிர் பெறுகிறது. பரத்துக்குரிய கிறிஸ்தவனே உயிருள்ள கிறிஸ்தவன். இவ்வுலகத்துக்கு அந்நியராயிருக்கவேண்டிய கிறிஸ்தவர்கள் அதோடு நெருங்கிய சம்பந்தமுள்ளவர்களாயிருப்பதினாலேயே நற்கிரியைகளில் அதிக மந்தம் பிடித்தவர்களாய்க் காணப்படுகிறார்கள். நற்கிரியைகளைச் செய்யும்படி கிறிஸ்தேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்ட விசுவாசி மனப்பூர்வமாய் தேவ நாமத்தினிமித்தம் தான் தர்மம் செய்து காணிக்கைகள் கொடுக்கிறதைவிட அவன் செய்யக்கூடிய நற்கிரியை வேறேது? தேவ கிருபை ஆயத்தம் செய்திருக்கும் இந்த நற்கிரியைகளை நாம் செய்யும்படி தேவ ஆவியானவர் தூண்டும்போது அதை அலட்சியம் செய்யலாமா? கூடாதே. "உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." ஏன்?

முதலாவது. அது, தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவர் சித்தத்தை நிறைவேற்றுவதாயும்,

இரண்டாவது. பரிசுத்தவான்களின் குறைவை நீக்குகிறதாயும்,

மூன்றாவது. ஒருவரில் ஒருவர் அன்புகூரும்படி செய்து அன்பை வளர்ப்பிக்கிறதாயும்,

நாலாவது. அநேகர் தேவனை ஸ்தோத்திரித்து மகிமைப்படுத்துவதற்கேதுவாயும்,



ஐந்தாவது. அது எவ்விதத்திலும் சம்பூரண பலனுள்ளதாயுமிருக்கிறபடியினாலேதான். (2 கொரி. 9. 12, 15.)

இக்காரணங்களையிட்டாவது நாம் உற்சாகமாய்க் கொடுக்கவேண்டாமா?

பர்மாதேசத்து காரேனரின் சபைகள் ஒன்றில் சுமார் 13,000 கிறிஸ்தவர்கள் உண்டு. அவர்கள் வருஷந்தோறும் சராசரி 73,823 ரூபாய் காணிக்கை கொடுக்கிறார்கள். அதைக்கொண்டு அவர்களுடைய சுவிசேஷகர்கள், போதகர்கள் முதலியவர்களுக்கும், வேதசாஸ்திர வகுப்பு மாணாக்கருக்கும், அவர்களைப் படிப்பிப்பவர்களுக்கும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. தவிரவும் அவர்கள் ஆதரவில் நடத்தப்பட்டுவரும் சுதேச மிஷனெறி சங்கத்திற்கென்று வருஷவாரி 6,450 ரூபாய் கொடுக்கின்றனர். இதில் ஸ்திரீகள் மாத்திரம் கொடுக்கிற ரூபாய் 2,600. பின்னும் இந்த சபை, பொருள் சேர்த்து கச்சின் என்ற ஜனங்கள் நடுவிலும் சுவிசேஷவேலை நடத்திவருகிறது. அன்றியும் இவர்கள் கோவில் கட்டடத்திற்கென்று லட்சம் ரூபாய் சேகரித்திருக்கிறார்கள். இக்காணிக்கைகளைத் திரட்டிப் பார்க்கையில் ஆளொன்றுக்கு வருஷத்தில் சராசரி 14 ரூபாயும், ஒரோர் குடும்பத்திற்கு 70 ரூபாயும் கணக்காகிறது. இவ்வளவு உற்சாகமாய்க் காணிக்கை கொடுக்கும் சபையும், குடும்பமும் தமிழ் நாட்டிலுண்டா? எல்லூர் சபையைக்குறித்து அநேகர் கேள்விப்பட்டிருக்கலாம். அச்சபைக்கு தேவகிருபையால் கொடுக்கப்பட்ட இஸ்ரேவேல் என்னும் பிரசங்கியார் அதிக ஆசீர்வாதத்தோடு தன் ஊழியத்தைச் செய்துவருங்காலத்தில், கிறிஸ்தவர்கள் தாங்கள் அடைந்த கிருபைகளைத் தாங்களே வைத்துக்கொண்டு மற்றவர்களைக் குறித்துக் கவலைப்படாமல் புறமதஸ்தருக்கு அவைகளைத் தெரிவித்து அவர்களையும் நன்மைக்குள் கொண்டுவரும்படி பிரயத்தனப்படுவதும் உதவிசெய்வதும் அவர்கள் கடமையென்று இன்பமும் எழுப்புதலுமாய் ஒரு தடவை பிரசங்கம் செய்தார். இந்த அமிர்தம்போன்ற பிரசங்கத்தினால் ஆச்சரியமான பலன் விளைந்தது. எப்படியென்றால் பிரசங்கத்தைக்கேட்ட அநேகர்: "பிரசங்கியார் சொல்வது நியாயம். இதுவரையும் நாம் நன்பொன்னராகவே இருந்திருக்கிறோம். இனி அப்படியிருப்பது நமக்காகத் தமது அருமை ஜீவனைக்கொடுத்த ஆண்டவருக்கேற்காது" என்று சொல்லி தங்கள் பொருட்களைப் புறமதஸ்தருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் செலவுக்கென்று கொடுக்கத்தொடங்கினார்கள். சபையாரில் ஒருவன் ஒரு மோதிரத்தைக்கொடுத்தான். ஒருவன் தன் வெள்ளிக்காப்பைக் கொடுத்தான். ஒருத்தி தன் தங்கக்காப்பைக் கொடுத்தாள். ஒருவன் தன் கைக்கடிகாரத்தைக் கொடுத்

தான். ஒருவன் தன் கடிக்கனைக் கொடுத்தான். ஒருத்தி தன் காதில் போட்டிருந்த கல்லிழைத்த கம்மலைக் கழற்றிக்கொடுத்தாள். ஒருவன் ஒரு வண்டியைக் கொண்டுவந்து கொடுத்தான். ஒருத்தி நகைக்காக மாற்றிவைத்திருந்த ஒரு பவுனைக் கொடுத்தாள். ஒருவன் ஒரு பால் பசுவைக் கொடுத்தான். ஒருத்தி இரண்டு ரூபாய் கொடுத்தாள். ஒரு ஏழை ஸ்திரீ ஒரு கோழிக்குஞ்சைக் கொடுத்தாள். ஒரு ஏழைமனி தன் பழைய மண்வெட்டியொன்றைக் கொடுத்தான். ஒரு பையன் தனக்கிருந்த பட்டு லேஞ்சியைக்கொடுத்தான். இன்னொரு பையன் தின்பண்டச் செலவுக்குத் தாயாரிடம் வாங்கியிருந்த ஒரு அணாவைக் கொடுத்தான். ஒரு ஏழைச்சிறுவன் பிரசங்கியாரிடத்தில் வந்து "ஐயா! எனக்குத் தர ஒன்றுமில்லை. நித்தம் நித்தம் ஒரு சட்டை சாணி பிறக்கித்தருகிறேன், அதை வாங்கிக்கிடுவீயளா ஐயா?" என்றான். பிரசங்கியாரும் சந்தோஷத்தோடு வாங்கிக்கொள்ளுகிறேன் என்றார். இவையாவும் கோயிலில் நடந்தது. ஜனங்கள் வீட்டுக்குப்போன பிற்பாடு அநேகர் பலன்களையும், நாரட்டுகளையும், ஆடுமாடு, கோழிகளையும், தவசதானியங்களையும், மற்றும் பல பண்டங்களையும் காணிக்கையாகக்கொண்டுவந்தார்கள். இதுவுமல்லாமல் இரண்டு படித்த வாலிபர் பிரசங்கியாரிடத்தில் வந்து, ஐயா நாங்கள் எங்களையே காணிக்கையாகத் தருகிறோம்; உங்களுக்குப் பிரியமான இடத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க எங்களை அனுப்புங்கள், அங்கே போகிறோம்; அல்லது சுவிசேஷ வேலை சம்பந்தமாய் எந்தப் பணிவிடையும் சொல்லுங்கள், செய்கிறோம் என்றார்கள். கிறிஸ்து இயேசுவை அறியாதவர்களுக்கு அவரை அறிவிக்கும்படியாக எல்லூர் சபையார் கொடுத்த பொருள் பெருந்தொகையாயிற்று. பிரசங்கியாரும் சபையின் மூப்பரும் கூடி இக்காணிக்கைப் பணத்தைச் சரியானபடி உபயோகிக்க வழி என்னவென்று ஆலோசித்து, மூன்று சுவிசேஷகரை நியமித்துப் பற்பல இடங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார்கள். அந்த மூன்றுபேரையும் சுவிசேஷ வேலைக்கு அனுப்பும்போது அவர்களுக்காக ஒரு ஜெபக்கூட்டம் வைக்கப்பட்டது. சபையார் யாவரும் கூடிவந்தார்கள். அந்த நாள் அவர்களுக்கு ஒரு பெரிய சந்தோஷநாளாகயிருந்தது. ஜெபம் முடிந்தபோது சபையார் சுவிசேஷகருக்குப் பிரயோஜனமான பல வெகுமதிகளைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். சிலர் குடைகள் கொடுத்தார்கள். சிலர் சட்டைகளைக்கொடுத்தார்கள். சிலர் தொப்பி, தலைப்பாகை கொடுத்தார்கள். சிலர் போர்த்துக்கொள்ள கம்பளிகளைக்கொடுத்தார்கள். சிலர் சாமான் வைக்கும் பைகளைக்கொடுத்தார்கள். சிலர் பலகாரங்களைக்கொடுத்தார்கள். சிலர் பிரயோஜனமான மருந்துகளையும் அஞ்ஞானிகளுக்குக் கொடுக்கத்தக்க பத்திரிக்கைகளையும் சிறு புஸ்



தகங்களையும் கொடுத்தார்கள். இவ்விதமாய் எல்லூர் சபையார் சுவிசேஷ வேலைக்கு வேண்டிய உதவிசெய்து தேவராஜ்யத்திற்கு உடன்ஊழியராக தங்கள் கிறிஸ்தவ கடமையை உற்சாகமாய் நிறைவேற்றி தேவ ஆசீர்வாதங்களைத் திரளாய்ப்பெற்றார்கள். தமிழ்நாட்டுச் சபையார் இப்படிச் செய்யவேண்டிய அவசியமில்லையா?

நமது ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் இப்படி உற்சாகமாய் கொடுப்பதும் தேவநாமத்தை மகிமைப்படுத்துவதும் எவ்வளவு மேன்மையான காரியம்?

## வரவுக்கு அல்லது திராணிக்குத் தக்க ஈகை.

"உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும் தன் வரவுக்குத் தக்கதாய் எதையாகிலும் சேர்த்துவைக்கக்கடவன்" (1 கொரி. 16. 2) என்று பரிசுத்தவான்களின் குறைவை நீக்கும்படி கொடுக்கப்படும் தர்ம சகாயம் எப்போது எவ்விதமாய்ச் சேர்த்துவைக்கப்படவேண்டுமென்று பவுல் அப்போஸ்தலன் கொரிந்து சபைக்கு எழுதுகிறார். வரவுக்குத் தக்கபடி காணிக்கை கொடுப்பது கிறிஸ்தவ ஈகை அளவின் ஒருபாகம். உற்சாகமாய்க் கொடுக்கப்படும். தான தர்மங்களும், காணிக்கைகளும் தங்கள் வரவுக்குத்தக்கபடியிருக்கவேண்டுமென்பதை அநேகர் எண்ணாமல் போகிறார்கள். ஒருவன் சென்றவருஷத்தில் தன் வரவுக்குத்தக்கபடி ரூ. 20 ஏழைகளுக்காக அல்லது தேவ ஊழியத்திற்காகக் கொடுத்திருந்தால் இந்த வருஷம் கர்த்தர் அவனை அதிகமாய் ஆசீர்வதித்து அவன் வரவை இரட்டிப்பாக்கியிருந்தும் சென்ற வருஷத்தைப்போல இருபது ரூபாய்மட்டும் கொடுக்கிறதானால் அது அவன் வரவுக்குத்தக்க அல்லது திராணிக்குத்தக்க ஈகையல்ல. ஈகையின் அளவுக்கும் உற்சாகமாய்க் கொடுப்பதற்கும் யாதொரு சம்பந்தமில்லை; அதாவது அதிகம் கொடுப்பதும் உற்சாகமாய்க்கொடுப்பதும் ஒரே காரியமல்ல. தன் இருதயத்தின் நிறைவுக்குத்தக்கதாய் உற்சாகமும், தன் பையின் நிறைவுக்குத் தக்கதாய் ஈகையுமிருக்கவேண்டியது நியாயம். கொஞ்சமான வரவுள்ளவன் அதற்குத்தக்கபடி கொஞ்சமாயும், அதிகமான வரவுள்ளவன் அதற்குத்தக்கபடி அதிகமாயும் கொடுக்கலாம். இதுவே திராணிக்குத்தக்க ஈகை. இதுவும் உற்சாகமாய்க் கொடுக்கப்படவேண்டும். கர்த்தர், இஸ்ரவேலர் வருஷத்தில் மூன்று விசை அதாவது பஸ்காவாகிய புளிப்பில்லாத அப்பப்பண்டிகையிலும், வாரங்களின் பண்டிகையிலும், கூடாரப்பண்டிகையிலும் தாம் தெரிந்துகொள்ளும் ஸ்தலத்திற்கு தேவசந்நிதியில் வரவேண்டுமென்றும், "அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் வெறுங்கையோடேவராமல் உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு அருளிய ஆசீர்வாதத்திற்குத் தக்கதாக அவனவன்

தன் தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கை கொண்டுவரக்கடவன்" (உபாகமம், 16. 16, 17) என்று கட்டளையிட்டிருந்தார். அப்போஸ்தலன் கொரிந்து சபையாருக்குக் கொடுத்த கட்டளையும் இதுவும் நெருங்கிய சம்பந்தமுடையவை.

முதலாவது. பஸ்கா பண்டிகையில் இஸ்ரவேலன் வெறுங்கையோடு தேவசந்நிதியில் காணப்படலாகாது. ஏனென்றால் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து விடுதலையடைந்ததையும், பஸ்கா ஆட்டின் இரத்தம் சிந்தப்பட்டதால் அடைந்த மீட்பையும் நினைவுகூருகிற அவன் நன்றியறிதலோடு ஸ்தோத்திரக்காணிக்கை செலுத்தவேண்டாமா? மீட்கப்பட்டவனே! நீ வெறுங்கையோடு கர்த்தருடைய சந்நிதியில் வரலாமா? கிறிஸ்துவின் அன்பு உன்னையும் உன்னுடையவைகளையும் அவருக்குப்படைக்கும்படி உன்னை நெருக்கி ஏவுகிறதில்லையா? இரட்சிப்படைந்த ஆத்துமாக்களில் "நீங்கள் உங்களுடையவர்களல்ல; கிரயத்துக்குக்கொள்ளப்பட்டீர்களே" என்னும் சத்தியம் தொனித்துக் கொண்டிருக்கிறதே.

இரண்டாவது. பெந்தேகொஸ்து பண்டிகையில் இஸ்ரவேலன் வெறுங்கையோடு தேவசந்நிதியில் வரலாகாது. ஏனென்றால் ஒரு காலத்தில் எகிப்தின் அடிமைத்தனத்தில் அநேக கஷ்டநஷ்டத்தை அநுபவித்து, தேவகிருபையால் விடுதலைபெற்று தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டு, அதில் திரண்டபலனை அறுத்து அநுபவிக்கிற அவன் வெறுங்கையோடு தேவசந்நிதியில் வருவது நியாயமாகுமா? "இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்" என்று தேவ ஆவியானவர் ஏவுகிறதில்லையா?

மூன்றாவது. கூடாரப்பண்டிகையில் இஸ்ரவேலன் வெறுங்கையோடு தேவசந்நிதியில் காணப்படலாகாது. ஏனென்றால், மீட்பையும், ஆசீர்வாதங்களையும், கானான் தேசத்திலே சுதந்தரத்தையும் பெற்றுக்கொண்ட அவன் தனக்கு அவ்வளவு கிருபை செய்த தேவசந்நிதியில் தான் பெற்ற ஆசீர்வாதங்களுக்குத் தக்கபடி காணிக்கை கொண்டுவரவேண்டாமா? மீட்கப்பட்ட ஆத்துமாக்களை தேவனுடைய இராஜ்யத்தில் என்றென்றைக்கும் சந்தோஷிப்பிக்கிற நவமான திராட்சரசத்தையும், பரலோகத்தின் [illegible]த்தையும், அவருடைய வலதுபாரிசத்தில் அவனுக்கிருக்கும் ஆனந்தபாக்கியத்தையும்பற்றிய விசுவாசத்திற்கு இஸ்ரவேலனுடைய கை நிறைந்த காணிக்கை சாக்ஷியாய் இருக்கிறது. இரட்சிக்கப்பட்டவனே உன் கை நிறைந்த காணிக்கையினால் மறுமையின் பாக்கியத்தைக் குறித்த உன் விசுவாசத்தை அறிக்கையிடுகிறாயா? அப்படிச் செய்ய தேவ அன்பு உன்னை நெருக்கி ஏவுகிறதில்லையா?



இப்படி நாம் முன் பெற்றுக்கொண்டதும், இப்போது பெற்றுக்கொள்ளுகிறதும், இனி பெற்றுக்கொள்ளப்போகிறதுமான தேவ ஆசீர்வாதங்கள், உற்சாகமாயும், வரவுக்குத் தக்கபடியும் காணிக்கை கொடுக்கும்படி நம்மைத் தூண்டிவிடும் ஏதுக்களாக தேவ ஆவியானவரால் எடுத்துக் காட்டப்படுகின்றன. லூக்கா. 21 15-ல் ஜனங்கள் காணிக்கைப்பெட்டியில் காணிக்கை போடுகிறதை இயேசு பார்த்துக்கொண்டிருந்ததாக நாம் வாசிக்கிறோம். ஒவ்வொருவரும் எவ்வளவு காணிக்கை போடுகிறார்களென்பதல்ல, எப்படி காணிக்கை போடுகிறார்களென்பதே அவருடைய கவனம். எவ்வளவு காணிக்கை போடுகிறார்களென்பதற்கும், எப்படி காணிக்கை போடுகிறார்களென்பதற்கும் பெரும்பேதமுண்டு. ஐசுவரியவான்கள், தங்கள் நிறைவிலிருந்து எடுத்து அதிகமாய்ப்போட்டார்கள். ஆனாலும் அது அவர்கள் வரவுக்கு அல்லது திராணிக்குத்தக்க ஈகையாயிருக்கவில்லை. ஒரு ஏழை விதவையோ தனக்குண்டாயிருந்த எல்லாவற்றையும் தன் வரவுக்கு அதிகமாய் அல்லது திராணிக்குமிஞ்சி ஒரு துட்டுக்குச் சரியான இரண்டுகாசைப் போட்டாள். அவளே அதிகக் காணிக்கைபோட்டவளாக எண்ணப்பட்டாள். ஆகையால் கர்த்தர் காணிக்கைப்பெட்டியின் அருகேயிருக்கிறாரென்பதையும், அவர் கையிலிருந்து நமக்கு அளிக்கப்பட்ட ஆசீர்வாதவரத்துக்குத் தக்கதாய் நாம் காணிக்கைபோடுகிறோமோவென்பதைக் கவனித்து நாம் அவருக்குக் கொடுக்கும் விதத்தையும் அறிகிறாரென்றும் உணர்ந்து உண்மையும் விழிப்புமாய் நடந்துகொள்வோமாக. கிறிஸ்தவன் இப்படி தன் வரவுக்குத் தக்கபடி காணிக்கை கொடுக்கவேண்டிய காரணமென்ன?

இங்கு அதை அப்போஸ்தலன் ஒருவாறு தெளிவாய்க் காட்டுகிறார். எப்படியென்றால், "பரிசுத்தவான்களுக்குச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக் குறித்து நான் கலாத்திய நாட்டு சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள்" என்று அவர் கொரிந்தியர் 16-ம் அதிகாரத்தைத் தொடங்குமுன் 15-ம் அதிகாரத்தின் கடைசியில், "ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள்படும் பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிருபையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயுமிருப்பீர்களாக" என்று சொல்லுகிறார். இந்த அதிகாரத்தின் முன்பாகத்தில் மரித்தோரின் உயிர்த்தெழுதலைக்குறித்த விசுவாசத்தையும், உயிர்த்தெழுதலில் விசுவாசியடையும் மகிமையின் பலனையும்பற்றி வெகு விஸ்தாரமாயும் நியாய தோரணையாயும் பேசுகிறார். மொத்தமாய் இந்த அதிகாரத்தில் இரண்டு காரிய

ங்களை விருதாவாயிராதென்று காட்டப்படுகின்றன. அவை விசுவாசமும், பிரயாசமுமே. கிறிஸ்தவனின் விசுவாசம் என் விருதாவாய்ப்போகாதோ அதே காரணத்தினிமித்தமே அவன் படும்பிரயாசமும் விருதாவாய்ப்போகாது. ஏனென்றால், விசுவாசி மாட்சிமையுள்ள உயிர்த்தெழுதலைப்பெற்று அதில் தன் நற்கிரியைகள் ஒவ்வொன்றிற்குமுரிய பலனை அடைகிறான். ஆகையால் அப்போஸ்தலன் இங்கு உயிர்த்தெழுதலின் உபதேசத்தினின்று திடீரென்று மாறி, அதற்கு சம்பந்தமற்ற வேறொரு உபதேசத்தைச் சொல்லுகிறதாயல்ல, தேவ ஆவியின் ஏவுதலின்படி உயிர்த்தெழுதலுக்கும் தானதர்மம் செய்வதற்குமுள்ள ஆவிக்குரிய சம்பந்தத்தைக் காட்டுகிறார். மனம் புதிதாகுதலினாலே மறுஜீவனைப் பெற்றவனில் சுயநயமாகச் சேர்த்துவைக்கும் மனம் ஒழிந்துபோய் வஞ்சனையில்லாமல் தாராளமாய்க் கொடுக்கும் மனம் எப்படி வருகிறதோ, அப்படியே உற்சாகமாய் வரவுக்குத் தக்கபடி கொடுப்பதும் உயிர்த்தெழுதலில் பலனை எதிர்பார்க்கும் உயிருள்ள ஜீவியத்தின் தன்மையாயிருக்கிறது.

அன்றியும், "வாரத்தின் முதல் நாள்தோறும்" காணிக்கை சேர்த்துவைக்கப்படவேண்டியதேன்? வாரத்தின் முதல் நாள் எது? நமது கர்த்தர் உயிர்த்தெழுந்த நாளல்லவா? தேவ ஆவியானவர் எவ்வளவு ஒழுங்காயும் அழகாயும் உயிர்த்தெழுதலோடு தர்மக்கிரியையை இணைக்கிறார். உலக மக்கள் வருஷத்துக்கொருவிசை பொக்கிஷத்தைச் சேர்த்துவைப்பார்கள். ஆனால் விசுவாசிகளோ அவனவன் தனித்தனியே உயிர்த்தெழுதலில் பலனடைவோமென்கிற நம்பிக்கையோடு, உயிர்த்தெழுதலின் தினமாகிய வாரத்தின் முதல் நாள்தோறும் தங்கள் வரவுக்குத் தக்க காணிக்கை கொடுப்பதினாலே பரலோகத்தில் பொக்கிஷத்தைச் சேர்த்துவைக்கவேண்டும். புருஷன் மனைவிக்காகவும், மனைவி புருஷனுக்காகவும், பெற்றோர் பிள்ளைகளுக்காகவும் சேர்த்துவைக்கமுடியாது. விசுவாசிகள் ஒவ்வொருவரும் தனித்தனியே அவரவர் வரத்துக்குத் தக்கபடி கொடுப்பதினால் தனக்குத்தானே பொக்கிஷத்தைச் சேர்த்துவைக்கவேண்டும். "உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள். பழமையாய்ப் போகாத பணப்பைகளையும், குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்துவையுங்கள். அங்கே திருடர் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (லூக். 12. 33, 34.) பக்திமானும் தனவந்தனுமான ஒரு துரை இந்தியாவிலிருந்து கொஞ்சக்காலத்திற்குமுன் இங்கிலாந்துக்குப்போ



யிருந்தார். அப்போது இவரைப்பற்றி வெகு பிரஸ்தாபமாய்க் கேள்விப்பட்ட அங்குள்ள வேறொரு துரை இவரைக் கண்டு, சுகக்ஷேமங்களைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கையில் இவரைப்பார்த்து, 'உம்முடைய ஆஸ்தி எவ்வளவு இருக்கும்' என்று விசாரித்தார். அதற்கு இவர், 'என் ஆஸ்தி எவ்வளவு இருந்ததென்று எனக்கு ஞாபகமில்லை. ஆனால் இப்போது 25,000 ரூபாயிருக்கிறது' என்று சொன்னார். இதைக்கேட்ட அந்தத் துரை, இத்தொகை அங்கிலேயருக்குள் பெரிய ஆஸ்தியல்லவே, இவ்வளவு சொற்பமுள்ள இவரைப்பற்றித்தானா அவ்வளவு பிரபல்லியமாய்க் கேள்விப்பட்டோமென்கிற எண்ணத்தோடு, "உம்முடைய ஆஸ்தியெல்லாம் அவ்வளவுதானா?" என்று ஆச்சரியத்தோடு கேட்க, இவர், "ஆம்! அவ்வளவுதான் நான் சிலகாலங்களா[illegible]ருடைய நாமத்துக்கென்று கொடுத்தது. மற்றவை என்னுடைய ஆஸ்தியல்ல" என்று வெகு சாதாரணமாய்ச் சொன்னார்.

சிநேகிதனே! உன்னுடைய ஆஸ்தி எவ்வளவு? நீ எனக்கொரு குறைவுமில்லையென்கிறாய். "ஆனாலும் உன்னிடத்தில் ஒரு குறையுண்டு. நீ போய் உனக்குண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக்கொடு. அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றிவா" என்று சன்மார்க்கனும் ஐசுவரியமுமான மனிதனுக்குச் சொன்னதுபோல இயேசு உனக்கும் சொல்லுகிறாரென்று எண்ணிக்கொள். நீ தானதர்மம் செய்வதிலும் காணிக்கை கொடுப்பதிலும் பரலோகத்திலே ஆஸ்தியைச் சேர்த்து வைக்கவில்லையானால் உன் இருதயம் பரலோகத்தையும் அதின் மேன்மையையும் வாஞ்சிப்பதெப்படி?

உயிர்த்தெழுதலில் நீ என்ன பலனை அடைவாய்? உயிர்த்தெழுதலும் அதில் பலனடைவோமென்கிற நம்பிக்கையுமே கிறிஸ்தவன் தன் வரவுக்குத் தக்கபடி காணிக்கை கொடுப்பதற்குக் காரணம். ஆகா! அது தன்னயமுள்ள நோக்கமல்லவா? என்கிறாய். அது தன்னயமுள்ள நோக்கமானாலுமென்ன? நீ உன் சுயநன்மையை விரும்பியாவது காணிக்கை கொடுக்கவேண்டாமா? நாம் கர்த்தரைவிட ஞானிகளா? நாம் செய்யும் ஒவ்வொரு நற்கிரியைக்குமுள்ள முகாந்தரம் அவராலே உண்டாகி நமது நன்மைக்கேதுவாகயிருக்கிறது. கர்த்தர் தானதர்மம் செய்வதைப்பற்றிய தமது போதனையில், "நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும்" என்று சொல்லிய அருமையும் எழுப்புதலுமான சத்தியத்தையே அப்போஸ்தலன் இங்கு எடுத்துக்காட்டி கிறிஸ்தவ சபையை வரவுக்குத் தக்கபடி காணிக்கை கொடுக்கும்படி ஏவுகிறார்.

## உதாரத்துவ ஈகை.

"சகோதரரே! மக்கெதோனியா நாட்டு சபைகளுக்குத் தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம். அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில் கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் திராணிக்குத் தக்கதாயும் தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்கத் தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன். தங்கள் உபகாரத்தையும், பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக்கொண்டார்கள். மேலும் நாங்கள் நினைத்தபடிமாத்திரம் கொடுக்காமல் தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத் தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்." "அல்லாமலும் விசுவாசத்திலும், போதிப்பதிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும், எங்கள்மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றக் காரியங்களிலேயும் நீங்கள் பெருகுகிறதுபோல இந்த தர்ம காரியத்திலும் பெருகவேண்டும்" (2 கொரி 9. 1, 7.) என்று பவுல் அப்போஸ்தலன் கொரிந்து சபையாருக்கு எழுதுகிறார். மக்கெதோனியர் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில் கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும் தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். அவர்களுடைய தரித்திரத்தின் அளவுக்குத்தக்கதாய் அவர்களுடைய ஈகையின் அளவும் உதாரத்துவமும் அதிகப்பட்டது. அவர்கள் தங்கள் வரவின் அளவுக்கு அதிகமாய்க் கொடுத்தால் முற்றிலும் தரித்திரராகத்தக்க தங்கள் திராணிக்கு மிஞ்சிக்கொடுத்தார்கள். தங்கள் திராணிக்குத் தக்கதாயும், திராணிக்கு மிஞ்சியும் கொடுத்த அவர்கள் தங்கள் வரவின் அளவுக்குத் தக்கதாயும், விசுவாச அளவுக்கும் தக்கதாயும் கொடுத்தார்களென்று சொல்லவேண்டும். வரவுக்குத்தக்கபடி கொடுக்க விசுவாச பெலன் தேவையில்லை. ஆனால் வரவுக்கு மிஞ்சிக் கொடுக்கவோ அது மெத்த அவசியம்.

பெயர்பெற்ற தேவ ஊழியனாகிய ஹார்மன் போதகர் வியாதியாயிருந்த ஒரு கூலிக்காரனைப் பார்க்கப்போயிருந்தார். அவனுக்கு மனைவியும் நாலு பிள்ளைகளுமுண்டு. அவன் மூன்று வாரமாய் வியாதியில் படுத்திருந்தபடியால் அவனுக்குரியவைகளெல்லாம் செலவாகிப்போய்விட்டது. போதகரும் அவருடன் வந்த சிலரும் சீயோன்பட்டணத்தைப்பற்றிய கீதங்களில் ஒன்றை அவன் படுக்கைக்குச் சமீபத்திலி



ருந்து வெகு இங்கிதமாய்ப்பாடினார்கள். அதைக்கேட்ட கூலிக்காரன் தாரை தாரையாய்க் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தான். போதகர் அவனைப்பார்த்து, "ஏனப்பா! அழுகிறாய்? உன் மனைவி மக்களைப்பற்றிய கவலை உன் மனதை வருத்தப்படுத்துகிறதோ?" என்று கேட்டார். அப்பொழுது அவன் அவரை உற்றுப்பார்த்து, "ஐயா, இயேசு இரட்சகர் அவர்களோடு இருக்கமாட்டாரா? கர்த்தர் தம்மைத் தகப்பனற்றவர்களின் தகப்பனென்றும், விதவையின் விசாரணைக் கர்த்தரென்றும் அழைக்கிறதில்லையா? நான் இவர்களுக்காகக் கவலைப்படேன். அவர்களுக்காகக் கவலைப்படுகிறவர் ஒருவர் இருக்கிறார். கர்த்தர் அவர்களைப் பாதுகாத்துக்கொள்ளும்படி அவரை வேண்டிக்கொண்டேன்" என்று சொல்லித் தன் மனைவியைப்பார்த்து, "என் நேச மனைவியே நான் சொல்லுவது நியாயந்தானே, நீ கவலைப்படமாட்டாயே, உனக்குப் பயமில்லையே, நீ இயேசுவை விசுவாசிக்கிறாயல்லவா?" என்றான். அதற்கு அவன் மனைவி, "நீங்கள் சொல்வது முழுவதும் மெய்தான். நான் இயேசுவை நம்பியிருக்கிறேன், நீங்கள் இயேசுவண்டை போவது எனக்குச் சந்தோஷம்தான். நானும் பிள்ளைகளும் கர்த்தருக்குச் சித்தமாயிருக்கும்போது உங்களிடம் வந்து சேருவோம். அதுவரை நான் பிள்ளைகளை நல்ல வளர்ப்பில் வளர்க்கும்படி கர்த்தர் தமது பரிசுத்த ஆவியைக்கொண்டு எனக்கு உதவி செய்வாராக" என்று சொன்னாள்.

அதைக்கேட்டுப்போதகர், "பின்னை ஏன் நீ அழுகிறாய்?" என்று வினவ, அதற்கு, "அவன் நான் விட்டது ஆனந்தக்கண்ணீர் ஐயா! இம்மையிலே பாடல் இவ்வளவு இன்பமாயிருக்குமானால் மறுமையில் தேவதூதரோடு கூடிப் பாடுவது எத்தனை அதிக இன்பமாயிருக்குமென்றும், அந்தப் பாக்கியம் எனக்குச் சமீபித்துவிட்டதென்றும் நான் நினைத்தபோது என் கண்கள் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தது" என்றான். பின்பு அவன் தன் மனைவிக்கு ஒரு குறிப்புக்காட்டினான். அவள் அந்தக் குறிப்பை அறிந்துகொண்டு பெட்டியினிடம்போய் அவன் பணம் போட்டுவைக்கும் ஒரு சிறு பிங்கானை எடுத்துவந்தாள். அதில் (அரை ரூபாய்க்குச்சற்று அதிகமாயிருக்கும்) ஆறு சிறுநாணயங்கள் இருந்தன. அவன் தான் பத்திரப்படுத்திச் சேர்த்துவைத்திருந்த அந்தக்காசுகளைக் கைநடுக்கத்தோடு எடுத்து போதகர் கையில் கொடுத்து, "ஐயா, இதை அஞ்ஞானிகளுக்காக அனுப்புங்கள், சமாதானமாய் மரிப்பது எப்படியென்று அவர்கள் அறிந்துகொள்ளும்படிக்குத்தான்" என்று சொன்னான். அவர் அதை வாங்கிக்கொண்டு அவன் மனைவியை ஏறிட்டுப்பார்த்தார். அவளும் தலையசைப்பினால் சம்மதத்தைக் காண்பித்

த்தமன்றி, ஐயா இதுவிஷயம் நானும் என் புருஷனும் முன்னமே பேசித் தீர்மானித்தது. நாங்கள் துக்கச்செலவைக் கணக்குப்பார்த்துத் தீர்ந்தபொழுது இந்தக் காசுகள்தான் மீந்தன என்றாள். அப்படியானால் உனக்கென்னமீதி வைத்திருக்கிறாய்? என்று போதகர் அவனைக்கேட்டதற்கு, அவன் "இயேசு இரட்சகர்தான்" என்றான். உன் மனைவி பிள்ளைகளுக்கு நீ வைத்துப்போவதென்ன? என்று அவனைக் கேட்டதற்கு "இயேசுவைத்தான் நான் அவர்களுக்கு வைத்துப்போகிறேன்; அவர் மிகவும் நல்லவரும் ஐசுவரிய சம்பன்னருமாயிருக்கிறார்" என்று போதகர் காதில் தன் வாயைவைத்து மெல்லச்சொன்னான். அன்று இரவு அவன் மரித்துப்போனான். விசுவாசத்தின் பெலனும், ஈகையுமுள்ள அந்த ஏழைக்குடும்பத்தைக் கர்த்தர் அதிகமாய் ஆசீர்வதித்தார்.

இவ்விதமாய் விசுவாசம் தேவகிருபையினாலே கிரியைசெய்து பூரணப்படுகிறது. அதினிமித்தமே அப்போஸ்தலன் மக்கெதோனியருடைய உதாரத்துவ ஈகையைக்குறித்துப் பேசத்தொடங்கும்போதே "மக்கெதோனியா நாட்டுச்சபைகளுக்கு தேவனளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்" என்று சொல்லுகிறார். சாறிபாத் ஊர் ஏழை விதவையிடத்தில் எலியாத் தீர்க்கதரிசி அவளுடைய திராணிக்கு மிஞ்சினதைக்கேட்டான். பானையிலிருக்கும் ஒரு பிடிமாவைத் தீர்க்கதரிசிக்குக் கொடுத்துவிட்டால் தானும் தன் மகனும் என்ன செய்வோமென்று அவள் எண்ணியிருப்பாளானால் அதைக்கொடுக்கச் சம்மதித்திருப்பாளா? சம்மதித்திருக்கமாட்டாளே. ஆனால் அவளோ கர்த்தர் தன்னையும் தன் மகனையும் போஷிக்கவல்லவரென்று விசுவாசித்து அந்த விசுவாசத்தை தன் உதாரத்துவ கிரியையினாலேகாட்டி தேவகிருபையை விளங்கச்செய்தாளே.

மேலும் ஒருவன் கொடுக்கும் தொகைக்கும் அவன் வசத்திலிருக்கும் பொருளுக்குமுள்ள வித்தியாசமே கிறிஸ்தவ ஈகையின் அளவின் இன்னொருபாகம். காணிக்கைபோட்ட ஏழைவிதவை தனக்குள்ள எல்லாவற்றையும் போட்டுவிட்டாள். அவளிடத்தில் மீதமில்லை. அவள் உதாரத்துவமாய்க் கொடுத்தாள் என்பதற்கு ஐயமில்லை.

மக்கெதோனியர் மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்ததின் காரணத்தை அப்போஸ்தலன் கொரிந்தியருக்கு எடுத்துக்காட்டும் நோக்கமாய் "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே" என்றார். அதாவது, இயேசுகிறிஸ்துவின் கிருபையை நான் உங்களுக்கு நூதனமாய் அறிவிக்கவேண்டியதில்லை, அதை நீங்களே அறிந்திருக்கிறீர்கள். மக்கெதோனியா நாட்டில் பிர



யாணம்பண்ணினபோது நான் கண்ட உதாரத்துவ ஈகை அருவியை நீங்கள் அறிந்ததில்லை, மெய்தான். ஆனால் அதை பிறப்பித்த ஊற்றை அறிந்திருக்கிறீர்கள். கிறிஸ்தேசுவின் கிருபையே மக்கெதோனியா சபையில் பிரவாகித்து ஓடின உதாரத்துவ ஈகை அருவிக்கு ஊற்றாயிருக்கிறது. அக்கிருபையை அறிந்த அவர்கள் தேவசித்தத்தின்படியே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும் பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள். உங்கள்மேல் வைத்த கிருபையினாலேயே "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2 கொரி. 8. 9.) என்று சொல்லுகிறார். அவருடைய மிகுந்த தரித்திரத்தினாலே அவருடைய உதாரத்துவத்தின் ஐசுவரியம் பெருகுகிறது. கிறிஸ்தவனுடைய ஐசுவரியம் அவருடைய தரித்திரத்தின் அளவுக்குத் தக்கதாயும் அவனுடைய மேன்மை அவருடைய தாழ்மையின் அளவுக்குத்தக்கதாயுமிருக்கிறது. நாம் கிறிஸ்துவின் தாழ்மையில் அவருடைய தரித்திரத்தின் ஆழத்தை அளவிடக்கூடுமானால் கிறிஸ்துவுக்குள் நமது மேன்மையின் ஐசுவரியத்தையும் அளவிடக்கூடும். தெய்வ மகிமையினின்று சொல்லிமுடியாதவண்ணம் அவர் மரணபாதாளம்வரை தாழ்த்தப்பட்டதை நாம் உணர்ந்து நடப்போமானால் அவருடைய ஐக்கியத்தில் தேவகிருபையால் நாம் உயர்த்தப்படடிருக்கும் தெய்வ மகிமையின் கொடுமுடிக்கு ஏறுவோம். கிருபையின் மகத்துவத்தை அறியாதவனும் தன்னைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடாதவனும் தன்னுடையவைகளைக் கர்த்தருக்கும் அவருடைய ஊழியருக்கும் ஒப்புக்கொடுப்பதெப்படி? தேவகிருபையின் ஐசுவரியத்தில் பங்கடையாதவன், தன்னுடைய ஐசுவரியத்தில் கர்த்தருக்குப் பங்குகொடுக்கக்கூடுமோ? தேவகிருபையை உணர்ந்து தங்களைத்தாமே கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்தவர்களேயல்லாது வேறொருவரும் உதாரத்துவமாய்க் கர்த்தருக்கும் அவருடைய ஊழியருக்கும் தங்கள் பொருளை ஒப்புக்கொடுக்கமுடியாது.

சிலகாலத்திற்கு முன் அமெரிக்காவில் காட்டு ஜனங்கள் நடுவில் கர்த்தருடைய வேலையைச் செய்துவந்த ஒரு போதகர், அத்தேசத்தின் இன்னொருபாகத்தில் பெரிய வியாபாரிகளும் தனவந்தருமான சபையில் வேலைபார்த்துவந்த வேறொரு போதகருக்கு இந்தக் காட்டு ஜனங்களின் நிர்ப்பாக்கிய நிலைமையையும் அவர்கள் நடுவில் செய்யப்படுகிற தேவ ஊழியத்தையும் குறித்து எழுதியிருந்தார். அதைப்பார்த்த அந்தப் போதகர் அப்படிப்பட்ட ஏழை ஜனங்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்கிற நோக்கமாய் ஒரு ஞாயிற்றுக்கிழமை தமது சபையில் அவர்களைப்பற்றி அதிகத்தாபந்தத்தோடு பேசி அவர்களுக்கு உதவிசெய்யவேண்டு

டியது அவர்களுடைய கடமை என்று பிரசங்கித்தார். பிரசங்கத்தின முடிவில் காணிக்கை வாங்கப்பட்டது. சபையார் உற்சாகமாய் அதிகக் காணிக்கை கொடுப்பார்களென்று போதகர் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் சபையார் தாங்கள் வழக்கமாய்ப் போடுகிற காணிக்கைமட்டும் போட்டார்கள். போதகரோ! இலவுகாத்தகிளிபோல் ஏமாந்து தாம் இவ்வளவு அனுதாபத்தோடு பேசியும் ஜனங்கள் உற்சாகமாய்க் காணிக்கை கொடுக்கவில்லையே என்று மனம் சோர்ந்து தன் ஆசனத்தில் உட்கார்ந்தார். காணிக்கை வாங்கினவர் கடைசி ஆசனங்களில் வாங்கிக்கொண்டிருக்கும்போது, சபையாரிடத்தில் பிச்சை வாங்கி ஜீவனம் செய்துவந்த கால் முடமான ஒரு ஏழை ஸ்திரீ, கர்த்தர் நிமித்தம் இந்தக் காட்டு ஜனங்களுக்கு நான் என்ன கொடுக்கக்கூடும். என்னிடத்தில் ஒன்றுமில்லையே என்று கவலையோடு யோசித்துக்கொண்டிருந்து, நான் ஊன்றி நடக்கும் இரண்டு தடிகளையாவது கர்த்தர் நிமித்தம் அவர்களுக்குக் கொடுப்பேன் என்று தன் மனதில் தீர்மானித்துக்கொண்டு தன் கால்களுக்குப்பதிலாக ஊன்றிநடக்கும் தடிகள் இரண்டையும் காணிக்கைத்தட்டின்மேல் வைத்தாள். அதைக்கொடுத்துவிட்டு திரும்ப ஏதுவில்லாமல் அதைக் கொடுக்கும்போதே தள்ளாடி தன் இருப்பிடத்தில் மற்றவர்களால் தூக்கிவிடப்பட்டாள். இந்த ஏழை இவ்வளவு சுயவெறுப்போடு உதாரத்துவமாய் இந்த ஊன்றுகோல்களைக்கொடுத்ததைப்பார்த்து சபையார் தங்கள் மனதில் குத்துண்டவர்களாய் சைகைகாட்டி காணிக்கை வாங்கினவரை அழைத்து தங்கள் புஸ்தகங்களிலுள்ள வெற்றுக் காகிதங்களைக் கிழித்து பத்து, பதினைந்து, இருபது, முப்பது என்று தங்கள் பெயர்களோடு எழுதிக் காணிக்கைதட்டின்மேல் வைத்தார்கள். 2,000-ரூபாயிக்குமேல் சேர்ந்தது. ஆராதனை முடிந்தவுடனே ஒருவர் வந்து அந்த இரண்டு ஊன்றுதடிகளுக்கும் ரூபாய் 50 கிரயம் கொடுத்து வாங்கி அந்த ஏழைக்குத் திருப்பக்கொடுத்தார். முடமான ஏழையின் இவ்வுதாரத்துவ செய்கை அநேகர் உதாரத்துவமாய்க் காணிக்கை கொடுப்பதற்கு ஏதுவாயிருந்தது. இப்படிப்பட்ட சுயவெறுப்பும் உதாரத்துவமும் நம்மில் காணப்படவேண்டாமா? சிலர் தங்களை முற்றிலும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்துவிட்டோமாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனாலும் "அகோர தவசி விபரீதசோரன்" என்றாற்போல கூடியவரை தங்கள் பணப்பையை அவருடைய சம்பந்தமின்றி வைத்திருப்பது நல்லதென்றெண்ணுகிறார்கள். அவர்களுடைய எல்லாம் கர்த்தருக்குச் சொந்தம். ஆனால் அவர்களுடைய பொருள்மட்டும் அல்ல, அந்நியரைப் பட்சமாய் ஏற்றுக்கொண்டு வேண்டிய உபசாரம் பேசுவார்கள். ஆனால் ஒருபிடி அன்னம் அல்லது ஒரு அணா அவர்களுக்குச் செலவிடக்கூடாது. அவர்கள்



வார்த்தையில் ஐசுவரியவான்களாயும்; கிரியையிலோ தரித்திரர். அகத்திலே கத்தியும் புறத்திலே பக்தியுமான இவர்களுடைய கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறதுபோல், ஈகையில்லாத அவர்கள் அன்பும் செத்ததாயிருக்கிறது. நாவின் அதிகத்தைவிட கையின் கொஞ்சம் மேன்மையுள்ளதல்லவோ. அப்படிப்பட்ட கொஞ்சமும் மிகுதியான ஆசீர்வாதத்திற்கு ஏதுவாயிருக்கும்.

சிநேகிதனே! நீ தேவகிருபையை அறிந்தவனானால் உன் உபகாரத்தையும் பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் தேவஊழியர் ஏற்றுக்கொள்ளும்படி நீ அவர்களை எப்போதாவது வேண்டிக்கொண்டதுண்டா? அது உன் கடமையல்லவா? மக்கெதோனியர் அப்படி வேண்டிக்கொண்டார்கள். ஏனென்றால் அவர்கள் அப்படிச்செய்வது தங்கள் கடமையென்று அறிந்திருந்தார்கள். தன் கடமை இன்னதென்று அறிந்த ஒருவனுக்கு அக்கடமையை நிறைவேற்றும்படி சொல்லவேண்டியதில்லை. தானதர்மம் செய்வதும், காணிக்கை கொடுப்பதும் உன் கடமையென்று நீ அறிந்திருக்கிறாயா? அப்படியானால் அதைச் செய்யும்படி ஒருவரும் உன்னைக் கேட்டுக்கொள்ள வேண்டியதில்லையே. தவிரவும் தேவ ஊழியரில் சிலர் தங்களுடைய வேலைக்கும், சவரக்ஷணைக்கும்வேண்டிய பொருள் சகாயத்திற்காக அநேகரைப்போல மனுக்கள் மூலமாய் வெளியரங்கமாய்க் கேட்காமல், பவுல் அப்போஸ்தலனைப்போல எல்லாக்கஷ்டங்களையும் அனுபவித்து கர்த்தரிடத்திலேயே உதவியை எதிர்பார்க்கிறபடியால் அப்படிப்பட்டவர்களுடைய குறைவுகளை நீக்கும்படி உன் உதாரத்துவ ஈகையை அவர்கள் கேட்டுக்கொள்ளாமலே நீ கொடுக்கவேண்டியதுண்டு. நீ அப்படிக் கொடுப்பதை உன் திராணிக்குத் தக்கதாயும் திராணிக்கு மிஞ்சியும் கொடுத்தாயென்று தேவ ஊழியர் உன்னைக்குறித்து சாட்சி கொடுக்கக்கூடுமோ? கிறிஸ்தவனாகிய நீ உன் அறிவிலும், போதிப்பிலும், அன்பிலும், விசுவாசத்திலும், ஜாக்கிரதையிலும் பெருகுகிறதுபோல இந்தத் தர்மகாரியத்திலேயும் பெருகவேண்டுமென்று தேவ ஆவியானவர் கற்பிக்கிறார். கிறிஸ்தவன் வயது செல்லச்செல்ல இவ்விஷயங்களில் வளருகிறதாக நாம் எண்ணுகிறோம். ஏனென்றால் விருத்தாப்பியம் செல்லச்செல்ல மனுஷனுக்குண்டாயிருக்கிற சுபாவாக்கினி குறைந்துகொண்டே வருகிறபடியால் அதோடு அவனுடைய ஆசாபாசங்களும், இச்சைகளும் தளர்ந்து பரலோகசிந்தையுண்டாகக்கூடுமென்பது பொதுவான அபிப்பிராயம். ஆனால் வயது செல்லச்செல்ல அநேகரில் கிறிஸ்தவ லட்சணங்கள் குறைந்து பொருளாசையும் பிசினித்தனமும் வளருகிறதே. இது எவ்வளவு சஞ்சலமான காரியம்! தேவகிருபையின் உதா

ரத்துவ ஈவுகளைப்பெற்ற நம்மில் அவருடைய உதாரத்துவமும், கிறிஸ்துவின் ஜீவனில் ஐக்கியப்பட்ட நம்மில் அவருடைய சுயவெறுப்பின் மகிமையும் விளங்கவேண்டியது அவசியமல்லவா? "வாரியிறைத்தும் விருத்தியடைவாருமுண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாருமுண்டு. உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும். எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்" என்று ஞானி சொல்லுவதைக் கவனித்துக்கொள். உதாரத்துவத்தால் பொங்கின கிறிஸ்தவன் தன் ஆண்டவருக்கு அதிகப் பிரீதியுண்டாகத்தக்கதாய் அவருடையவர்களுக்கு நான் என்ன வகையான நன்மைகளைச் செய்யலாமென்று யோசித்துக்கொண்டிருக்கிறான். பொருளைச் செலவிடுவதால் மற்றவர்களுக்கு எப்படி நன்மைசெய்யலாமென்று நாம் எப்போதாகிலும் யோசித்ததுண்டா? அல்லது செய்ததுண்டா? அது நமது ஜீவிய கடமையாச்சுதே.

---

## நேர்ச்சை அல்லது பொருத்தனை.

"பொருத்தனைபண்ணி அதை உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நிறைவேற்றுங்கள்." (சங். 76 : 11.)

கர்த்தருடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர் தசமபாகங்களையும், தங்களுடையவைகளில் உச்சிதமானவைகளையும் தேவ ஊழியருக்குக் கொடுத்தார்கள். தேவ ஆராதனைக்கும் ஆலயப்பழுதுபார்ப்புக்கும் போதுமான பொருள் அவர்களால் கொடுக்கப்பட்டது. பண்டிகைத் தினங்களில் விசேஷித்தவிதமாய் அவனவன்பெற்ற ஆசீர்வாதங்களுக்குத்தக்கபடி காணிக்கை கொடுத்தார்கள். இவைகளுக்குத்தவிர அவர்கள் தங்கள் ஆண், பெண், பிள்ளைகள், மிருகங்கள், நிலங்கள், வீடுகள், பொருள்கள் முதலியவைகளைக் கர்த்தருக்கென்று நேர்ந்துகொண்டார்கள். லேவியராகமம் 27-ம் அதிகாரத்தில் இவைகளின் விபரமான கட்டளைகளைக் காணலாம்.

பொருத்தனைபண்ணப்பட்ட ஆண், பெண், பிள்ளைகள் அவரவருடைய வயசுக்கும், பொருத்தனைபண்ணினவர்களுடைய திராணிக்கும் தக்கபடி மதிப்புக் கிரயம் செலுத்தி மீட்கப்பட்டார்கள். சுத்தமான மிருகங்கள் பலியிடப்பட்டன. அசுத்தமான மிருகங்களும், நிலங்களும், வீடுகளும் ஆசாரியன்போட்ட மதிப்புக் கிரயத்தோடு ஐந்தில் ஒருபாகம் அதிகம் சேர்த்துச் செலுத்தி மீட்டுக்கொள்ளப்பட்டன. இக்கிரயத்தொகை ஆசாரியருக்குரியதாயிருந்தது.



பூர்வபக்தர் தங்களையும், தங்கள் பிள்ளைகளையும், பொருட்களையும், மிருகங்களையும் கர்த்தருக்குக் காணிக்கையாக நேர்ந்துகொண்டதுபோல இக்காலத்திலும் அநேகர் செய்துவருகிறார்கள். சிலர் தங்களுடைய பிள்ளைகளைக் கர்த்தருடைய ஊழியத்திற்கென்று நேர்ந்து ஒப்புக்கொடுக்கிறார்கள். சிலர் கோவில்களைக் கட்டிச் சிறப்பிக்கிறார்கள். சிலர் தேவ ஊழியரை ஆதரிக்கிறார்கள். சிலர் பிள்ளைகளைப் படிப்பிக்கவும் பள்ளிக்கூடங்களை ஆதரிக்கவும் பொக்கிஷங்களை வைக்கிறார்கள். சிலர் அஞ்ஞானிகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குச் செலவு கொடுப்பதாய் நேர்ந்துகொள்ளுகிறார்கள். கர்த்தருக்குக் காணிக்கையாக நேர்ந்துகொண்ட கோவில் மாடுகளும், கோவில் ஆடுகளும் அநேகருடைய மந்தையிலுண்டு. என்றாலும் அநேகர் தங்கள் இக்கட்டுகளிலும், வியாதிக்காலங்களிலும் கர்த்தருடைய ஊழியத்திற்கு தங்களை ஒப்புவிப்பதாய் அல்லது காணிக்கையாகப் பொருள் கொடுப்பதாய் நேர்ச்சை செய்து பின்பு மனம்மாறி தங்கள் பொருத்தனைகளைச் செய்யாமற்போகிறார்கள். இது மோசமான காரியமென்று அவர்கள் எண்ணுகிறதில்லை. பெற்றோரால் சிறுவமுதல் கர்த்தருக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டவர்களும், தேவ ஊழியத்திற்கென்று பொருத்தனை பண்ணப்பட்டவர்களுமான எத்தனையோபேர் பொருத்தனையை மீறி பொருளாசையினால் இழுப்புண்டு லௌகீக அலுவல்களில் சிக்கிக்கொண்டு துன்பமும் சஞ்சலமும் அடைகிறார்கள். ஒருவன், நான் அப்படிப் பொருத்தனை செய்துகொண்டதில்லை, என் பெற்றோர் அப்படி என்னைக்குறித்துப் பொருத்தனை செய்திருப்பதாய் அவர்கள் சொல்லக்கேள்விதான் என்கிறான். சிநேகிதனே! அப்படியானால் நீ அந்தப் பொருத்தனையின் நிபந்தனைக்குட்பட்டவனல்லவோ? பெற்றோர் உன்னைக் கர்த்தருடைய ஊழியத்திற்கு நேர்ந்துகொண்டதைக் குறித்து அவர்கள் சொன்னதை நீ கேட்டநாளிலே அதை ஆட்சேபித்து நீயொன்றும் சொல்லாமற்போனதினால் அந்தப் பொருத்தனையை நீயே ஏற்றுக்கொண்டு ஸ்திரப்படுத்தியிருக்கிறாய் என்று நினைத்துக்கொள். நீ போக்குச்சொல்ல இடமில்லை. உன் பொருத்தனையை நிறைவேற்று.

இன்னொருவன் பொருத்தனையின்படி நானே தேவ ஊழியம் செய்யவேண்டுமென்பது அவசியமில்லை. என் சம்பாத்தியத்திலிருந்து தேவ ஊழியரை சவ்ரக்ஷணை செய்தால் போதுமானது என்கிறான்.

சிநேகிதனே! உன் சம்பாத்தியத்திலிருந்து தேவ ஊழியரைப் பராமரிப்பதா உன் பொருத்தனை? நீ பொருத்தனை செய்தாலும் செய்யாவிட்டாலும் தேவ ஊழியரைப் பராமரிப்பது உன் கடமையாச்சுதே

பின்னை நீ உன் பொருத்தனையின்படி விசேஷித்துச் செய்கிறதென்ன? உன் ஆத்துமா, ஆவி, தேகம் முழுவதையும் கர்த்தரைச் சேவிப்பதற்காகப் பொருத்தனை செய்து ஒப்புவித்த நீ பிசாசையும் உலகத்தையும் சேவித்து அதினால் நீ பெற்றுக்கொண்ட இழிவான ஆதாயத்தினால் கர்த்தருக்குச்செய்த பொருத்தனையை நிறைவேற்ற யோசிப்பது எவ்வளவு அறிவீனம். இப்படிப்பட்ட அநேகர் தேவ ஊழியரை ஆதரிக்கும், தங்கள் கடமையை முதலாய்ச் சரியாய் நிறைவேற்றாதிருக்கும்போது, எனக்குப் போதுமான பணமிருக்குமானால் இப்படி அப்படிச்செய்துவிடுவேன் என்று பிதற்றுகிறார்கள். இது என்ன வீண் பேச்சு? கால்ரூபாயில் காணிக்கைகொடாதவன் கோடிரூபாயில் கோவில் கட்டவாபோகிறான்? சிலர் கர்த்தருக்குக் காணிக்கை செலுத்துவதாய் பொருத்தனை பண்ணி, நல் முயற்சிகளுக்குப் பொருள் சகாயம் செய்வதாய் வாக்குக்கொடுத்து அவைகளை உண்மையோடு நிறைவேற்றாமல் போனதினால் அநேக கஷ்டநஷ்டங்களடைந்திருப்பதை நாம் அறிவோமே. பொருத்தனை அதிக யோசனையோடு செய்யப்பட்டு அதிக விழிப்புடன் உண்மையோடு நிறைவேற்றப்படவேண்டிய ஒரு விஷயம். நமது உதாரத்துவம் கொடிய தரித்திரத்தினால் சோதிக்கப்பட்டபோதிலும் நமக்குள்ளவைகளிலிருந்து எடுத்து நமது பொருத்தனைகளை நிறைவேற்றவேண்டும். "நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால் அதைச் செய்யத் தாமதியாதே. உன் தேவனாகிய கர்த்தர் அதை நிச்சயமாய் உன் கையில் கேட்பார். அது உனக்குப் பாவமாகும். நீ நேர்ந்துகொண்டதைச் செய். நீ நேர்ந்துகொண்டதைச் செய்யாமற்போவதைப்பார்க்கிலும் நேர்ந்துகொள்ளாதிருப்பதே நலம்." (பிர. 5. 4, 6.) ஏனென்றால் "பரிசுத்தமானதை விழுங்குகிறதும், பொருத்தனை செய்தபின்பு யோசிக்கிறதும் மனுஷனுக்குக் கண்ணியாயிருக்கும், (நீதி. 20, 25.) "பொருத்தனை பண்ணாதிருந்தால் உன்மேல் பாவமில்லை. உன் வாயினால் சொன்னதை நிறைவேற்ற வேண்டும். உன் தேவனாகிய கர்த்தருக்கு உன் வாயினால் நீ பொருத்தனைபண்ணிச்சொன்ன உற்சாகபலியைச் செலுத்தித் தீர்ப்பாயாக," (உபா. 23. 23.) "[illegible] என்று சொல்லியும் கொடாமலிருக்கிற வஞ்சகன் மழையில்லாத மேகங்களுக்கும் காற்றுக்கும் சரி" (நீதி. 25. 14.) என்று வேதவசனம் நம்மை எச்சரிக்கிறது. ஒரு தரித்திரன் தான் தனவானாகும்படி தேவன் கிருபைசெய்வாரானால் தர்மகாரியத்துக்கென்று 500 ரூபாய் கொடுப்பதாகப் பொருத்தனை செய்துகொண்டான். பின்னம் தேடப்போனவனுக்குப் பண்டாரம் கிட்டியதுபோல அவன் நினைத்திருந்ததற்கு அதிகமாக அநேக கப்பல்களுக்குச் சொந்தக்காரனும் திரண்ட செல்வவானுமானான். ஆகிலும் அவன் ஆஸ்தியெ



ருகவே அவன் மனம் சுருங்கினது. எதெப்படியென்றால், அவன் தன் பொருத்தனையை நிறைவேற்ற மனமில்லாமல் ஐயோ 500 ரூபாய் எவ்வளவோ பெருந்தொகை, இத்தனை ரூபாய் கொடுக்கவேண்டுமென்று என்ன அவசரம் என்று தனக்குள்ளே யோசித்து, ஒரு வைத்தியசாலைக்கு 150 ரூபாய்மட்டும் அனுப்பினான். அவன் அப்படி அனுப்பின மறுநாளில் தபால் ஆபீசிலிருந்து அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், அவன் கப்பல்களில் ஒன்று வழியில் உடைந்து அமிழ்ந்துபோனதாக எழுதியிருந்தது. அவன் பணம் அனுப்பின சமயமே அவனுடைய கப்பல் சேதப்பட்டுப்போனதாகக்கண்டான். அற்ப ஆசை கோடிதவத்தைக் கெடுக்கும் என்றபடி இச்செய்தி, ஏ! மனிதா, பொருத்தனைக்குமாறாக 350 ரூபாய் மிச்சம் பிடித்த உனக்கு இப்பொழுது 50,000 ரூபாய் சேதம் வந்ததுபார் என்று சொன்னதுபோலிருந்தது.

"உன் மாம்சத்தைப் பாவத்திற்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே. அது புத்திப் பிசகினால் செய்ததென்று தூதனுக்குமுன் சொல்லாதே. தேவன் உன் வார்த்தைகளினால் கோபங்கொண்டு உன் கைகளின் கிரியையை அழிப்பானேன்?" (பிர. 5. 6.) நீங்கள் கர்த்தருக்குமுன் யாதொரு பொருத்தனை செய்துகொண்டிருந்தால் "அதை இப்பொழுது செய்து நிறைவேற்றுங்கள். கொடுக்கவேண்டுமென்கிற விருப்பமுண்டாயிருந்ததுபோல உங்களுக்கு உள்ளவைகளில் எடுத்து அதை நிறைவேற்றுதலும் உண்டாவதாக." (2 கொரி. 8. 11.)

## கோவில் பொக்கிஷம்.

கர்த்தருடைய ஜனங்கள் தேவ ஆராதனை சமயங்களிலே காணிக்கையாகவும், பொருத்தனைக் காணிக்கையாகவும், உற்சாகக் காணிக்கையாகவும், ஸ்தோத்திரக்காணிக்கையாகவும் செலுத்துவது சபையைச்சேர்ந்த இக்கற்ற காரியங்களின் பராமரிப்புக்காக கொடுக்கப்பட்டுப்போக மீதமானது கோவில் பொக்கிஷமாகச் சேர்க்கப்பட்டு பண்டசாலையில் இருக்கவேண்டியது. இப்படிப்பட்ட வகையினால் சேர்க்கப்படுகிற கோவில் பொக்கிஷங்கள் சபையின் தேவைகளுக்கேற்றவிதமாய் உபயோகிக்கப்படவேண்டியது அவசியம். இந்தக் கோவில் பொக்கிஷங்களை எடுத்துச் சபையார் சொந்தத்திற்கு உபயோகிப்பதும் வட்டிக்குக் கடன் வாங்குவதும் நியாயமல்ல. ஏனென்றால் அப்படி வாங்கப்பட்ட பொருள் திரும்பச் செலுத்தப்படாமல் கோவிலின் விருத்திக்குத் தடையாகவும், மற்றவர்களுக்கு இடையூறாகவும், கோவில் பொக்கிஷத்தை எடுத்து உபயோகிக்கிறவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்திற்கும் சாபமாகவுமிருக்கிறது.

தமிழ்ச்சபைகளில் பூர்வீகமான ஒரு சபையுண்டு. அதில் ஒரு காலத்தில் தேவபிரும்பையும் வை[illegible]மும் விளங்கினபடியால் அநேகர் தங்களைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து அவருடைய மகிமைக்கேதுவாக ஜீவித்தார்கள். கர்த்தர் அவர்களை அதிகமாய் ஆசீர்வதித்தார். சபையார் தங்களுடைய உதாரத்துவ ஈகையையும் மிஷன் சங்கத்தாரின் உதவியையும் கொண்டு ஒரு பெரிய கோவில் கட்டினார்கள். ஆனால் முன் மண்டபத்தில் கட்டிய கோபுரம் முடிவடைய அப்போது போதுமான பணம் கோவில் பொக்கிஷத்திலில்லை. ஆனால் கூடிய சீக்கிரத்திற்குள் அதற்கென்று போதுமான பணம் சேகரிக்கப்பட்டது. அச்சபையார் வருஷவாரி கொடுக்கிற சங்கப்பணத்தைத் தவிர, காணிக்கையாகவும், தசமபாகமாகவும் பொக்கிஷம் சேர்ந்தது. ஆனால் அச்சபையில் காரியக்காரர்களான சிலர் நன்மையுள்ளவர்களாய் கோவில் பொக்கிஷத்தை சற்பிரயோகம் செய்யாமல், கைமாறாகவும், வட்டிகொடுப்பதாகவும் எடுத்துச் செலவுசெய்துகொண்டார்கள். "கோவில் பூனை தேவர்களுக்கு அஞ்சாது" என்றாற்போல் கோவில் சொத்தைக் கொள்ளையிடுவதும், தர்மசொத்தைச் சாப்பிடுவதும் வரவர அவர்களுடைய [illegible]. கோவில் பெட்டிக்குள்ளிருந்த ரூபாய் 250-யும் சில கோவிற்பூனைகள் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு போய்விட்டன. தவிரவும் கொஞ்சங்குறைய காரியஸ்தர்கள் எல்லாரும் கோவில் பொக்கிஷத்தில் எடுத்துச் செலவுசெய்துகொண்டபடியால் அதை வசூலிக்கப் பிரயத்தனப்படுவாருமில்லை, கட்டிடவேலை முடிந்தபாடுமில்லை. சபையின் போதகன்மார் இதைக் கவனித்து, கடன்வாங்கின கோவில் பொக்கிஷத்தைத் திரும்பக் கொடுக்கும்படி கேட்டபோது அதிகம் கடன் வாங்கின மேல வீட்டுக்காரன் கொடுத்தால் கொஞ்சம் வாங்கின நான் கொடுத்துவிடமாட்டேனோவென்றும், முன்னால் வாங்கின கீழ வீட்டுக்காரன் கொடுத்தால் பின்னாலே வாங்கின நானும் தருகிறேனென்றும் போக்குச்சொல்லத் தொடங்கினார்கள். போதகர் சற்றுக் கண்டிப்பாய்க் கேட்கநேரிட்டால் "இது! ஐயர் இந்த ஊருக்கு வந்து வெகுநாளாச்சுதுபோலிருக்கே! என்ன ஆள் இன்னாரென்று தெரியாமலா இப்படிப் பேசுகிறீர்?" என்று முறுக்கவும் நெருக்கவும் ஆரம்பிப்பார்கள். "சிவசொத்துக் குலநாசம்" என்கிற பழமொழிக்குச் சரியாய் கோவில் சொத்தைச் சொந்தமாய் பிரயோஜனப்படுத்திக்கொண்டவர்களும், கடன்வாங்கிக் கொடுக்க மறந்துபோனவர்களும், திருடி அபகரித்தவர்களும் அவர்கள் குடும்பங்களும் தேவசாபத்துக்குள்ளாகி தரித்திரப்பட்டுச் சஞ்சலத்துக்குள் ஆழ்ந்திருக்கிறார்கள். தேவனுக்கஞ்சாத கோவில் பூனைகள் வேதனைக்கஞ்சும் காலம் வரப்போகிறது. அப்போது கர்த்தருடைய ஆல



யப்பொக்கிஷத்தைக் கொள்ளையிட்டவன் ஒருவனும் தப்பான். "களவு செய்யக்கூடாதென்று பிரசங்கிக்கிற நீ களவு செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில்களைக்கொள்ளையிடலாமா?"

சிநேகிதனே! நீ கோவில் பொக்கிஷ விஷயத்தில் சற்று கவனமுடையவனாயிருப்பது நலம். கோவில் பொதுவிஷயமாயிருக்கிறபடியால் அதின் பொக்கிஷம் பொதுவானது. ஆகையால் எல்லாரும் எடுத்துப் பிரயோஜனப்படுத்தலாமென்று எண்ணுவது பிசகு. கோவில் பொக்கிஷத்திலிருந்து கடன் வாங்குவதும், அதில் தனக்குச் சம்பந்தப்பட்ட ஒரு பாகமிருக்கிறதென்று சொல்லித் திரும்பக்கொடுக்க மறப்பதும், சபையாரில் ஒருவனும் கடன் கொடுக்கப்பட்ட பொருளை வாங்கிச் சேர்க்காமல் "யாருக்கு வந்த விருந்தோ" என்று கவலையற்றிருப்பதும் பிசகு. ஆகையால் அது விஷயத்தைக்குறித்து சில ஒழுங்கான ஏற்பாடுசெய்து அதின்படி தர்ம காணிக்கைகளாகிய கோவில் பொக்கிஷங்களைக் கையாடி வருவது மிகவும் நன்மையாயிருக்கும். சபையாரால் கொண்டுவரப்பட்டு கோவில்களில் செலுத்தப்படும் எல்லாக் காணிக்கைகளுக்கும் ஒழுங்கான கணக்கு வைக்கப்படவேண்டும். பின்னும் காணிக்கையில் ஒருபாகம் ஏழைகளின் பொக்கிஷமாக ஒவ்வொரு சபையிலும் பிரித்துவைக்கப்படுவது நலம். ஏனென்றால் கர்த்தருடைய பொக்கிஷத்தின்பேரில் முதல் சுதந்தரமுடையவர்கள் ஏழைகள்தான். சுவிசேஷத்தின் ஆரம்பத்தில் பூர்வ கிறிஸ்தவர்களும் தர்மப்பணத்திலிருந்து ஏழைகளை ஆதரித்த விஷயம் அப். 6. 1-ல் சொல்லப்படுகிறது. சபையின் மேய்ப்பர் அல்லது போதகர்களுடைய வேலைக்கு இடையூறாயிராதபடிக்கு இந்தப் பொக்கிஷங்கள் சபையில் உண்மையும் பொறுப்புமான ஒருவரிடத்தில் வைக்கப்பட்டு தேவ ஊழியருடைய ஆலோசனைப்படிக்கும், சபையார் சம்மதப்படிக்கும் ஏழைகளின் ஆதரிப்புக்காகவும், ஊழியருடைய சம்ரக்ஷணைக்காகவும், தேவ மகிமைக்கேதுவான நன்முயற்சிகளுக்காகவும் செலவிடப்படலாம். கோவில் பொக்கிஷம் விருத்தியாகுமென்று யோசித்து வட்டிக்குக் கடன் கொடுப்பதும், சீட்டு போடுவதும் பிசகு. அப்படிச்செய்வதால் அநேக கஷ்டநஷ்டங்கள் நேரிடுகிறது. ஆகையால் ராஜாங்கத்தாருடைய [illegible]ங்ஸ் பாங்கிகளிலே போட்டுவைப்பது மிகவும் நன்மையாயிருக்கும்.

ஒவ்வொரு சிறு சபையிலுள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் காணிக்கைகளை உற்சாகமாயும் ஒழுங்காயும் சேர்த்துவைக்கிறதானால் கோவிலுக்குப் போதுமான பொக்கிஷம் உண்டாயிருப்பதும் தவிர, அந்நியரிடத்திலும் மிஷனெரிமாரிடத்திலும் உதவியை நோக்கிக்கொண்டிராமல்

தங்களுக்குத் தாங்களே ஒரு காரைக்கோவில் கட்டிக்கொள்ளப் போது
மான பொருளிருக்கும். அன்றியும் ஒவ்வொரு சபையும் சத்தியத்திற்கு
உடன் ஊழியராயிருக்கும்படி அப்போதைக்கப்போது சுவிசேஷப்பிர
பல்லிய காணிக்கை சேர்த்து மிஷன் சங்கங்களுக்கும் சுவிசேஷகருக்
கும் உதவிசெய்யலாம். இவைகளைக் கவனித்து நடந்துகொள்ளுவதே
அநேகருக்கு உதவியாயும் சபைக்கு ஆசீர்வாதமாயும் தேவனுக்கு மகி
மையாயுமிருக்குமென்பதற்கு ஐயமில்லை.

## ஈகையின் பாக்கியம்.

"வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்."
(அப். 20. 35.)

உலகம் கொடுக்கிறதைவிட வாங்க ஆசைப்படுகிறது. நீ அதிகம்
கொடுத்தால் வறுமையாய்ப் போவாயென்று அது சொல்லுகிறது.
ஆனால் கர்த்தரோ வாங்குவதைவிடக் கொடுப்பதே பாக்கியமென்கி
றார். அதெப்படி?

முதலாவது. தனவந்தன் தரித்திரனிலும் பாக்கியவானென்று நீ
எண்ணுகிறாயல்லவா? ஆம்! அப்படியானால் கொடுக்கிறது வாங்குவ
தைவிடப் பாக்கியந்தானே. ஏனென்றால் தரித்திரன் வாங்குகிறான்
ஐசுவரியவானோ கொடுக்கிறான்.

இரண்டாவது. நீ எவ்வளவு அதிகம் கொடுக்கிறாயோ அவ்வளவு
அதிகம் வாங்குகிறாய். கொஞ்சம் விதைக்கிறவன் கொஞ்சமாயும், அதி
கம் விதைக்கிறவன் அதிகமாயும் அறுக்கிறதில்லையா? மண்ணிலே
போடப்பட்ட விதை பழுதுபோகாமல் முளைத்துப் பலன்தந்து ஒருவ
னையும் தரித்திரனாக்காமல் எல்லாரையும் ஐசுவரியவான்களாக்குகிறது.
ஆகையால் அதிகம் விதைத்து அதிகம் அறுப்பதும் பாக்கியமல்
லவா? அப்படி அதிகம் கொடுப்பதும் அதினாலே அதிகப் பலனடைவ
தும் பாக்கியந்தானே.

மூன்றாவது. கர்த்தரோடு எவ்வளவு நெருங்கி எவ்வளவு அவரை
ப்போலிருக்கிறோமோ அவ்வளவுக்கு பாக்கியந்தான். கர்த்தர் பிறரிடத்
திலும் வாங்குகிறதில்லை. அவர் எல்லாருக்கும் கொடுத்துக்கொண்டே
யிருக்கிறார். உன் செல்வம் அவருக்கு வேண்டியதாயிராது; பூமியி
லுள்ள பரிசுத்தவான்களுக்கும், நீ முழுவதும் அன்புகூருகிற மகாத்து
மாக்களுக்கும் வேண்டியதாயிருக்கிறது. நீ வாங்காமல் அவர்களுக்
குக் கொடுத்துக்கொண்டிருப்பதால் தேவனைப்போலிருக்கிறாய். தேவ
னைப்போலிருப்பது பாக்கியமல்லவோ? தேவதூதருக்குக் கிடையாத



தும், அவர்கள் பொறாமைகொள்ளக்கூடியதுமான ஒரு பாக்கியம் கிறி
ஸ்தவனுக்கு உண்டானால் அது மற்றவர்களுடைய துன்பத்தை நீக்கி
அவர்களுக்கு இன்பமுண்டாகும்படி தன்பொருளைக் கொடுப்பதுதான்.
ஆகையால் ஒருவன் பாக்கியவானாயிருக்கவேண்டுமானால் அவன் கொ
டுக்கிறவனாயிருக்கவேண்டும். பசித்தாருக்கு அன்னமும், தவித்தாருக்
குத் தண்ணீரும், உடையில்லாருக்கு உடையும், பரதேசிக்குத் தங்கு
மிடமும் கொடுப்பது உள்ளோர் கடமை. இல்லாதோருக்குக் கொடுக்
கவே உடைமை உள்ளோருக்கீந்தார் சுவாமி. இல்லாதாருக்குக் கொடா
தபொருள் கொள்ளையிட்ட பொருளாம். ஏனென்றால் "கொடுத்துக்
கெட்டவர்களுமில்லை கொடாமல் வாழ்ந்தவர்களுமில்லை." "இட்டா
ருக்கு இட்டபலன்." இட்ட பொருளுக்கு எத்தனை நன்மை, இடப்
பெற்றோருக்கு எவ்வளவு சந்தோஷம். இட்டதைக்கு எத்தனை புகழ்
ச்சி. இட்டோன் மனதுக்கு எவ்வளவு மகிழ்ச்சி. "கொடுங்கள், அப்
பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்ற தேவவாக்குத்தத்தம்
கிறிஸ்தவர்களிடத்தில் மாத்திரமல்ல ஈகையுள்ள சகல மனிதரிலும்
நிறைவேறி வருகிறது. தர்மராஜாக்கள் அநேகர் பரோபகார சிந்தை
யோடு உதாரத்துவமாய்க் கொடுத்து இவ்வுலகப் பாக்கியமடைகிறார்
கள். ஏனெனில் "ஆண்டவர் பொருளை அறிந்து வணங்காதோரிட்ட
தர்மம் மாண்ட மரத்துக்கிணைத்த பூவே" என்றறிந்துகொள்ளாதிருப்பது
மிக்க விசனமே. ஆனால் இப் [illegible] பாக்கியமடைய
விரும்பும் கிறிஸ்தவர்கள் தாங்கள் அஞ்ஞானிகளாயிருந்தபோது பேய்க்
கொண்டைக்கும், கோவில் குளங்களுக்கும், சத்திரம் சாவடிகளுக்கும் கொ
டுத்த அளவு அவர்கள் கிறிஸ்தவர்களானபின் காணிக்கைக்கும், தேவ
ஊழியத்திற்கும், ஏழைகளுக்கும் கொடாமலிருப்பதேனோ? "ஒளி
யின் பிள்ளைகளைப் பார்க்கிலும் இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் அதிகப்
புத்திமான்களாயிருக்கிறார்கள். நீங்கள் மாறும்போது உங்களை நித்திய
மான வீடுகளிலே ஏற்றுக்கொள்ளுவாருண்டாகும்படிக்கு அநீதியான
உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்" என்
று இயேசு சொல்லியது இப்படிப்பட்டவர்களைக் குறித்தல்லவோ?
"அநீதியுள்ள உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தானென்று எஜமா
ன் கண்டு அவனை மெச்சிக்கொண்டான்." அப்படியே தேவனுடைய
வாக்குத்தத்தங்களை நம்பி தனக்குள்ளவைகளைச் செலவு செய்வதில்
மறுமைக்குரிய மெய்யான விசுவாசத்தைப் புத்தியாய் உபயோகிப்ப
தைப்பற்றி பரம எஜமான் நம்மை மெச்சிக்கொள்ளுகிறார். இரட்சக
ருடைய வார்த்தைகளில் உலகத்துக்குரிய மூன்று காரியங்கள் பரலோ
கத்துக்குரிய மூன்று காரியங்களோடு ஒப்பிடப்படுகின்றன. அவையா
வன: (லூக்கா. 16. 8, 9.)

(1) மற்றவனுடைய கொஞ்சப்பொருள், உன்னுடைய அதிகப் பொருளுக்கும்; (2) அநீதியான உலகப்பொருள், மெய்யான பரம பொருளுக்கும்; (3) மற்றவனுடைய பொருள், உன்னுடைய சொந்தப்பொருளுக்கும் ஒப்பிடப்படுகிறது. மற்றவனுடைய அநீதியான கொஞ்சப்பொருளில் நீ உண்மையற்றவனாயிருப்பாயானால் உன்னுடைய மெய்யான அதிகப்பொருளிலே நீ எப்படி உண்மையுள்ளவனாயிருக்கக்கூடும்? இவ்வுலகத்தின் பிள்ளைகள் உண்ணவும், உடுக்கவும் கவலையுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால் "நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும், அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" (மத். 6. 34) என்று எச்சரிக்கிற ஆண்டவர் "தேவனுடைய இராஜ்யத்தையும் அதின் நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் கூடக் கொடுக்கப்படும்" என்று வாக்களிக்கிறார். பரலோகத்தில் உன்வரவை எதிர்பார்க்கும்படி உன்னுடைய பொருளை அங்கே அனுப்பிவை. தேவனுடைய இராஜ்யத்தையும் அதின் நீதியையும் அபிவிர்த்திசெய்ய நீ செலவிட்ட பத்துத் தாலந்துகளைப் பத்துப் பட்டணங்களாகவும், உன் செம்பை வெள்ளியாகவும், வெள்ளியைப் பொன்னாகவுமாக்குகிற ஆண்டவருக்கு முன்பாக உன் விசுவாசத்தின் சிறிய [illegible] திரளான பலனை அடைவாய். பரலோகத்திலே நமக்கு நித்திய வாசஸ்தலம் கட்டப்படுகின்றது. இவ்வுலகத்தில் நாம் [illegible] செய்யும் தர்மக்கிரியைகள் ஒவ்வொன்றும் அம்மாளிகைக்கென்று உன்னதமானவரிடம் நாம் அனுப்பிக்கொண்டிருக்கும் சாமான்களென்பதைக் காட்ட ஒரு கதையுண்டு.

மகமதிய அரசன் ஒருவன் தன் பிரதானிகளில் ஒருவனாகிய சுல்தான் ஹாமத் என்பவனிடம் திரண்டபொருள் கொடுத்து அதைக் கொண்டுபோய் [illegible]மலையில் சிங்காரமான அரண்மனை ஒன்று தமக்குக் கட்டுவிக்கும்படிக்கு ஆக்கியாபித்தார். ஹாமத் அதை வாங்கிக்கொண்டு போனவன் திரும்பிவந்து அரண்மனை கட்டியதைப்பற்றி வெகுநாளாய் யாதொரு செய்தியும் இராஜனுக்குத் தெரிவிக்கவில்லை. சிறிது காலத்திற்குப்பின் அரசனே அவனைத்தேடிப் புறப்பட்டார். அவர் சிலநாள் தேடியலைந்தும் காணாமல் கடைசியாக மலையுவாரத்தில் ஒரு ஊரில் ஹாமத் வெகு ஜாக்கிரதையாய் முயற்சிசெய்துகொண்டிருப்பதைக் கண்டுபிடித்தார். ஆனால் அம்முயற்சி அரண்மனைகட்டும் வேலியாயிராமல் கொடிய பஞ்சத்தால் வாடிவதங்கிச் சாகும் ஏழைகளுக்கு அன்னமிட்டுப் பிழைப்பூட்டும் வேலியாயிருந்தது. இதைக் கண்ட அரசன் கோபங்கொண்டு, "மண்கலம் வாங்க வந்தவனுக்கு



வெண்கலக்கடையேன்?" நான் அரண்மனை சமர்ப்பிக்கக் கொடுத்த என் பணத்தையெல்லாம் ஏழைகளுக்கு வீணாய்ச் செலவழித்துப்போட்டாயே என்று சொல்லி விசனத்துடன் தன் இருப்பிடம் போனார். அன்றிரவு அந்த அரசன் சொற்பனத்திலே சூரியனைப்பழிக்கும் ஜோதிப்பிரகாசமும், சுத்தத் தங்கமயமுமான அரண்மனை தனக்காகக் கட்டப்பட்டிருப்பதாய்க் கண்டு ஆச்சரியமடைந்து காலையில் விழித்தபோது ஏழைகளுக்கு அன்னதானம் அளிப்பது ஒருக்காலும் அழிந்துபோகாத நிலையான மாளிகையை மேல்லோகத்தில் கட்டிவைப்பதற்குச் சரியாகும் என்று சொல்லி ஹாமத்பேரிலுண்டான கோபம் நீங்கி ஆனந்தமடைந்தார்.

"கொடு அப்பொழுது கொடுக்கப்படும்" என்று கர்த்தர் சொல்லும்போது, அதை யார் துணிந்து செய்யலாம்? கையிலிருக்கிறதைக் கொடுத்துவிட்டால் நான் என்ன செய்வேன், கையிலிருக்கிறதல்லவோ எனக்கு உதவி, இனிமேல் எனக்குக் கிடைப்பது நிச்சயமல்ல என்கிறாய். உலகத்தின் சர்வ சிருஷ்டிகளையும் போஷித்துக் காப்பாற்றுகிற கர்த்தருக்கு உன்னிடத்திலிருப்பதைத் தவிர வேறு இல்லையா? அவர் உன்னைப் போஷிக்கமாட்டாரா? கர்த்தர் உனக்குக் கொடுப்பாரென்று நீ நம்பாததினாலே உனக்குள்ளதைக் கொடாமல் பத்திரப்படுத்துகிறாய். நீ அப்படிச் செய்யவேண்டியதுதான். ஏனென்றால் உன் விசுவாசத்தின்படியே உனக்கு ஆகும். நீ அவிசுவாசத்தோடு செய் [illegible] தேவ பார் [illegible]. ஆனால் விசுவாசிக்கோ கர்த்தருடைய ஐசுவரியத்தின்மேல் சுதந்தரமும், கிறிஸ்து இயேசுவின் நாமத்தினால் முத்திரிக்கப்பட்ட உறுதியான வாக்குத்தத்த சாதனமும் உண்டு. ஆகையால் அவன் அதை நம்பித்துணிந்து கொடுக்கிறான் ஆசீர்வாதமான திரண்ட பலனையும் அறுக்கிறான். கிறிஸ்தவர்கள் அநேகர் ஐசுவரியவான்களாயிருப்பதற்கு இப்பிரமாணத்தைக் கைக்கொண்டு ஜீவிப்பதே காரணம். அமெரிக்கா கோடீஸ்வரரான ஜான் ராக்பெல்லர், அந்திரேயா கார்ணகி, ஜான் உவானமேக்கர் முதலியவர்கள் பாக்கியமுள்ள பெருந்த கொடையாளிகள், அவர்கள் பொருளில்மட்டுமல்ல, ஈகையிலும் ஐசுவரியவான்களானதையால் வருஷவாரி இலட்சக்கணக்கான பவுன் பரோபகாரவிஷயமாய்ச் செலவிடக் கொடுக்கிறார்கள். ஐசுவரியம் தொலைகயிலேயாயிருக்கிறது? அதை அனுபவிக்கும்வகையிலல்லவோ இருக்கிறது. செல்வத்தைத் தகுந்தபடி அனுபவிப்பதும் அதை சற்பிரயோகம் பண்ணுவதுமே ஐசுவரியம். திரண்ட ஐசுவரியம் பாவமல்ல. கர்த்தர் அளவற்ற ஐசுவரிய சம்பன்னரானபடியால் அவருடைய ஆசீர்வாதமே நம்மை ஐசுவரியவான்களாக்குகிறது. அவருடைய ஈவ்

கள் யாவும் தன்னிலேதானே நலமும் புறக்கணிக்கத்தக்கதுமாயிருக்கின்றன. ஆகுல் தேவன் அவனவனுக்குக் கொடுத்திருப்பது போதுமென்றிராமல் அதிக ஐசுவரியவான்களாகவேணுமென்ற அடக்கமுடியாத தாறுமாறான ஆசையும், வெகுபணம் சேர்ப்பதற்கென்று இரவும் பகலும் கவலையும் பிரயத்தினமுமாயிருப்பதும், தன்னிடமிருப்பதை தேவசித்தப்படி நற்காரியங்களுக்குக் கொடாதிருப்பதும் அறிவுக்கீனமானவையாயிருக்கிறது. உலோபி லோபி ஊதாரி ஆகிய இருவரும் ஒருவாறு குற்றமுடையவர்களேயாயினும், ஊதாரியின் பொருள் நாற்புறமும் பரவுகிறபடியால் அர்த்தசாஸ்திர சித்தாந்தப்படி அவன்தான் கெட்டாலும் அதினால் மற்றவர்கள் பிரயோஜனமடைய ஏதுவாயிருக்கிறது. ஆகுல் லோபசலுபன் வாழ்க்கையில் ஈகில்லாப்பிணியைப்போல உதவியற்றவன் ஒருவனுமில்லை. "எடுத்து வாழ் அல்லது கெடுத்து வாழ்" என்பது பண ஆசைக்காரனுகிய அவனுடைய ஜீவியப்பிரமாணம். பட்டினி கிடந்தாகிலும் பணம், தூக்கம் கெடுத்தாகிலும் துட்டு, சங்கடப்பட்டாகிலும் தங்கம், பொய் சொல்லியாகிலும் பொன், சோரம்போயாகிலும் செல்வம் என்பது அவனுடைய வேதம். பணத்தைத் தேடிக் குவித்து வைக்கவே தான் இவ்வுலகத்தில் பிறந்திருப்பதாக அவன் எண்ணுவதால் அவனுக்குப் பக்திவிஷயமும் பாரிவிஷயமல்ல, பணவிஷயமே விஷயம். அவன் ஜெபம்பண்ணுவது அபூர்வம். எப்போதாகிலும் அவன் ஜெபம் பண்ணுகிறதானால் உத்தியோகத்தில் உயரவும், வட்டிப் பணம் கூட்டி ... தானியங்களுக்கு விலையும் வேணும் என்பதே அவன் மன்றாட்டு. தவிரவும் அவன் ஒரு முட்டைப்பூச்சியைப்போல தன்னண்டை வருகிறவர்களையெல்லாம் மாட்டி இழுத்துக்கொண்டு அவர்களைச் சேதப்படுத்தித் தனக்கு ஆதாயம் வருவிக்கப் பார்க்கிறபடியால் தேவதயவையும் ஆசீர்வாதத்தையும் இழந்து, மனச்சாட்சியையும் கற்கீர்த்தியையும் கெடுத்து, பிறர் அன்பையும் சிநேகத்தையும் போக்கடித்து, சாபத்தையும் ஆக்கினைத்தீர்ப்பையும் வருவித்துக்கொள்ளுகிறான்.

சில வருஷங்களுக்கு முன்னே லண்டன் நகர் வாசியான ஒரு மனிதன் இருந்தான். அவனுக்கு ஜான் அயர் என்று பெயர். அவனுக்கு மூன்றுலட்ச ரூபாய் பெறுமான சொத்துண்டு. பொருளாசை என்னும் மம்மோன் அவனை ஆட்கொண்டிருந்தபடியால், ஒரு நாள் ஒரு கடையில் போய் சில அட்டிப்பெறுமான பல கடுதாசிகளைத் திருடி கையில் கையும் களவுமாய்ப் பிடிக்கப்பட்டு, பாருவில் வைக்கப்பட்டு அவமானமும் சிட்சையுமடைந்தான். அவனுக்கு நெருங்கிய இனத்தானான ஒரு தனவந்தன் இருந்தான். அவருக்குப் பிள்ளைகளில்லாததால்



தமக்குப் பிராணசிநேகிதனான ஒரு குருவுக்குத் தமது ஆஸ்திபாஸ்திகள் யாவும் சேரவேண்டுமென்பதாய் மரணசாதனம் எழுதி அதை அந்தக் குருவின் வசம் ஒப்புவித்திருந்தார். ஆனாலும் அந்தத் தனவான் மரணகாலத்திற்குமுன் மனம்மாறி வேறொரு சாதனம் பிறப்பித்து, அதின்படி தமது இஷ்டனான குருவுக்கு ரூபாய் 5,000 மாத்திரம் கொடுக்கவும், மற்ற அனைத்தும் தமது இனத்தானாகிய ஜான் அயர் என்பவனுக்குச் சேரவேண்டுமென்றும் எழுதிவைத்திருந்தார். தனசீமானான அந்தத் துரை ஜீவித்துப்போனபின் ஜான் அயர் என்பவன் அவருடைய கடுதாசிகளுக்குள்ளே இந்தக் கடைசியான சாதனமிருக்கக்கண்டு, அதில் எழுதியிருந்தபடி குருவுக்கு 5,000 ரூபாய் கொடுக்க விருப்பமற்றவனாய் அவ்வளவு சொற்பத்தொகையையும் தொலைத்துப்போடவேண்டுமென்று கருதி அந்த சாதனத்தை அடுப்பில் சுட்டெரித்துப்போட்டு ஆஸ்திமுழுவதையும் தானே எடுத்துக்கொண்டான். மதிகேடனான அவனுக்கு முந்தின மரண சாதனமிருப்பது தெரியாது. இதினிடையில் அந்தத் தனவந்தரின் மரணகாலத்திலே தூரதேசம்போயிருந்த குருவானவர் இறந்துபோன தமது சிநேகிதனைப்பற்றி துக்கம் விசாரிக்க வந்திருந்து, அவர் சாகுமுன் ஏதாவது மரணசாதனம் பிறப்பித்ததுண்டோவென்று கேட்க, ஜான் அயர் என்பவன், "செக்குலக்கையை விழுங்கிவிட்டுச் சுக்குத்தண்ணீர் குடித்தாற்போல" அப்படி யாதொன்றும் கிடையாது; ஆஸ்திமுழுவதையும் மரணசமயத்தில் அவருக்குக் கைமாறாய், மெய்யுதவிசெய்த தனக்கே வாய் விசேஷமாய் விட்டுப் போனதாக வெகு கொண்டாட்டமான சத்தியப்பிரமாணம் செய்தான். அதைக்கேட்ட அந்தக் குருவானவர் தன் சட்டை ஜேப்பிலே கைபோட்டு அங்கிருந்த மரணசாதனத்தை எடுத்துக்காட்டினுர். அதிலே குருவானவருக்கு ஆஸ்திமுழுவதும் எழுதிக்கொடுக்கப்பட்டிருப்பதைப்பார்த்து வெட்கி மரம்போல நின்றான். ஆஸ்தி அந்த முந்தின சாதனத்தின்படி குருவுக்குச் சொந்தமானது. "ஆட்டைக்கொடாத இடையன் ஆனைக்கொடுத்தாற்போல" குருவானவருக்கு ரூபா 5,000 கொடுக்காமல் வஞ்சித்த ஜான் அயர் தன் கைசெட்டின கன திரவியத்தையும் இழந்து ஏமாந்திருந்தான்.

பணத்தைத் தாங்கள் ஆளாமல் பணம் தங்களை ஆளும்படி இடம்கொடுப்போருக்கு என்ன குணம் வரும் என்பதை நாம் பிரத்தியட்சமாய்க் கண்டிருக்கிறோம். அவர்களுக்குள் கபடு, கர்வம், அகந்தை, அகங்காரம் முதலிய துர்க்குணங்கள் குடிகொண்டிருக்குமேயன்றி வேறல்ல. பணத்தோடு சம்பந்தப்படுவதெல்லாம் துன்பமே; என்றாலும், "உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக்கொடு, உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிற

வனுக்கு முகங்கோணுதே" என்றொரு வசனம் வேதாகமத்தில் உண்டென்பது முதலாய் அநேகருக்குத் தெரியாது. ஐந்துவந்த இடத்தில் ஐம்பதும், ஆயிரம் வந்த இடத்தில் நூறும் வந்துவிட்டால் அவர்கள் சுத்தமங்கி ஞாபகம் குறைந்துபோகிறது. பணம் பற்றியிலே, குலம் குப்பையிலே. பெரியோரைக்கண்டால் வணக்கமில்லை. சிறியோரைக்கண்டால் பட்சமில்லை. எளியோரைக்கண்டால் இரக்கமில்லை. முன் இவர்களாயிருந்தபேரைச் சந்திக்கநேரிட்டால் அவர்கள் இன்னாரென்று தெரிகிறதில்லை. வலியத் தெரிவித்தாலும் ஞாபகப்படுகிறதில்லை. ஞாபகப்பட்டாலும், பேச நேரமில்லை. கடிதத்தின்மூலமாய்க் கஷ்டத்தைத் தெரிவித்தால் கடுஞ்சோலியால் கவனிக்கமுடியாது. இப்படிப்பட்டோரைப் பெருமை நீசப் பெருமையல்லாமல் வேறென்ன? "செல்வம் சகடக்கால்போல்வரும்" என்பதையும், "வண்டி ஓடத்தில் ஏறும், ஓடம் வண்டியில் ஏறும்" என்பதையும் மறந்து தலைகீழாய் நிற்பது எவ்வளவு மதியீனம்.

சிநேகிதனே! உன் முன் நிலைமையைக்குறித்த ஞாபகம் எப்போதுமிருப்பது நலம். இஸ்ரவேலர் தங்கள் முன் நிலைமையை மறந்து நன்றிகெட்டுப்போனது, "நீங்கள் வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையையும், நீங்கள் தோண்டி எடுக்கப்பட்ட துரவின் குழியையும் நோக்கிப்பாருங்கள்" என்று எகோவா எச்சரித்தார். (ஏசா. 51. 1.) நீ உன் முன் நிலைமையைப்பார்க்கும்போது கர்த்தர் உனக்குச்செய்த கிருபையை உணர்ந்துகொண்டு அவருக்கு நன்றியறிதலுள்ளவனாயிருப்பதோடு ஏழையாயிருந்த உனக்குப் பிறர் இரங்கி நன்மை செய்ததுபோல நீயும் எளியவர்களுக்கு இரங்கி நன்மை செய்ய விரும்புவாய். நீ வீண்பெருமைகொண்டு ஏழைகளை அவமதிக்கவும் தேவ ஈவைத் துர்ப்பிரயோகம் செய்யவும் ஏதுவிராது. ஆகையால் உனக்கு இன்னினி வந்தாலும் உன் மண் கிண்ணியை மறந்துவிடாதே. நீ பொன் சுவீட்டில் வாழ்ந்தால் உன் குச்சுவீட்டை மறந்துவிடாதே. அப்போது நீ தாவீது அரசனைப்போல "தேவரீர் என்னை இம்மட்டும் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம், என் வீடு எம்மாத்திரம்" என்று சொல்லி தாழ்மையான மனதோடு கர்த்தரை ஸ்தோத்தரிப்பாய். ஆனாலும் இதை மறந்து "கொக்குக்குக் கண் கொண்டையிலே" என்றாற்போல சம்பாதிப்பதில் சங்கடத்தையும், காப்பாற்றுவதில் கவலையையும், இழப்பதில் துக்கத்தையும், செலவுசெய்வதில் பாவத்தையும் விளைவிக்கிற பணத்தின்மேலே எப்போதும் சிந்தையாய் ஜீவித்து தன் ஆத்தும வாழ்வை இழந்துவிடுகிறவன் எவ்வளவு நிர்ப்பாக்கியன். ஒருவேளை அவன் தன் பணத்தை தன் பிள்ளைகளுக்கு வைத்து அவர்களை ஐசுவரியவான்களாக்குவானோ? இல்லவே இல்லை. அவன் அத்தனை கஷ்டப்பட்டு வெட்கத்தையும் நிந்தையையும் பின் வைத்து அவர்களைப் பிச்சைக்காரராக்கிப்போகிறான். "பொருளாசைக்காரன் தன் வீட்டைக் கலைக்கிறான்" என்று ஞானி சொல்லியபடி அவன் குடும்பகாரியம் முடிகிறது.



கிராமம் ஒன்றில் ஒரு சிறு கோவிலுண்டு. அது வெகு நாட்பட்ட கட்டிடமாயிருந்தபடியினாலே அதைப் புதுப்பித்து அலங்கரிக்கவேண்டுமென்கிற எண்ணம் சபையார் மனதில் கிளம்பினதினால் அவர்கள் ஒன்றுகூடி போதுமான தொகை சேர்த்து அதைச் செய்து முடித்தார்கள். ஆகிலும் அந்தக் கோவிலுக்கேற்ற மணியில்லை. முன் இருந்தது மெத்தச் சிறியது. தக்க மணி ஒன்று வாங்கவேண்டுமென்று கருதி இரண்டு குடித்தனக்காரர் ரூபாய் 200 சேர்த்து அந்த இருநூறு ரூபாய் நோட்டைக் காகிதத்தில் மடித்து அதின்மேல் "கோவிலுக்குப் புது மணிவாங்க" என்று எழுதி உண்டியல் பெட்டியில் போட்டார்கள். இந்த நல்ல மாதிரியை அநேகர் பின்பற்றி ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற தொகை கொடுத்தார்கள். ஓரே ஒரு லோபிமட்டும் இதற்கு [illegible] தன்னால் இயன்ற இடையூறு [illegible] ஆரம்பித்தான். கோவில் புதுப்பித்ததே அவன் பொறுக்கமுடியாத காரியம். புதுமணிப்பேச்சோ அவன் காதில் காரசம்போலிருந்தது. அவன் வீடுவீடாய் நுழைந்து, வெகுகாலமாய் அடிபட்ட பழையமணியே போதுமானதாயிருக்க புதுமணி வாங்குவது புத்தியீனம் என்று சொல்லிக்கொண்டு திரிந்தான். தக்க மனுஷர் அதை ஆட்சேபித்துப் பேசுகையில் அவன் முறுக்கும் திருக்குமாய்க் கையை மடக்கி மேசையிலே அடித்து நான் இதற்கு ஒருபோதும் சம்மதியேன். அதற்கு ஒரு செப்புச்சல்லியும் கொடேன். ஒரு புதுமணி இந்தக் கோவிலில் அடிபடுமானால் நான் என் இருகாதையும் கெட்டியாய் அடைத்துக்கொள்வேன். அந்த மணிச் சத்தத்தைக் கேட்கமாட்டேன் என்று சொன்னான். மணி விஷயமாய்ப் பணம் சேரச்சேர லோபிக்கு மனவருத்தம் மேலிட்டது. அவன் என்ன பாடுபட்டும் மணி வாங்குவதைத் தடுக்க முடியாமல் போயிற்று. சபையார் ஒரு பெரிய மணியை வாங்கி வண்டியிலேற்றித் தெருவழியாய்க் கொண்டுவருகையில் யாவரும் கைப்பிடித்து ஆர்ப்பரித்தார்கள். ஆனால் அந்த லோபியோ கர்த்தரால் அடிக்கப்பட்டு வியாதியாயிருந்தான். அவன் அந்த மணியைப் பார்க்கவில்லை. அதைக் கோபுரத்தில் ஏற்றுகிற விஷயத்தைக்குறித்துக் கேள்விப்பட்டபோது தான் அதற்கு ஒரு காசும் கொடாமல் போனதற்காக சந்தோஷப்பட்டுக்கொண்டான். ஆனால் மணியடிக்கத் தயாராகுமுன் அவன் செத்துப்போனான்.

இது கர்த்தருடைய கரமென்று சொல்லி அநேகர் பயந்தார்கள். புதுமணியடிப்பதைக் கேட்கமாட்டேன் என்றவன் அஸ்தக் கோளாமையோ போனான் [illegible] தை முதல் விசையாக அவன் இழவுக்காவது அடிப்போமென்று அடிக்கத் துவக்குகையில் மணியின் நாக்குக் கழன்று விழுந்தது. விழுந்த நாக்கைப் பிரயாசத்தோடு மாட்டித் திரும்ப அடிக்கையில் அது அடிபடாதிருந்தது. அடக்கத்திற்கு வந்த யாவரும் இந்த அதிசயத்தையும் லோபியின் நிர்ப்பாக்கியத்தையும் கண்டு எச்சரிப்படைந்தவர்களாய் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்கள். மறுநாள் கிலோ அந்த மணி வெகு இன்பமாய்த் தொனித்து கிறிஸ்தவர்களைக் கோவிலுக்கு அழைத்தது. இது சுமார் ஏழுபது வருஷங்களுக்கு முன் நடந்த வாஸ்தவமான சங்கதி.

இவ்விதமாய் தன் பொருளை நன்முயற்சிக்கு வழங்காமல் அதினால் வரும்பலனை இழக்கும் நிர்ப்பாக்கியர் ஈகையினால் விளையும் மகிழ்ச்சியை அறியாதவர்களாகமட்டுமல்ல, வெகு ஞானிகள்போல் பேசி எவ்வித நன்முயற்சிக்கும் இடையூறாயுமிருக்கிறார்கள்.

[illegible] சிறந்த ஏக்கிய காரணம். இந்தியர் தங்கள் பொருளை பரோபகாரசிந்தையோடு மிகுதியாய்க் கொடுக்கிறதுமில்லை. ஆகையால் அமெரிக்க அல்லது அங்கிலேய கிறிஸ்தவர்களைப்போல திரண்ட ஆஸ்தியால் ஆசீர்வதிக்கப்படுவதுமில்லை. "அறச்செட்டு முழுநஷ்டம்" என்பது அவர்களுடைய விருத்தாந்தம். நீரோட்டம் எவ்வளவு அதிகமோ அவ்வளவு அதின் ஊற்றும் அதிகமாயிருக்கும். "இறைத்த கிணறு ஊறும், இறையாத கிணறு நாறும்" என்ற முதுவுரைப்படி ஈகை எவ்வளவோ அவ்வளவு பாக்கியமும், ஈகையின்மை எவ்வளவோ அவ்வளவு நிர்ப்பாக்கியமும் உண்டு.

மேலும் நாம் ஒரு குழந்தையின் கையில் ஒருபொருளைக் கொடுத்துவிட்டு, விளையாட்டாக அதைத் திரும்பவும் கேட்கிறோம். அது சந்தோஷமாக அந்தப்பொருளை நமது கையில் தந்துவிடுமானால் நாம் அதையிட்டு எவ்வளவு சந்தோஷப்பட்டு அக்குழந்தையை வாரியணைத்து அன்போடு முத்தமிட்டு அது நமக்குத் தந்த பொருளையும் வேறு அதிகப்பொருளையும் அதற்குத் திரும்பக்கொடுக்கிறோமே. அப்படியே தேவனும் நம்மிடத்தில் கொஞ்சம் வெள்ளியை அல்லது பொன்னைத் தந்துவிட்டு அதில் ஒரு பாகத்தைத் திரும்பக் கேட்கிறார். ஒன்றை கொடுத்தால் ஒன்பதைத் திரும்பக்கொடுக்கிற ஒப்பற்ற கிருபையுள்ள தேவனுக்கு அவர் கொடுத்ததைத் திரும்பக்கொடாமல் வைத்துக்கொள்ளுவது பாதகமல்லவா?



தாலந்துகளைக்குறித்த உவமையை வாசித்திருக்கிறோமே! ஒரு தாலந்தைப்பெற்றவன் தன் எஜமான் சித்தப்படி அதை உபயோகித்து விருத்தி செய்யாததினால் தண்டனைக்குள்ளானதும் தவிர அவன் கையில் கொடுக்கப்பட்டிருந்த அந்தத் தாலந்தும் திரும்ப வாங்கப்பட்டு எஜமான் சித்தப்படி பத்துத தாலந்தை உபயோகித்து விருத்திசெய்த ஊழியனுக்குக் கொடுக்கப்பட்டதல்லவா?

சிநேகிதனே! கர்த்தர் உனக்குக்கொடுத்த உலகப்பொருளாகிய தாலந்தை அவர் சித்தப்படி எவ்வளவு விருத்திசெய்திருக்கிறாய்? அவருக்கு நீ கணக்கு கொடுக்கவேண்டியதுண்டு. அப்போது உன் கையில் ஒப்புவிக்கப்பட்ட பொருளில் நீ கர்த்தருடைய நாமத்தினிமித்தம் [illegible] பிரயோஜனத்துக்கும் கொடுத்த அளவையும் தன்மையையும் குறித்துக் கணக்குக் கொடுக்கவேண்டியதிருக்குமென்பதை மறந்துவிடாதே.

அன்றியும் கிறிஸ்தவர்கள் பட்டாடை தரிப்பதாலும், பட்டுரவுக்கை போடுவதாலும், அலங்காரமான ஆபரணங்கள் அணிவதாலும், கிறிஸ்துவின் ராஜ்யமாகிய சபை செல்வாக்கடையவும் அரசாளவும் விரும்புகிறவர்களுக்கு எச்சரிப்பாக அல்லவோ பவுல் அப்போஸ்தலன், "இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறீர்களே, இப்பொழுது ஐசுவரியவான்களாயிருக்கிறீர்களே, எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே; நீங்கள் ஆளுகிறவர்களானால் நலமாயிருக்கும், அப்பொழுது உங்களுடனேகூட நாங்களும் ஆளுவோமே." "நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர், நீங்கள் கிறிஸ்துவில் புத்திசாலிகள்; நாங்கள் பலவீனர், நீங்கள் பலவான்கள்; நீங்கள் கனவான்கள், நாங்கள் கனவீனர். இந்நேரம்வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம்" என்று கொரிந்து சபைக்கு எழுதுகையில் சொல்லுகிறார். 1 கொரி. 4. 8-13.

கொரிந்தியர் தன்னம்பிக்கையும், பொருளாசையும், பெருமையும், வீம்புக்காரருமாகி சிலுவையிலறையுண்ட கிறிஸ்துவோடு தங்களை இணைத்துக்கொள்ளத்தக்குரிய ஒரு விசேஷித்த இலட்சணமாகிய சுயவெறுப்பையிழந்து, உலக இச்சைகளால் இழுப்புண்டு, உலக ஜீவியத்தில் மதிப்பும் செல்வாக்குமுடையவர்களுமாயிருக்க விரும்பினார்கள். ஆனால் அப்போஸ்தலர் கிறிஸ்துவின் சிந்தையுள்ளவர்களும் அவருடைய ஆவியினால் நடத்தப்பட்டவர்களுமாயிருந்தபடியால் இந்த அதிகாரத்தில் அவ்விருபட்சத்தாருடைய ஒன்றுக்கொன்று மாறான நிலைமை எடுத்துக் காட்டப்படுகிறது. உலக விஷயமாய் இச்சபையில் காணப்பட்ட தேர்ச்சியும், செல்வாக்கும் வெளிப்படுத்தல் 3. 14. முதல்

ஆவியானவர் லவோதிக்கேயாச் சபைக்குச் சொல்லுவதில் காட்டும் நிலைமைக்குள் அதை உட்படுத்துகிறது. அவர் உண்மையும் சத்தியமுமுள்ள சாக்ஷியாக "நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத் தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல் நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லை" யென்றும் சொல்லுகிறாய் என்கிறார். ஏனென்றால் அது தன் ஆவிக்குரிய குறைவை உணராமல் உலக வாழ்விலும், செல்வாக்கிலும் நாளுக்கு நாள் வளர்ந்து தன் ஆண்டவரைவிட்டுப் பின்வாங்கிப்போனது. அவர் தமது ஆலயமாகிய சபையில் வீற்றிருந்து கிரியை செய்ய இடமில்லாமல் வெளியே தள்ளப்பட்டு, வாசலில் நின்று தட்டிக்கொண்டிருக்கிறார். இக்காலத்துச் சபைகள் இப்படிப்பட்ட நிலைமையிலில்லையா? சடுதியான நியாயத்தீர்ப்பு அடையப்போகிறதும், வேசியின் ஆடை ஆபரணம் தரித்ததுமான பொய்ச்சபையின் இலட்சணத்தை வெளி. 18-ல் வாசித்துப்பார். தேவனுடைய வலது பாரிசத்திலிருக்கும் புறக்கணிக்கப்பட்ட தன் ஆண்டவருக்கென்று நியமிக்கப்பட்ட கற்புள்ள கன்னிகைபோல உலக ஆசாபாசங்களில் சிக்காமல் சுயவெறுப்போடு ஜீவிக்கவும் தன் மணவாளனுடைய வருகைக்கு ஆவலுடன் எதிர்பார்த்திருக்கவும் வேண்டிய சபை, உலகமேன்மையும் செல்வாக்கும் அடைய விரும்பி, உலக அதிகாரங்களோடு கையோடு கைகோர்த்து, ராஜ்யத்தின் நியாயமான சுதந்தரவாளியாகிய தன் ஆண்டவரின்றி தன் முப்பாய் ஆளுகைசெய்து "நான் ராஜஸ்திரீயாய் வீற்றிருக்கிறேன், நான் கைம்பெண்ணல்ல, நான் துக்கத்தைக் காண்பதில்லை" என்று செருக்கடைந்திருப்பது எவ்வளவு நிர்ப்பாக்கியம்.

"நாம் அவரோடேகூட மரித்தோமானால் அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்; அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலித்தால் அவரும் நம்மை மறுதலிப்பார்" (2 தீமோ. 2. 11, 12.) என்ற தேவ ஆவியானவரின் தெளிவான எச்சரிப்பை மறந்து, கர்த்தருடைய வருகையில் நாம் அவரிடம் சேர்த்துக்கொள்ளப்பட்டு, பின்பு அவரோடுகூட அரசாளுவோம் என்கிற நம்பிக்கை அற்றுப்போனபடியால் கிறிஸ்துவினிமித்தம் இவ்வுலகில் பாடுகளைச் சகிக்கவேண்டியவர்கள் மேன்மையடையவும், துன்பமடையவேண்டியவர்கள் இன்பமடையவும், தாழ்த்தப்படவேண்டியவர்கள் புகழப்படவும், தாராளமாய்க் கொடுக்கவேண்டியவர்கள் பிசுனித்தனம் பண்ணவும், உள்ளான அலங்கரிப்பு வேண்டியவர்கள் வெளியான அலங்கரிப்புச் செய்யவும், காலத்திற்குமுன்னே ஆளுகைசெய்யவும் விரும்புகிறார்கள்.



அப்படியிருக்க தேவ ஊழியர் பிரசங்க பீடத்திலேறி, மினுக்கான உடையும் அலங்காரமான ஆபரணமும் கிறிஸ்தவர்கள் தரிக்கலாகாதென்றும், உங்கள் சரீரத்திற்காகக் கவலைப்படாதேயுங்களென்றும் போதிப்ப[illegible] பிசகோ? தேவவசனங்கள் அப்படிப் பேசுகிறதில்லையா? "ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும் தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கேற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும்." (1 [illegible].) "ஏனென்றால் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (1 யோவா. 2. 16, 17.) என்று வேதம் சொல்லுவது பொய்யா? சிலர் எண்ணுகிறபடி அது சமர்த்தியப்போதகமாக இல்லாவிட்டாலும் சத்தியபோதகமாயிருக்கிறது. ஜீவனுள்ள கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்தின் வீண் ஆடம்பரங்களையும், மகிமையையும், அதைப் பற்றிய பொருளாசைகள் எல்லாவற்றையும், மாம்ச இச்சைகளையும் வெறுத்துவிடவேண்டுமென்று போதிப்பது, சபைகள் வீட்டெலிகளைப் போல ஏழைகளாயிருக்கவேண்டுமென்பதல்ல. அவர்கள் தங்கள் ஜீவிய கடமைகளையும், பொருளாகிய தாலந்து தங்கள் கையில் கொடுக்கப்பட்டிருப்பதின் நோக்கத்தையும் அறிந்து ஜீவிக்கவேண்டுமென்பதே. புதைத்து வைப்பதும், பொன் ஆபரணமாக்கி உடம்பிலிட்டு மினுக்குவதும் அத்தாலந்து கொடுக்கப்பட்ட நோக்கமல்ல. ஆபரணம் பிசாசு தன் கட்கத்தை கூர்மையாக்குகிற சாணைக்கல். அதினாலே [illegible], ஜீவியத்தையும் சாட்சியையும் இழந்தவர்கள் அநேகர். வாழ்வும் வாழ்நாளும் நிலையற்றது. போகும்போது பொருளும் போகமும் கூடவாராது. ஆகையால் உன் தாலந்தை விருத்திசெய்ய ஜாக்கிரதையாயிரு. ஒருவேளை ஒரு தாலந்தை வாங்கின ஊழியன் நம்மில் அநேகரைப்போல எனக்குக் கொடுக்கப்பட்டது கொஞ்சம், பிறர் பிரயோஜனத்திற்கு உபயோகப்படுத்த அது போதுமானதல்ல என்று சொல்லலாம். ஆனாலும் அவன் கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்து எஜமான் சித்தத்தை நிறைவேற்றினால் எஜமான் அநேகத்தை அவன் கையில் ஒப்புவிக்கக்கூடுமே. கொஞ்சப் பொருளில் உண்மையில்லாதவனிடத்தில் அதிகப்பொருள் ஒப்புவிக்கப்படுவதெப்படி?

சிலிசியா நாட்டின் எல்லையில் பெர்ன்ஸ் தொர்ப் என்னொரு கிராமம் உண்டு. அதில் தெய்வபக்தியுள்ள உபாத்தியாயர் ஒருவர் [illegible]ந்தார். அவர் பெயர் பிரீத்பெல்ந். அவர் ஒரு ஞாயிற்றுக்கிழமை [illegible]லையில் ஆராதனைக்குப்போகுமுன் தான் மூன்றுமாசம் வேலை[illegible]து வாங்கின சம்பளப்பணத்தை எடுத்து எண்ணினார். அது முப்பது ரூபாய். அவர் அதைப் பார்த்து பெருமூச்சுவிட்டு நான் உபாத்தி வேலைசெய்து பெருநாளாகியும் என் சம்பளம் அதிகப்படவில்லையே, அதிகப்படும் நம்பிக்கையுமில்லையே. அகவிலை குறைந்த இக்காலத்தில் இந்தச் சம்பளம் ஆறுமாசத்துக்குக் கூடப்போதாதே. நாற்பது வருஷமாய் நான் பட்ட பாடுகளுக்கு இன்னும் விமோசனமில்லையே என்று சொல்லிக்கொண்டு விசாரத்துக்குள்ளானார். அப்போது அவர் வளர்த்த ஒரு குருவி:

"உன் கவலைகளுக்கு இன்றே விடைகொடு
இனி விசாரத்துக்கு இடங்கொடாதிரு
நீ ஆளும் தேவனல்ல, நீ பூச்சி என்றறி
சர்வத்திற்கும் வல்ல கர்த்தர் [illegible]பிதா,"

என்று இனிமையாய்ப்பாடி[illegible]. அதைக் கேட்டதும் அவர் திடுக்கிட்டு, என் அருமை பட்சியே, நீ நன்றாய்ப் பாடினாய். நான் என் பலவீனத்திற்காக வெட்கப்படுகிறேன். என்னை நாற்பது வருஷமாய்ப் பராமரித்து வந்த என் பரமதகப்பன் [illegible] மீதியான காலத்தில் என்னைப் பராமரியாமல் விடுவாரா? நீ கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்கிற எல்லாரிலும் கடைசியானவனாயிருந்தும் உனக்கும் கடைசி நாளில் பலனளிப்பாரல்லவா. ஒருநாளும் பட்டினியாய்க்கிடந்திராத மனிதனே! நீ உன் முதிர்வயதில் முறுமுறுப்பது சரியா? [illegible] உபாத்தியே உன் பரமபிதாவுக்கு நன்றியறிந்த துதிசெலுத்தவேண்டிய கர்த்தருடைய நாளில் நீ முறுமுறுக்கலாமா? கர்த்தர் எல்லாவற்றையும் தம்முடைய சித்தத்தின்படி சீர்திருத்துவார். என் சம்பளத்தைக் கூடியமட்டும் நியாயமாய்ச் செலவிடுவேன். இருக்கிறது முப்பது ரூபாய். இதை என்ன பண்ணலாம்? என் பாதரட்சை கிழிந்துபோயிற்று. புதிது வாங்க நாலரை ரூபாய், மேற்சோடு தைப்பதற்கு [illegible] ரூபாய், தொண்ணூறு நாளைக்குச் சாப்பாட்டுச்செலவு பதினைந்து ரூபாய், அடு[illegible]டுக் கிழங்குக்காரனுக்கு நான் கொடுக்கவேண்டியது ஐந்துரூபாய், வீட்டுக் குடிக்கூலிக்கு இரண்டு ரூபாய், இது போக மீதம் இரண்டு ரூபாய் தான். இதை யாருக்குக்கொடுப்பேன், விருத்தாப்பியத்தாலும், வியாதியினாலும் வருந்துகிற உ[illegible]லாளுக்கு ஒரு ரூபாயாவது கொடுக்கவேண்டாமா? போன வெள்ளிக்கிழமையில் கால் ஒடிந்துபோய்க்கிடக்கிற[illegible]ந்த ஏழை மனிதனுக்கும், நெடுநாள் சுரங்கண்டு சோற்றுக்கில்லாமலிருக்கிற உல்லியத்திற்கும், ஏழை ஸ்மித்துக்கும், தாய் தகப்பனற்றுத் தவிக்கிற டாபி என்கிற பையனுக்கும், புருஷனிழந்து மூன்று பிள்ளைகளைத் தூக்கிக்கொண்டு அவஸ்தைப்படுகிற அந்த விதவைக்கும் ஆளுக்கொருரூபாயாவது கொடுக்கவேண்டாமா? நான் எங்கே போவேன் என்று மெத்த வியாகுலப்பட்டார். இப்படியே இன்னின்னாருக்குக் கொடுக்கவேண்டுமென்று திரும்பத்திரும்பச் சொல்லிக் கணக்குப் பார்த்தபின் ஒரு கடுதாசியை எடுத்து ஏழு துண்டாகக்கிழித்து, ஒவ்வொன்றிலும் ஒரு ரூபாய் வைத்து மடித்து அதின்பேரில் ஒவ்வொரு பேரை எழுதிப் பிறகு ஜன்னல் புறமாய்ப்போய், பரமதகப்பனே நான் கொடுக்கும் இந்தக் காசுகளை ஆசீர்வதியும்; உமது விருத்தாப்பிய ஊழியனாகிய அடியான் வருகிற மூன்று மாசங்களிலும் குறைவில்லாமல் நடத்தத் [illegible]புரியுமென்று மெதுவாய் ஜெபம் பண்ணினார். பிறகு ஆராதனை நேரமாகிறதைக் கண்டு மனமகிழ்ச்சியோடும், முகமலர்ச்சியோடும் கோவிலுக்குப்போனார். கோவில் மணி அடித்தது. அச்சிறு கிராமத்தார் தங்கள் பிள்ளைக்குட்டிகளோடு கோவிலில் வந்து கூடினார்கள். உபாத்தியாயர் பின்னரத்தண்டை உட்கார்ந்[illegible] ஆனந்தத்தோடு ஒரு இனிய இராகத்தை வாசித்துப்பாடினார். அவர் பாடும்போது அவருடைய பாடசாலைப்பிள்ளைகளும் சபையாரும் ஏகோபித்து பரமானந்தத்தில் ஆழ்ந்தவர்களாய்ப் பாடினார்கள். அவர்கள் பாடி உட்காரும்பொழுது, ஒருவர், வெகு கீர்த்தி, வெகு கீர்த்தி என்று தம்மை அறியாமலே சற்று உறக்கச்சொல்லிவிட்டார். அவர் அன்றைக்குத்தான் அங்கே வந்த ஒரு அந்நிய ஊரார். இதற்குப் பின் பிரசங்கம் நடந்து ஆராதனையும் முடிந்தது. உபாத்தியாயர் சமீபத்திலிருந்த பள்ளிக்கூடத்திற்குப்போனார். அரைமணி நேரத்திற்குள் அநேகம் பிள்ளைகள் அங்கு வந்து கூடினார்கள். கோவிலுக்கு வந்திருந்த அந்தப் புது மனிதனும் அங்கு வந்து உபாத்தியாயரைப்பார்த்து, ஐயா! ஞாயிற்றுக்கிழமைகூடவா பள்ளிக்கூடம் வைக்கிறீர்? என்று கேட்க, உபாத்தியாயர் ஒரே ஒரு மணி நேரம் தான் என்றார். அது உமக்குக் கொடுக்கப்பட்ட வேலையோவென்க, உபாத்தியாயர் ஆம் என்றும் சொல்லலாம், அல்ல என்றும் சொல்லலாம். இது என் எஜமான்களால் எனக்குக் கொடுக்கப்பட்ட வேலையல்ல. என் மனச்சாட்சி எனக்குக் கொடுத்த வேலை. பிள்ளைகளின் ஆத்தும நன்மையை நான் தேடவேண்டியவனுச்சே; மனச்சாட்சியோடு வேலைசெய்கிறவனெவனும் நான் செய்யவேண்டியதற்கு மிஞ்சிச் செய்தேனென்று சொல்ல முடியாது என்றார். அதைக்கேட்ட அந்நியன், நீர் படிப்பிப்பதைப் பார்க்க எனக்கு அதி

கப் பிரியம். நான் உமது வேலைக்கு இடையூறு செய்யாமல் அதோ அந்த மூலையில் உட்கார்ந்திருக்கிறேன் என்று சொல்லி, பிள்ளைகளுக்குப் பின்னாலே போய் உட்கார்ந்திருந்தார். உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு வேதபாடம் படிப்பித்து முடிந்த பிறகு மூலையில் உட்கார்ந்திருந்த புதிய மனிதன் உபாத்தியாயரோடு பேசச் சமீபிக்கும்போது கதவண்டை வெகுபேர் வந்து தட்டுகிற சத்தம் கேட்டது. சற்றுநேரத்திற்குள்ளாக காலொடிந்தவர்களும், கையொடிந்தவர்களும், கூனரும், குருடரும், ஏழைகளுமாகிய அநேகர் சத்தம்பண்ணிக்கொண்டு வீட்டில் புகுந்து உபாத்தியாயரை வாழ்த்தத் துவக்கினார்கள். அவரோ அவர்களை அமர்த்தி, கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக, ஒன்றும் பேசாமல் அமைதியாய் உட்கார்ந்திருங்கள்; நீங்கள் ஏதாவதும் பேசினால் எனக்குக் கோபம் வருமென்று சொன்னார். புதிய அந்நியர் இந்தக் காட்சியைக் கண்டு வியப்புற்று, ஐயா உபாத்தியாயரே! இந்த ஜனங்கள் இங்கே வந்த முகாந்தரம் தெரியவில்லை, அதை விசாரிக்க எனக்கு உத்தரவு கொடும் என்று சொல்லி, அந்த ஜனங்களைப்பார்த்து, நீங்கள் உங்கள் உபாத்தியாயர்பேரில் இத்தனை வாஞ்சையாயிருப்பது என்ன என்று கேட்க: இருதயத்தின் நிறைவினால் வாய் பேசுமென்றபடி நாற்பது வருஷமாய் உபாத்தியாயர் செய்த ஊழியத்தின் உண்மையையும், தன் சுகத்தையும் பாராமல் ஏழைகளுக்கும் திக்கற்றவர்களுக்கும் தன் சொற்ப சம்பளத்திலிருந்து உதவிசெய்துவருவதையும் அவரால் எவ்வளவு ஆறுதலையும் சகாயத்தையும் பெற்றார்களென்பதையும் ஒருவர் மாற்றி ஒருவர் சொல்லத்துவக்கினார்கள். உபாத்தியாயரோ இந்தப் புகழ்ச்சியான வார்த்தைகளைக் கேட்கக்கேட்க வெட்கப்பட்டு தோட்டத்திற்குள் ஓடிப்போனார். இவைகளைக்கேட்ட அந்நிய மனிதர், அவர் பின்னால் ஓடி, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரா, நீர் கொஞ்சத்திலே உண்மையாயிருந்தீர்; நீர் அநேகத்தின்மேல் அதிகாரியாயிருப்பீர். இன்று கர்த்தர் என்னை ஒரு விசேஷித்த நோக்கத்தோடு இங்கு அனுப்பினார். அவர் தமது வாக்குத்தத்தத்தை சீக்கிரம் நிறைவேற்றப்போகிறார். நீர் அநேககாலமாய்ப் பொறுமையோடு மறைவில் நல்ல விதையை விதைத்துவந்தீர். அதின் பலனை இம்மையிலேயும் கர்த்தர் உமக்குக் கொடுக்கப்போகிறார். அதைச் சீக்கிரமாய் அறிவீர் என்று சொன்னார். அதைக்கேட்டு மலைத்துப்போய் நின்ற உபாத்தியாயர் தன்னோடு பேசினவர் யார், எவர் என்று விசாரிக்குமுன் அவர் மறைந்துபோய் விட்டார். இதற்குப்பின் ஒருவாரத்துக்குமேல் ஆகிவிட்டது. பழைய சப்பாத்தும், பழைய மேற்சோடும் மாறவில்லை. அவர் இந்த நிலைமையில் ஒருநாள் பள்ளிக்கூடத்திற்குப்போகப் புறப்படுகையில் இராஜ தபால்காரனொருவன் குதிரையின்மேலேறி உபாத்தியாயர் வீட்டுக்கு வந்து அவர்பேருக்கு மேல்விலாசம்போட்ட ஒரு கடிதக்கட்டைக்கொடுத்தான். அதில் "பெர்ன்ஸ்தொர்ப்பு கிராமத்தில் உபாத்தியாயராயிருந்த பிரீத்பெல்து துரைக்கு" என்று மேல்விலாசம் போட்டிருந்தது. அவர் அதை வாசித்து, "இது எனக்குத்தான்," ஆனால் "இருக்கிற" என்று போடாமல் "இருந்த" என்று போட்டிருப்பதேன்? நான் கிழவனாய்ப்போனேனென்று என்னை வேலையைவிட்டு நீக்கினார்களோ? கர்த்தருடைய சித்தத்தின்படி ஆகட்டும் என்று முத்திரையை உடைத்தார். உள்ளே மூன்று கடிதமிருந்தது. அதில் முந்தினதை எடுத்துப் பிரித்தவுடனே உபாத்தியாயர் முகம் வெளுத்துக் கால்தளர்ந்து நாற்காலியில் சாய்ந்து, ஐயோ நினைத்தது சரியாய்ப் போய்விட்டது. நான் விதைத்ததும், இஷ்டமான தோட்டத்திலிருந்து என்னைத் தள்ளி என் வேலைக்கு நீங்கலாக்கினீர்களோ? என்று சொல்லிக் கண்ணீர் விட்டார். அவருடைய குருவியோ "உன் கவலைகளுக்கு இன்றே முடிவுகொடு, இனி விசாரத்துக்கு இடங்கொடாதிரு, நீ ஆளும் தேவனல்ல, நீ பூச்சி என்றறி, சர்வத்திற்கும் வல்ல கர்த்தர் அதிபதி" என்று பாடிற்று. அப்பொழுது உபாத்தியாயர், சரியாய்ச் சொன்னாய் என் அருமைக் குருவியே! ஆகிலும் என் மனம் வேதனைப்படுகிறது. என் தேவனாகிய கர்த்தாவே நீர் உம்முடைய ஊழியக்காரன்பேரில் இத்தனை பெரிய பாரத்தைச் சுமத்தினது என்ன என்றார். அந்நேரத்தில், இதென்ன! முறுமுறுப்பா, வெட்கமா என்று ஒரு சத்தங்கேட்டது. உபாத்தியாயர் நிமிர்ந்து பார்த்து, சிலநாட்களுக்கு முன் கோவிலுக்கு வந்திருந்த அந்த அந்நிய மனிதனைக்கண்டார். அவர்தான் இப்படிச் சொன்னவர். பின்னும் அவர் உபாத்தியாயரைப்பார்த்து, இன்னமும் வாசித்துப்பாரும். கேட்கிற கர்த்தர் கொடுக்க வல்லவர் என்றார். அப்படியே உபாத்தியாயர் மறுகடிதத்தையும் வாசித்து இதென்ன! இதென்ன! நான் அத்தியட்சாலயத்துப் பிரதான கின்னரக்காரனா! சம்பளம் நானூறு ரூபாயா! பரலோக வாத்தியத்திற்கு ஒப்பான அந்தக் கின்னரத்தில் என் விரல்களை வைக்க நான் எம்மாத்திரம் என்றார். அப்போது அந்த மனிதன், மெய்யாகவே நீர் அந்தக் கின்னரத்தை வாசிக்கவேண்டும். இன்னமும் ஒரு கடிதமிருக்கிறதே அதைப் படித்துப்பாரும் என்றார். உபாத்தியாயர் கை நடுக்கத்தோடு அந்தக் கடிதத்தையும் பிரித்து வாசித்தார். வாசிக்க, வாசிக்க அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் புறப்பட்டது. அவர், பிதாவே! அபாத்திர பாவியாகிய எனக்கு இது மட்டுக்கு மிஞ்சின கிருபை. கிராமபள்ளிக்கூடத்து உபாத்தியாயிருந்த எனக்கு இராஜதானியில் வருஷவாரி எண்ணூறு ரூபாய் சம்பளமுள்ள விசாரணை உபாத்திவேலையா? என்னே! இது சொப்பனம்போலத்தோன்றுது

என்று சொன்னார். அதற்கு அந்தப் புதுத் துரை, சொற்பனமல்ல
ஐயா! இது எல்லாம் நிசமே. இது ஆலோசனைச் சங்கத்தால் உறுதி
பண்ணப்பட்ட ஏற்பாடு. உமக்குச் சந்தேகம் ஒன்றும் வேண்டாம்,
நீர் சந்தோஷமாயிரும். நீர் கர்த்தருடைய மகிமைக்கு அதிகமாய் உழை
க்கும் ஏதுவையும் இடத்தையும் அவர் உமக்குக் கொடுத்தார் என்றார்.
இதற்காக உபாத்தியாயர் கர்த்தரை ஸ்தோத்தரித்து, பின்பு ஐயா! நான்
இத்தனை மேன்மையடையத்தக்கவனானது எப்படி என்றார், அதற்கு
அவர் மத்தேயு 25. 14 முதல் 30 வரை எழுதியிருக்கும் உவமையை
நினைத்துக்கொள்ளும். "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழி
யக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல்
உன்னை அதிகாரியாகவைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்
குள் பிரவேசி" என்றார்.

உபாத்தியாயர் அ[illegible]ம், தாங்கள் யார் ஐயா என்று கேட்க,
அவர், நான் தேடின பொருளைக் கண்டடையுமட்டும் கர்த்தரால் நடத்
தப்பட்ட ஊழியன்; நான் ராஜதானியிலிருக்கும் வைலெர்த்து அத்தி
யட்சர் என்றார்.

சிநேகிதனே! தேவனுடைய அதிசய நடத்துதலைப் பார்த்தாயா?
அவர் கொஞ்சத்தில் உண்மையாயிருந்தவனுக்கு அதிகப் பொருளைக்
கொடுக்கிறார். இது பாக்கியமல்லவா? உனக்குக் கொஞ்சம் கொடுக்
கப்பட்டிருக்கும்போது, எனக்கு இல்லை, நான் தானதர்மம் செய்ய
முடியாது என்கிறாய். இந்த உபாத்தியாயரோ, தனக்குக் கொஞ்சம்
கொடுக்கப்பட்டிருக்கும்போது தனக்குக் கர்த்தருடைய ஆசீர்வாத
முண்டென்று நம்பிக்கொடுத்தார். "உள்ளவன் எவனுக்கும் கொடுக்
கப்படும், இல்லாதவனுக்கு உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்" என்ற
தேவவாக்கின்படி ஈகையுள்ள அவருக்குக் கொடுக்கப்பட்டது. மன
மும் ஈகையுமில்லாத உனக்கோ உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்
என்பதைச் சிந்தித்துக்கொள். கிறிஸ்தவர்கள் ஏழைகளுக்கும் தேவ
ஊழியருக்கும் கொடுக்கவேண்டுமானால் தேவ ஊழியர் அவர்களுடைய
உற்சாக ஈவைப் பெற்றுக்கொண்டு, தம்பொழிவோடு ஈகையற்றிருக்க
வேண்டுமென்றல்ல. பூர்வத்தில் தேவ ஊழியரான லேவியர் ஒரு
இஸ்ரவேலன் தன் களத்தின் வாரத்திலும், ஆலையின் வாரத்திலுமிருந்து
தசமபாகம் கொடுப்பதுபோல தங்களுடைய சுதந்தரமும் சம்பளமுமா
கிய தசமபாகத்திலிருந்து பிரதான ஆசாரியனுக்குக் கொடுக்கும்படி
கற்பிக்கப்பட்டிருந்தார்கள். (எண். 18. 30.) அப்போஸ்தலனாகிய
பவுல் தேவ ஊழியத்தில் [illegible]ப்போடு உண்மையாய் வேலை செய்
ததையும், கிறிஸ்தவர்களி[illegible]ல் தன் சரீர சம்ரக்ஷணைக்குப் பொருள்



பெற்றுக்கொள்ள சகல சுதந்தரமுடையவராயிருந்தும் அவர்களிடத்
தில் அதை எதிர் பார்க்காமல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் செல
வில்லாமல் ஸ்தாபிப்பதே தனக்குப் பலன் என்று எண்ணி மற்றவர்களு
க்கு உதவிசெய்து, வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுப்பதே பா
க்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்க
வேண்டுமென்று எல்லாவிதத்திலும் முன்மாதிரி காட்டினார். இதைத்
தேவ ஊழியர் யாவரும் பின்பற்றுவது பாக்கியமே.

[illegible]யால் பரோபகாரி இம்மையிலும் மறுமையிலும் பாக்கியவா
னாயிருப்பான் என்பதற்குச் சந்தேகமில்லை. "போதுமென்கிற மனது
டனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்
றும் கொண்டுவந்ததுமில்லை; இதிலிருந்து ஒன்றும் கொண்டுபோவது
மில்லை என்பது நிச்சயம். உண்ணவும், உடுக்கவும் நமக்கு உண்டா
யிருந்தால் அதுவே போதுமென்றிருக்கக்கடவோம். ஐசுவரியவான்க
ளாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக்
கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித
இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும்
வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தைவிட்டு வழுவி
அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்தியிருக்கிறார்கள். ஆகை
யால் இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தை
யுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கைவை
யாமலும் நாம் அநுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச்
சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கைவைக்க
வும், நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தா
ராளமாய்க் கொடுக்கிறவர்களும் உதாரகுணமுள்ளவர்களாயிருக்கவும்,
நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படி வருங்காலத்திற்காக தங்க
ளுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும், கிறிஸ்துவின்
கிருபையை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். (I தீமோ. 6:
6, 10, 17-19)

கிருபையில் ஐசுவரியமுள்ளவரும் சகல சம்பூரணத்தினாலும்
நம்மை நிரப்பவல்லவருமாகிய அவருக்கே மகிமையும், கனமும், துதி
யும், ஸ்தோத்திரமும் உண்டாவதாக.

(முற்றிற்று.)

PRINTED AT THE M. E. PUBLISHING HOUSE, MADRAS.

293

Checked
By 29.1.78